

உ

சிவமயம்.

மார்க்கண்டேயர்விலாசம்

இயலிசைநாடகத்திற்சிறந்த

வல்லூர்

வேங்கடராமவுபாத்தியாயரவர்கள்

முதலிய சிலர்கள் பாடியது

இஃது

புராணநடைக்கிசையும்படியாகப்

பலபிரதிகளைக்கொண்டு

மயிலம்

சுப்பிரமண்ணியஸ்வாமிகளால்

பார்வையிடப்பட்டு

ரூ ஊ.

வெங்கடாசலமுதலியார் - குமாரர்.

முனிசாமிமுதலியாரவர்களது

மாதவவிலாச வச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதி௵ ஐப்பசி௴





உ

கடவுள் துணை

மார்க்கண்டேயர் விலாசத்தின்

கதையின் வரலாறு

———*-*)❁(*)-*———

அகவல்.

சீர்மலிந்தோங்கிச் செழிப்புற்றெங்கிலும்
பேர்பெற்றிடமிகப் பிரபலமான
சத்தியநகரந் தன்னையாண்டிடும்
அத்தனுமயமனும் அழகியகொலுவில்
இருந்திடுங்காலையி லிந்திராசனும்
அருந்தவவசிஷ்டரும் அழகியவியாசரும்
விசுவாமித்திரரும் வியாழரவந்தபின்
பசுபதிதன்னைப் பணிந்திடுந்தூயோன்
மிருகண்டமுனியும் விருப்பமாய்வந்தார்
அக்காலையிலே யச்சபையுள்ளோர்

தற்காலகதியைச் சாற்றிடும்வியாசரைப்
பார்த்துமேஐயா பாலனில்லார்க்கு
ஏர்த்திடக்கதியும் இல்லையோயுண்டோ
சொல்லுவீரென்னச் சுதனிலாதவர்க்கு
இல்லைநற்கதியும் மென்றியம்பிடவே
கேட்டும்ருகண்டர் கிலேசத்தைக்கொண்டு
வாட்டமாயெழுந்து வரும்வழியினிலே
சோலையைக்கண்டு சோகமாயிருக்க
வேலைசெய்சிஷரும் விடாய்த்தனித்திடவே
அவருக்குபசாரம் அன்புறச்செய்கையில்
தவறில்ஞானச சகிராலைக்காண்க
சத்தரிஷிதேவிமார் சலுதியில்வந்து
அம்மனை போனறே அழைத்திடசசதிரான்
செம்மையாய்வந்து சேரவேபந்தை
யாடுவோம்வாவென் றழைத்திடக்கூடி
யாடியேகளைத்த அம்மாதர்க்குச்
சலந்தாரேறுண்டு சரீரவிடாயை
கலந்துடன்றணிப்பீர் கங்கைகளெனவே
சுதனுண்டோவுனக்குச் சொல்லுவாயென்ன
விதனமாயிலையென் விளம்பினளவரும்
பாவிபாவியென்று பாராமலவர்கள்
கூவியேபோனபின் கோலமாமணியும்
கலைதெளிந்தெழுந்து கர்த்தனைநினைந்து
உளமிகவாடியே யுயர்மனைவந்து
ஞானச்சதிரானை நன்றுயழைத்தான்
போனதுநடந்ததும் புத்திரனில்லார்க்குக்
கதியில்லையென்று கங்கைவேதவியாசர்
விதிமுறைசொன்னதும் விளம்பவுமாது
தன்னிடமாதர் சார்ந்ததும்பந்தை
யுன்னிதமாகவே யுவந்தாடியதையும்
தாகநீரருந்தத் தானசொன்னதையும்
மாகமார்மின்னார் மைந்தனுண்டோ
உரையெனக்கேட்ட உளவையுங்கண்டு
காவுடனிலையெனக் கழறினளவரும்
திட்டியேபோனார் சிவசிவவென்றே
கெட்டியாய்காதை கிட்டியேவாடி.

யிருக்கிறகாலேயி லினியையாய்நீரும்
உருக்கமாய்வந்து உரைத்திடீரிரண்டு
சரிப்பட்டதேயிங் சங்கைக்கென்னசெய்வோம்
முநமுளமுனியே செப்புவீரெனக்கு
என்னவேமுனியும் ஈசனைநோக்கித்
துன்னியதபத்தைத் துலக்கமாய்ச்செய்தால்
வள்ளலாபுத்திர வரமதுதருவார்
கள்ளிருட்குழலே ஞானச்சதிராளே
வந்திடுவாயென் மகிழ்வுடனிருவருஞ்
சந்திரசேகரனைத் தவுத்தியனுசெய்து
பதினாறுவயதுள்ளப் பாலனைப்பெற்றெடுத்து
குதலைசொற்கேட்டு கூப்பிட்டழைத்து
முத்தமிட்டு முதிரைந்தாம்வயதில்
வித்தையையோதி வேடிக்கைபார்த்து
மனதுமகிழ்ந்து மார்முனியிருக்க
புனிதரேமுனைக்குப் போதமார்வித்தைகள்
எல்லாங்கற்பித்து மென்னதானுகும்
கல்லாலன்று கற்றியேவயதும்
ஆருதேசரியாய் ஐயையோமனமும்
வேகுதேசிவனை வினவாதுவந்தோமே
தனையனும்வேண்டி தரையதுமெழுகி
அன்னமதுவுண்டு அருந்தவஞ்செய்து
பெற்றேனேமகனைப் பிர[illegible]சாகவுனக்கு
குற்றமேதேனுங் குறை[illegible]ளேதேனும்
செய்தேனோபெரியோ[illegible]க்கும்நோக
வைதனோவென்ன வ[illegible]தாவறியோன்
என்றுமேகலங்கி யெ[illegible]வாடி
நின்றுடுந்தாய்க்கும் நேயதந்தைக்கும்
வந்தனஞ்செய்து மனக்குறையாற்றி
எந்தையேதாயே யெனக்கொருகுறைவும்
வாராதுநீங்கள் மனமதுமகிழ்ந்து
சீராகயிருங்கள் சிவனிடமியானும்
பூசனைபுரியப் போய்வாரேனென்று
வாசமாமலர்கள் வண்மையைப்பறித்து
நந்திகண்டனுக்கு நடபூடன்கூடி
செங்கிருகரத்தைச் சென்னிமேற்கூப்பி

அரகராசிவசிவ அநாதியேபோற்றி
புரமெரிசெய்த புனிதனேபோற்றி
அடியேனையாளும் ஆண்டாவபோற்றி
படியிசையெனக்கண் பார்ப்பவாபோற்றி
என்றுமேபணிந்தங் கிருந்திடுங்காலையிற்
தென்றிசையாளுந் திறமிகுநமனும்
சித்திராபுத்திரனைச் சீக்கிரமழைத்து
பத்தியாய்க்கணக்கைப் பார்த்துசொல்லென்ன
தன்னைப்பார்த்து நாயகநமனே
இன்றுமார்க்கண்ட னெழுதினதோலை
முடிவென்றுசொல்ல மூர்க்கமாய்க்கையிற்
றடிகளைக்கொண்ட தடமுறுங்கால
தூதரைப்ப[illegible]ச் சுருக்கினிற்காலின்
நாதனைப்பூ[illegible] நாடி[illegible]சுதனை
கைப்பிடியாகக் கட்டிக்கொண்டிங்கு
இப்பவேவருவீ ரென்றிடத்தூதர்
சீக்கிரமாய்வந்து செல்வமார்க்கண்டனை
பார்க்கவும்பயந்து பலமொழியுரைத்து
மைந்தனேயுன்னை மறலியுமழைத்தார்
வந்திடுவென்னவாராதேயிலையென்
தொந்தரைசெய்கிறீர் சுவாமிக்குப்பூசை
விந்தையாய்செய்யும் வேளையித[illegible]க்கும்
ஆதலால்நீங்க ளப்புறமோடிப்
போதலேநன்றெனப் புகன்றெ[illegible]கண்ணின்
அக்கினிபொறியும் அதிகம[illegible]ய்வி[illegible]
திக்கவுந்தூதர் நெருங்க[illegible]ங்கூட
நோடியேநமன்பா லுரைத்தன[illegible]னும்
சாடுதேனென்று சடுதியிற்கிடாவி
லேறியேதூத ரிசஞ்சிட வந்து
நாரியேவனைத் தும்சமுஞ்செய்வேன்
பாரீரெந்தன் பாராக்கிரமிப்போ
வாரீர்தூதரே வவனையுமெமக்கு
காட்டுங்களவனைக் கட்டுறேன்சிவனை
ஓட்டுறேனென்றே யுறுமிக்கதும்பி
பாப்பாரப்பயலே பயமதில்லாமல்
தோப்பானைசொல்லித் தொடுக்கிறாயென்னடா

மார்க்கண்டேயர்விலாசம்

வாடாவென்றுமே வழைத்திடநமனைப்
போடாமூடா புத்திகெட்டவனே
ஐயனார்பூசையை யாறுமேநன்றாய்
செய்யுங்காலையிற் சிவபூசைவேளையிற்
கரடிவந்ததுபோற் கறேலெனவெதிரில்
திறங்கெட்டமூடா நிற்காமலோடிப்
போவதேநல்லது போகாமல்விட்டால்
சாவதேயுனக்குச் சார்ந்திடும்வேறே
சண்டனுமெந்தன் சங்கார்த்தவால்
உண்டுபண்ணிடவே னுண்மையாய்ச்சொன்னேன்
என்றிடும்போது ஈசனறிந்து
குண்டோதரனைக் கூப்பிட்டுநீயும்
சண்டனோடெதிர்த்து சண்டைகள்செய்து
வென்றுமேநமது மெய்யன்மார்க்கண்டனை
இன்றுமேகாப்பா யென்றனுப்பவும்
சூரனெனவந்து சண்டனையெதிர்த்து
ஓரோமொழிகேளா யுண்மையாயிப்போ
மைந்தனைப்பிடிக்க வாகாதுன்னாலே
சுந்தரசிவனை தோத்திரஞ்செய்யும்
காலமாதலினாற் காலனேநீயும்
சாலவனேயுனதூர் சார்ந்திடல்நன்றாம்
போவெனச்சொன்னான் பு[illegible]குண்டோதரனும்
ஆவெனவாயை அச்சண்ட[illegible]திறந்து
உன்னையுமிவனையு முனைய[illegible]விட்டவன்
தன்னையுமிப்போ சடுதியிற்கட்டுவேன்
பாராடாவென்று பாசமுவீச
ஆரடாவென்று ஆண்டவனெழுந்து
நடனஞ்செய்காலை நன்றாடனீட்டித்
திடமுடனுதைக்க திட்டனமறலியும்
பூமியில்விழவே பூமாதேவியும்
சாமியென்றுஞ்சலப்பட்டு
பாரம்பொறாமற் பரதவித்திருக்கும்
கோரத்தில்நாரதர் நேர்ந்துதேறுதலைச்
சொல்லிவைகுந்த சுவாமியைக்கண்டால்
மெல்லியேகாப்பார் விடைதாவெனவே
ஒப்பரனமின்மாதும் புவியளந்தோனைத்

தானுமேலினைத்தாள் சக்கரத்தோனும்
வந்துமேழாதை வாழ்த்தியுந்தேத்தியும்
புந்தியுமகிழ்வுறப் போதனைசெய்து
சிவன்பக்கல்நீயுஞ் செல்குவாய்நானும்
அவரிடம்வந்து அதற்குவேண்டியதோர்
யுத்தியைச்சொல்லி யுபாயமாயவனை
இத்தினந்தானே யெழுப்பலாமெனவே
மாதுமப்படியே வருகவுமற்றத்
தீதிலாத்தேவருஞ் சேர்ந்தங்குவந்து
மறலியையெழுப்பி வகைத்தனைச்சொல்லி
குறைவிலாப்புசை குறத்திடுமகிக
எழில்மார்க்க[illegible]ர்க்கென்றுபதினாறாய்
பழுதிலாவயதைப்பசுபதிகொடுக்கப்
பெற்றுமேசென்றார் பின்பங்கனமனும்
தன்றிசைக்கேகி ஞாயமாய்த்தான்றன்
அர்ச்சனைசிரா பாண்டிடுங்காலை
வரமதுபெற்று மரவுரிதரித்து
சடைமுடிபூண்டுதவலனஞ்சென்று
கடையூரானைக் கருத்தினிலெண்ணி
சிரஞ்சீவியானபேர் ஜெயமுடன்பெற்று
நிரந்தரம்வாழ்ந்த நிட்சயமான
மார்க்கண்டவிலாச மாமெனபதனை
தீர்க்கமாயச்சிற் றிருத்தியேபதித்[illegible]
தேசங்கள்தோறுஞ் சிலாமணியாக
கல்விச்சம்பத்துங் கடவுளருளும்
புத்திரசம்பத்தும் புரந்தரனைப்போல்
நித்தியமங்களமாய்நிரந்தரம்வாழியே

அகவல் - முற்றியது.



உ

கடவுள்துணை.

மார்க்கண்டேயர்விலாசம்

விநாயகர்தோத்திரம்-காப்பு.

வெண்பா-இராகம்-சங்கராபரணம்.

மாநிலமெல்லாம்போற்று மணிவயல்சூழ்திருக்கடையூ
ரானைநிதந்துதிசெய்யு நல்வேத-ஞானமுள்ள
மார்க்கண்டவிலாசமதை மகிழ்வுடனேபாடுதற்குக்
காக்கின்ற கஜமுகன்[illegible] காப்பு

சுப்பிரமணியர்தோத்திரம்-விருத்தம்-இ-ம்-தோடி.

செந்திருவாழுஞானச் செயல்மிருகண்டருக்கு
வந்துமார்க்கண்டனார்தன் மகிமையைவிலாசஞ்செய்ய
அந்தமாமயிலிலேறு மறுமுகவேலர்தம்மைச்
சிந்தையில்மகிழ்ச்சிகொண்டு திருவடிசரணஞ்செய்வாம்

சிவன்தோத்திரம்-இ-ம்-கும்பகாம்போதி.

சடைமுடிதரித்தஞானத் தபோதனர்போற்றுகின்ற
கடையூரிலமர்ந்தவெங்கள் காலகண்டனைத்துதித்து
இடரினையொழித்தநல்ல வெழில்பெறுமார்க்கண்டேயர்
நடைபெறுவிலாசஞ்சொல்ல நாதனைப்பணிகுவோமே

உ

மார்க்கண்டேயர்விலாசம்

விஷ்ணுதோத்திரம்-இ-ம்-பைரவி

அந்தமுமழகுமிக்க அறிவுடனேயுதித்த
விந்தைசேர்மார்க்கண்டேயர் விலாசத்தைக்கூறுதற்கு
சந்ததமென்னையாளுஞ் சங்குசக்கரக்கோதண்ட
வுந்திபூத்தோன்பதத்தை யொருமையாய்ப்பணிகுவோமே

உமையவள்தோத்திரம்-இ-ம்-தோடி

காட்சியாய்மிருகண்டையர் களிப்புடனீன்றெடுத்த
மாட்சியாய்ப்பூசைசெய்யு மார்க்கண்டர்விலாசந்தன்னை
சூட்சியாய்ப்பாடுதற்குச் சுந்தரிகௌரியஞ்ச
லாட்சிமீனாட்சிதன்னை யன்பொடுபணிகுவோமே

இலட்சுமிதோத்திர-இ-ம்-வசந்தபைரவி

சித்தமுந்தவத்தைச்செய்த சிலைபெறுமிருகண்டையர்
புத்திரனுகவந்த புகழ்பெறுமார்க்கண்டேயர்
சுத்தமாங்கதையைநாயேன் றுதியுடன்விலாசமாக
வித்தரைமீதிற்சொல்ல விரைஞ்சுவோந்திருவைத்தானே

சரஸ்வதிதோத்திரம்-விருத்தம்-இ-ம்-காம்போதி

நாதவத்துயர்ந்தபொ[illegible]ன்ன வானந்த[illegible]விளக்க
நீதமாங்கடையூரானை நினைவினிற்பூசைசெய்து
வாதையையொழித்தஞான மார்க்கண்டர்விலாசஞ்செய்ய
சீதனமுகத்தாள்வாணி திகழ்பதத்துதிசெய்வோமே

குருவணக்கம்-விருத்தம்-இ-ம்தோடி

நற்றவமிருகண்டையர்நாதனைபூசைசெய்து
பத்தியாயீன்றெடுத்த பாலன்மார்க்[illegible]ன்கதை
இத்தலமறியயாறு மினிதுடன்விலாசஞ்செய்ய
உத்தமவேதஞான முடையசற்குருதாள்போற்றி

அவையடக்கம்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

சடையுடைகங்கையானைத் தவஞ்செய்மார்க்கண்டனார்தக்
திடமுறைவிலாசந்தன்னைச் செந்தமிழோர்கள்முன்னே
கடல்தனையெறும்புவென்ற காட்சியதாகும்போல
அடைவுடனியானுஞ்செய்த வருமையையுட்கொள்வீரே

போற்றிகவி-

மல்லாருமன்னர்மன்னன் வருத்தமில்லாதமாக்கள்
எல்லாருக்குதிக்கமிக்க வினிமைசேர்வசனப்பொய்கை
வல்லூருவேங்கடராமன் மார்க்கண்டன்காதைதன்னை
சல்லாபவிலாசமாகத் தமிழினலுரைசெய்தானே

நாட்டை-தரு-தாளம்-திரிபுடை

ஆதிபரன்றனைவணங்கும் அன்பர்மிருகண்டரிட
சோதிதவத்திலுதித்த சுதன்புகழைப்பாட (ஆ-ஆ)
நீதியாயநம்வளர்க்கு நிமலிருதனுகித்
ஓதிலானதங்கரனார் திகழ்பாதந்துணையே (ஜெயஜெயா)
கடவூரில்மிருகண்டர் கண்களிக்கவந்துதித்த
திடமுடையமார்க்கண்டன் சீரையான்பாட (ஆ-ஆ)
அடலவுணர்குலந்தனைவேரறுக்குமுருகேசர்வள்ளி
மடமயிலாள்தெய்வயானை மலர்ப்பதங்கள்துணையே (ஜெயஜெ)
அத்தர்பதம்நிதம்போற்றுமன்பான்மிருகண்டர்
புத்திரன்மார்க்கண்டனிடபுகழையான்பாட
சத்தியபார்வதியையிடந்தனில்வைத்தஆதியரி
வித்தம்வாழ்ந்திடுமீசனிருசரணந்துணையே (ஜெயஜெயா)

மங்களம்.

ஓரடி-தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி

மங்களம்-ஜெயமங்களம்-நித்தியசுப மங்களம்

அனுபல்லவி

மங்களமாந்திருமருவுங்கடவூரில்
வாசஞ்செய்யும்விக்கினேஸ்வரர்க்குஜெய (மங்களம்

கலைமகளுக்குமங்களம் வள்ளிதெய்வானை மங்களம்
களுக்கும்வேலர்க்கு மங்களம்
நலமாய்நாகமணிந்தநாதருக்கு மங்களம்
மலையரசன்மகளானதேவிக்கு மங்களம்
வையகமளந்தநெடுமாலுக்கு
ஜெயகுருச்சரர்க்குமங்களம்-தபமிகுத்த மங்களம்
ஜெயமிருகண்டருக்கு மங்களம்
நயனஞானச்சதிரான்நங்கையர்க்கு மங்களம்
அயன்விதியைவெல்லுமார்க்கண்டருக்கு மங்களம்
அன்போடிக்கதையையின்பங்கொண்டவர்க்கு

மோனங்கூட்டுகிற-பொதுவிருத்தம்

ஞாலமீதினிலேயின்றுநாள்தொறுந்தவத்தைச்சேர்ந்து
மூலமுமறிந்துமெத்த முத்தியைத்தான்படைத்த

சிலர்கள்துதித்தப்போற்றுந் திகழ்விநாயகரைநம்பி
கோலமாமேளதாளங் கூட்டியேபாடுவோமே

தரு-இ-ம்-மத்தியமாதி-தாளம்-திரிபுடை

பல்லவி.

மதகரியின்முகவதனமிருகணபதியிதோவாரார்
கணபதியிதோவரார்

அநுபல்லவி.

பதந்தனில்தண்டை கலீல்கலீலென்ன
பார்வதிசுதன்பவள நிறமெய்யன்
அதிகதுதிபெறுமரன்மைந்தனும்
ஐங்கர[illegible]கதுங்கமதாகிய (மதக)

திக்கெல்லாம்புகழ்விக்கினேஸ்வரன்
சிந்தைதொழவருள்தந்தாஸ்வரன்
முக்கணருள்புத்திரனுமாறு
முகவர்க்குமுதலாய்விளங்கிய (மதகரி)

செங்கையணிமுடிசங்கரன்சேயிணர்
கேசவன்மருமகனுமென்னவே
திங்கள்பிறைமுகமங்கையுமைசுதன்
திட்சணமுள்ளமூஷிகராயன் (மதகரி)

முப்பழமொடு அப்பமதிரச
மொடுகற்கண்டு சீனியும்
இப்பவும்வருந்திப்பவும்பருந்
தொப்பையனுமெங்களப்பனுகிய (மதகரி)

விநாயகர்வருகிற-பொ[illegible]-விருத்தம்

அருமறையவர்கள்த்தாழ ஆனதோரிஷிகள்சூழ
பருமமூந்றுவிலங்கப்பணிகள்மெய்பளாவென்ன
திருவெனுமொளிருஞ்சிந்தாத்திரி[illegible]யகருமிப்போ
வருமொருமூஷிகத்தில் வளம்பெறவருகின்றாரே

விநாயகர்வருகிற தரு-இ-ம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்

பல்லவி

செல்வவிநாயகர்வந்தார்-உச்சிதச்
செல்வவிநாயகர்-வந்தார்

அநுபல்லவி

கல்விசெல்வமெல்லாங்களித்துத் தந்திடும்
வல்லபையின்மனமகிழ்வு கொண்டிடும் (செல்)

சரணங்கள்.

அமரர்வணங்குநீ நேசன்-மகா
அழகுள்ளபிர காசன்
உமைசதவிசுகி னேசன்-கன
உத்தமர்கள்மகிழ்சித்தர்களும்புகழ் (செல்வ)
கல்விதருங்கிருபை யாளர்-எழில்
கனகமணிந்த தோளர்
வல்வினைதீர்த்திடும் ஆளர்-நல்ல
மதிதருங்கணபதிநல்குண (செல்வ)
காவில்வெண்டய மாடா-அதற்
கடுத்தமாதர்கள் பாட
சிலமுனிவர்கள் கூட-எழில
தேகங்களித்திடநாகரிகத் துடன் (செல்வ)

கட்டியக்காரன்வருகிற-பொதுவிருத்தம்

கதிதபஞ்செய்யும்வேதக்காரணப்பெரியோர்போற்றும்
சதுர்முகப்பிர்மதேவன் சபைகொலுவலங்கரிக்க
அதிபலமுடையநல்ல வமரர்கள்புகழுமிக்க
விதியுள்ளகட்டியக்காரன் விரைவுடன்வருகின்றானே

கட்டியக்காரன்-வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்-மிசுரதளம்
பல்லவி.

கட்டுங்குணத்துடனேயெச்சரிக்கை செய்
கட்டியக்காரன்வந்தான் எச்சரிக்கைசெய் (கட்டி)

அநுபல்லவி.

அஷ்டதிக்கெங்குமதிர்ந்திடும்படிசிங்கக்
குட்டிகள்போலவேதட்டிக்குதித்துப்பொங்கி (கட்டுங்)

சரணங்கள்

சிரசிற்பொன்னுருமாலதி[illegible]த்துமுடனே கட்டி
திலர்தம்நுதலிலிட்டு[illegible]க்கொலலா வுருட்டி (கட்டுங்)
வாகுவலயம்பால்வலதுதோளி[illegible]ல் மாட்டி
வச்ரகடகங்கையிலுச்சிதமாகப் பூட்டி-(கட்டுங்)
இருபுஜமுங்குலுங்கவெச்சரித்து[illegible] கென்னவே
இடியிடித்ததுபோலேயடித்திடுதி டென்[illegible]வ (கட்டுங்)

பிரமதேவன்வரு[illegible]-பொதுவிருத்தம்.

அஷ்டதிக்கெங்கும்போற்றுவதிசயமாகமெத்த
கட்டுகாவலுமதானகனகரத்தினமிழைத்து

திட்டமதாய்விளங்குஞ் சிங்காரக்கொலுவிருக்கச
சிட்டிக்குங்கர்த்தனை திசைமுகப்பிரமன்வாரார்

பிரமதேவன்வருகிற,தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி

திசைமுகதேவனும் வந்தார்-மகா
வுசிதமாய்த்தெரிசனந் தந்தார்

அநுபல்லவி.

வசிகாமுனைதிருமறையவர் சூழவே
அசைவில்லாகுடைமன்னரருகினில் தாழவே (திசை)

சரணங்கள்.

இரத்நமகுடமுந் துலங்க-வொரு
மிதகபுஜகிரீதி யிலங்க
வித்தாரமாகமாலை விடுவித்துவலங்கரித்து
குற்றுகுற்றங்காணக்கொலுவினிலிருந்திட (திசை)

விண்ணுமண்ணெங்கினும் புகழ-நல்ல
புண்ணியபுருஷர்கள் மகிழ
வண்ணமேனியடைத்தமாணதநாவினில்வைத்து
நண்ணுமன்னமீதேறிநாயகமாய்விளங்கும் (திசை)

கண்டவர்களுந்தெண்ட னிடவே-எக்
காளபேரியுமடி படவே
மண்டலாதிபரெல்லாம் வந்துமிகத்துதித்து
தெண்டனிடும்படிசெய்திடும்முனிவர்களுடன் (திசை)

கட்டியன்கூறல்-விருத்தம்.

அருமறைமுனிவாடிபணிந்திடுமையனேமெய்யாபராக்கு
காமதிறகமலங்காணவே யேந்து[illegible]கர்த்தனேசத்தாபராக்கு
மறையவரியாவரும்வந்தடி தாழுமாயனேநேயாபராக்கு
திறமுடனெதுவுஞசிருஷ்டிக்[illegible]ம் பிர்மதேவதேவனேபராக்கு

பிர்மதேவன்-சப்[illegible]ரிஷிக[illegible]க்குச்சொல்விருத்தம்.

நிலைமையாவிளங்குஞ்சப்தரிஷிகளேசொல்லக்கேளீர்
நிலைமையாம்நமதிடத்தில் நெடுங்காலம்வரப்பட்டோர்கள்
நிலைமையாய்க்கொலுவி[illegible]வந்துநிலைத்தனரோசீர்பார்த்து
நிலைமை[illegible]யுரைப்[illegible]ந்தனெஞ்சமும்கிழத்தானே

(வசனம்) [illegible]ளுங்கள்சப்தரி[illegible]களே நம்முடையகொலுவுக்கு
நீடுழிகாலமும் வ[illegible]டேபார்கள் அனைவர்களும் வந்தார்களா இ
ன்னம்வருகவில்லையா அதனைநன்முகப்பார்த்துச் சொல்லுங்கள்
சப்தரிஷிகளே

சப்தரிஷிகள்,பிர்ம்மதேவனுக்குச்சொல்.விருத்தம்

ஐயனேகேளீரையா அழகதாய்ச்சிரசைப்பெற்ற
ஐயனேயுமதிடத்திலிண்ணூடம்வரப்பட்டோர்கள்
ஐயனேவந்தாரந்த வமரர்கோள்வருகவில்லை
ஐயனேசபைமுற்றும்பார்த்திருந்துபின் னுரைத்திட்டோமே

(வசனம்)கேளுந்திசைமுகப்பிரம்மாவே உம்முடையகொலுவுக்கு எப்போதும்வரப்பட்டபேர் அனைவரும்வந்தார்கள் இந்தபொன்னுலகையாளப்பட்ட அமரர்கோனாகிய தேவேந்திரமகாராஜன் இன்னமும் வருகவில்லைநான்முகதேவனே.

தேவேந்திரன்வருகிற-பொதுவிருத்தம்.

ஞாலத்தைச்சிருஷ்டிக்கின்ற நான்முகன்சபையைக்காண
கோலமாமுனிவரோடுங் கோதிலாத்தேவரோடுஞ்
சீலமாமிந்த்ரராஜன் றினகரன்றன்னைப்போல
வாலமாய்ப்பணிகள்பூண்டு வகையுடன்வருகின்றானே

கட்டியக்காரன்சொல்-வசனம்

அகோதெப்படியென்றால் பிர்மதேவனுடையசபைக்குத்தேவேந்திரமகாராஜன்வருகிறவிதங்காண்க

தேவேந்திரன்வருகிற-தரு-இ-ம்-கலியாணி-ரூபகதாளம்

பல்லவி.

இந்திரன் வந்தானே பரிதிபோலே
இந்திரன் வந்தானே

அநுபல்லவி

தந்திரமான சமர்த்தருடன்கூடி (இந்திரன்)

சரணங்கள்.

தேவர்களெங்குஞ்செயங்கூறித் திரிகவே
சித்தர்கின்னரர்களுஞ்சேர்ந்து வருகவே(இந்திரன்)
முப்பத்துமுக்கோடிமுனிவர்கள் சூழவே
முரசறைந்தேமன்னர்முற்றிலுந் தாழவே(இந்திரன்)
வேதியர்மந்திரவேதங்கள் கூறிட
விண்ணுமண்ணதிர்ந்திட வெடிகளாரபாரிட(இந்திரன்)
அமரர்கள்தன்னுடனமுகாகக் கூடியே
ஆரபாரத்துடனயன்கொலு தேடியே(இந்திரன்

கட்டியக்காரன்-பிர்ம்மதேவருக்குச்சொல்-விருத்தம்

திசைமுகத்தயனேபோற்றி செபதபமுடிக்கப்பட்ட
வசிகரமுடையவேத மாதவசனமேபோற்றி

இசையும்வெள்ளானையேறி யிருபுறமமரர்சூழ
ரசியமதாளவிந்திர ராஜனுமிதோவந்தாரே

பிர்ம்மதேவன்சொல்-வசனம்.

ஆ-ஆ- மகாசந்தோஷம் மகாசந்தோஷமாயிற்று

தேவேந்திரன்-பிர்ம்மதேவனுக்குச்சொல்-விருத்தம்

பிர்ம்மரேசபையில்மெத்த பெருக்கமாய்வீற்றிருக்கும்
மர்ம்மிகளானபேரே வந்தனந்திசைமுகர்க்கு
தர்மமேசெயமதாகுந் தானெனயிருங்கள்வந்த
கர்ம்மதீவினையொழித்து கடவுளைக்கண்டபேரே

(வசனம்)என்னிலுமிகுதியாயிருக்கப்பட்ட பெரியோர்களேயிருங்கள்திசைமுகதேவர்க்குவந்தனம் மகாதிவினைகளையொழித்துகர்த்தவ்வியத்தைக்கண்ட பெரியோர்களே தர்மமேசெயமென் றிருங்கள்

சப்தரிஷிகள-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்

அமரருக்கதிபனான அரசதேவந்திராகேள்
சமரினிற்பெலவானிந்த சளத்தினிலிருந்தாற்பின்பு
நிலைமையிலவரவர்தம் நிலையினிலிருப்பார்சொன்னே
முமதிடமிருப்பீர்நான்கு முகவனுமகிழத்தானே

(வசனம்)கேளும்,தேவேந்திரமகாராசனே நீரும் உம்மிடஆசனத்திலிரும் அனைவரு அவரவர்களுடைய ஆசனத்திலிருக்கிறோம்தேவேந்திரமகாராசனே.

பிரமதேவன்-சப்பரிஷிகளுக்குச்சொல்-கொச்சகம்

சட்டமுடனென்கொலுவில் தா[illegible]ிருக்குமுனிவர்களே
எட்டுத்திக்கினுந்தபங்க ளின்முடனேபுரியும்
கட்டுசடையுடையமுனி களுமிகசுபேக்ஷமதோ
பொட்டெனவேநானறிய புகலுந்தபத்திபர்கே

(வசனம்)கேளுங்கள்சப்தரிஷிகளே இந்தஎட்டுத்திக்கினுந்தபத்தைச்செய்யாநின்ற தபசிகளுக்கு ச்சுபமோ சுபமில்லையோசொல்லுங்கள் சப்தரிஷிகளே.

சப்தரிஷிகள்-பிரமதேவனுக்குச்சொல்-கொச்சகம்

பொட்டெனவேபுகலுமென்ன புண்ணியனேதிசைமுகனே
எட்டுத்திக்குந்தபம்புரியு மிருடிகளெல்லாஞ்சுபமே
கட்டழகுதானுடைய கலைமகளைத்தான்படைத்த
வட்டவிழிநான்முகனே மனமகிழச்சொன்னோமே

(வசனம்)கேம்பிரமதேவரோ இந்த அஷ்டதிசையினுமிருந்துதபஞ் செய்யப்பட்ட தபசிகளுக்குசுகமே மேலும் அவர்கள்நினைத்தபடிக்கு முடிந்துவருகின்றது நான்முகதேவனே.

பிரமதேவன்-தேவேந்திரனுக்குச்சொல்-கொச்சகம்

தேவர்களுக்கதிபனென்று செங்கோர்படைத்தவனே
பூவுலகிலுள்ளமன்னர் புண்ணியங்கள்செய்துமிக
ஆவலுடன்வந்தவரை யாதரிப்பரோவதனை
தீவிரமாயெனக்குரையுந் தேவேந்திரமன்னவனே.

(வசனம்) கேளுந்தேவேந்திரமகாராசனேபூலோகராஜாக்களில்புண்ணியமுண்டா அடுத்தவரை யாதரிப்பதுண்டா நீதிவழுவாமல்அரசுசெய்துவருகிரார்களா சொல்லுந்தேவேந்திரமகாராசனே.

தேவேந்திரன்-பிர்மதேவருக்குச்சொல்- கொச்சகம்

உலகமெல்லாந்திசைமுகனே யொருகுடைபிலாளுகின்ற
நிலமையுள்ளமன்னரெல்லாம் நீதியுடனேநடப்பார்
பலபலவிதங்களுள்ள பாராளும்வேந்தரைநாம்
சொல்லுதற்குகிலமிலேதான் சோதிதருநான்முகனே

(வசனம்)கேளும்பிர்மதேவரோஎக்சக்காத்தினுலுலகையாளப்பட்ட மன்னர் நீதியுடனேநடப்பார்கள் மற்றயிராசாக்களுக்கெல்லாம்நீதி தெரியுமா தெரியாது குறிப்புமிராது அரசுசெலுத்தவுந்தெரியாதுபல் பலவிதமாயிருக்கும் நான்முகதேவரோ.

விசுவாமித்திரன்-பிர்மதேவன்சபைக்குவருகிற-பொதுவிருத்தம்

மண்டலமகிழப்பெற்ற வானவர்மிகத்துதிக்க
தெண்டுசக்கரத்திலேந்தி திசைமுகனருகனுக்கு
அண்டங்கள்கிடுகிடென்ன ஆக்கிரமித்தட்டிக்கொண்டு
மிண்டர்க்குமிண்டனை விசுவாமித்திரன்வருகின்றாரே.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் உலகத்தைச் சிருட்டிக்கும்படியாகியபிர்மதேவன் சபைக்கு தபோநிதியாகிய சாபானுக்கிரகசாமார்த்திய விஸ்வாமித்திரமகாஷி வருகிரவிதங்காண்க.

விஸ்வாமித்திரர்வருகிற-ஜாடி-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி.

மிருத்த தப மிருத்த பிரதாப விஸ்வாமித்திரனே

அனுபல்லவி.

தகத்துக்கதிபதிகெஜபதிநாளிதை
சதுமாமுகவனு மரிவாகின்னமென்ன
தபசிமார்களெனைச்சரணெனப்பணிகுவார்
சட்டதிட்ட அட்டதிசையினும் (மிகுத்)

சரணங்கள்.

அண்டரண்டநவகண்டத்தைக் காட்டுவேன்
அரைநொடிதனிற்றிசைமுகனைய் மோட்டுவேன்
தெண்டுகையினிற்பிடித்தோரையு மாட்டுவேன்
செகதலம்போலேயொருசெகதலங் கூட்டுவேன்
மிண்டர்தங்களை நான்முடிக்குடன் வாட்டுவேன்
வீரமானதொருவேடமும் பூட்டுவேன்
கண்டபேர்களடிமிசைவிழ மீட்டுவேன்
கதிதபத்தினில்மிகக்கனம்பா ராட்டுவேன்
கனத்தனெஞ்சில்நினைத்ததெல்லாங்
கடுகிமுடிப்பேன்துசநதொடுக்கவெடுப்பேங்கள (மிகுத்)

கட்டியக்காரன்-பிர்மாவுக்குச்சொல்-விருத்தம்.

நன்னயவாணிதன்னை நாவினிலமைத்துதுய்ய
அன்னவாகனத்திலேறு மையனேநின்றுள்போற்றி
இந்நிலந்தனிலுமற்று மிருக்கின்றனிலத்திலுஞ்சீர்
மன்னியவிஸ்வாமித்திர மாமுனிவந்திட்டாரே.

பிர்மா-கட்டியனுக்குச்சொல் - வசனம்

ஆ-ஆ சந்தேஷம் சந்தோஷமப்பா கட்டியக்காரா

விஸ்வாமித்திரர்-பிர்மாவுக்குச்சொல்-விருத்தம்

சட்டதிட்டமதாய்வாழுஞ் சதுர்த்திசைமிகவல்லோனே
திட்டமதாய்விளங்குந் தேவேந்திராசனேகள
கட்டுதிட்டங்களாகக்கனசபை யிருப்பதேது
பொட்டெனப்புகலுமிந்தப் புதுமையையெனக்குத்தானே

(வசனம்)கேளும்பிர்மதேவனே ஓய்தேவேந்திரமகாரா
சனேஎக்காலத்திலும்இவ்விதமாகச்சபை கூடினதில்லையே
இன்றையத்தினம் மகாகட்டுங்காவலுமாக யிருக்கவேண்டி
யதென்ன அதையெனக்குத் தெரியச்சொலலுங் தேவேந்
திரமகாராசனே.

தேவேந்திரன்- விஸ்வாமித்திரனுக்குச்சொல்- விருத்தம்.

திசைமுகன் சபையிலாதான் சிரப்புடன்வந்தபோது
உசிதமாய்நீரும்வந்தா லொன்றுடனென்றுபேசும்

கசிதியைக்கொடுப்பீர்ப்போ களறிகள்நடுநடுங்கும்
விசிதமீதறிவீரிங்கு வீற்றிருந்திடுகுவீரே

(வசனம்) கேளும் விஸ்வாமித்திரரே இந்தபிர்மசபைக்கு யார்வந்த போதிலும்பேசாமல்தானிருப்பார்கள்நீர்வந்துவிட்டால்ஒன்றுடனே யொன்றுபேசத்தலைப்படும் ஆகையாலிந்த ஆசனத்திலிரும்விஸ்வாமித்திரரே-

விஸ்வாமித்திரர்சொல்-வசனம்

அப்படியேயிருக்கின்றேன் தேவேந்திரமகாராசனே

பிர்மதேவர்சபைக்கு- வதிஷ்டமகாமுனிவருகிற பொது - விருத்தம்

வீரியவிஸ்வாமித்திரர் வீற்றிருந்திட்டபோது
சூரியனொளிவுபோலத் துலங்குநான்முகன்சபைக்கு
பாரியசடையுடைத்தாய் பழுத்ததோர்மேனிபெற்ற
ஆரியவதிஷ்டர்வாரா ரனைவருமகிழ்ந்தானே

வதிஷ்டர்வருகிற-தரு-இ-ம்.புன்னாகவராளி-அடதாளம்

பல்லவி

மாமுனிவந்தார்- வதிஷட மாமுனிவந்தார்

அநுபல்லவி

நேமகமாகவேதிஷைடையில் நிற்பவர்
நேத்தியதாய்மகா சூத்திரங்கற்றவர் (மாமுனி)

சரணங்கள்

வேதவக்கியானி [illegible]ர்துக்குமெஞ்ஞானி
மாதவத்தோரெல்லாம் வந்துபணிந்திடும்
வண்மையதானந் றன்மைபடைத்திடும் (மாமு)

சகலகலைக்கியானி சிவசெபதபத்திற்குமுக்கியன்
அகிலமெல்லாம்புக ழானந்தமாகிய
அதிபதிமன்னர்க்கு மதிகதிகொடுத்திடும்
வேதியர்நேசன்தேவர்நிதம் வேண்டும்விசுவாசன்
ஆதிபராபர மானவருக்கன்பன்
ஆதித்திடமன தாகிக்களித்திடும் (மாமு)

கட்டியக்காரன்- பிரமாவுக்குச்சொல்- விருத்தம்

மணிகொள்சத்பலவாய்மின்னு மாமுடிசிரசிற்பூண்ட
பணிகொள்மேனியனேநல்ல பாலன்றாவெம்மையாளுந்
திணிகொளும்புயனே நன்காரதிசைமுகதேவேபோற்றி
மணிகரங்கொள்வதிஷ்ட மகாமுனிவந்திட்டாரே

பிர்மா- கட்டியனுக்குச்சொல்- வசனம்.

ஆ, ஆ, அவரும்வந்தாரா மிகவுஞ்சந்தோஷமாயிற்று

வஷிஷ்டர்- பிர்மாவுக்குச்சொல்- வாழிவிருத்தம்

நாடோறும்படிசிருஷ்டிக்கு நான்முகனேநீவாழி
ஈடேறிவிளங்குகின்ற விந்திரனேநீவாழி
காடேறிதவத்தைச்செய்யுங் கௌசிகனேநீவாழி
நீடூழிகாலமற்ற நீங்களெல்லோரும்வாழி

(வசனம்)நான்முகதேவனேவாழிஇந்திரமகாராசனேவாழிமற்றுமி
ருக்கப்பட்டயாவரும்வாழிவாழி.

தேவேந்திரன்-வஷிஷ்டருக்குச்சொல்-விருத்தம்

வாழ்வீரென்றெனவேவந்தவஷிஷ்டமாமுனிவரேகேள்
ஆழ்கடருண்ணமிந்த அண்டரண்டங்களெல்லாம்
சூழகின்றபிரமலோகத் தோருமாமுனிவரோடும்
தாழ்வில்லாமன்னரோடுஞ் சபையில்வீற்றிருந்திடீரே

(வசனம்)வாரும்வஷிஷ்ட மகாமுனிவரே பிரலோகத்தாரோடுங்கூ
டியமற்றதபசிகளோடும் இந்திராசாக்களோடுங்கூடவிஸ்வாமித்திரரு
க்கருகேஇந்தஆசனத்தில்வீற்றிருஞ்சுவாமி.

வஷிஷ்டர்சொல்-வசனம்.

மகாபாக்கியம் மகாபாக்கியம் இந்திரபூபதியே

பிர்மா-சப்தரிஷிகளுக்குச்சொல்-கவி.

மாதவத்தோரே மகா சபைதனிலே
வேதங்கள்கற்ற வியாசர்வந்தனரா

(வசனம்)கேளும்சப்தரிஷிகளே இவடமவரப்பட்டபேரனைவரும்
வந்ததும்வராததும்பார்த்தீர்களாவேதவியாசரும்வந்தாராபாருங்கள்

சப்தரிஷிகள்-பிர்மாவுக்குச்சொல்-கவி

முந்திநான்முகனே முறைவேதமோதி
வந்திடும்வியாசர் வரயில்லையையா

பிர்மா-சப்தரிஷிகளுககுச்சொல்-சொக்கம்

சப்தரிஷிமார்களேயென் சபையிலிற்குங்கட்டியரே
அத்துமரியாதையோடு மருகினிலன்பாய்ச்சென்று
வித்தைபுத்தியுரைவேத வியாசர்தனைக்கண்டழைத்து
இத்தடத்தில்வருவீரே யெனமனமகிழ்ந்திடவே

(வசனம்)கேளுங்கள் சப்தரிஷிகளேநீங்களாவது ஒருவர் அல்லது ஆரடா அடாகட்டியக்காராநீயாவதுபோய் சீக்கிரமாக வேதவியாசரை அழைத்து வாருங்கள்.

கட்டியககாரன்-பிர்மாவுக்குச்சொல்.விருத்தம்

தேவரெங்களையழைத்து சேதிகளுரைததபின்பு
திவரமாகச்சென்று செபதபநிலையிற்சார்நத
காவியவியாசர்தன்னைக் கண்டழைத்தோடியிங்கு
வாவென்றபோதேயிதோ வருகிறார்வியாசர்தானே

(வசனம)கேளுஞ்சுவாமிதாங்கள் வேதங்களை சிக்கறுத்தவேதவியாசனையழைத்துவாவென்று சொன்னபோதேஇதோவருகிறார்வேதவியாசர்சுவாமி

வேதவியாசர்-வருகிற-தரு-இ ம்-நாதநாமக்கிரியை அட-தாளம்

பல்லவி.

வந்தார்வந்தனரே வேதவியாசர்
வந்தார்வந்தனரே

அநுபல்லவி.

தந்திராதிகளையெல்லாஞ்சபிக்குமெஞ்ஞானகுரு
தொங்தொங்தோமெனத்துலங்கும்பிர்மசபைக்கு (வந்தார்)

சரணங்கள்.

மெய்யில்வெண்ணீறும்மணிந்திட்ட
வேடிக்கைபாரும்
ஐயன்நான்முகன்கொலுவினில்வீற்றிருந்திட
கையிற்றுவடமேந்திவையா[illegible]து (வந்தார்)

சாந்திரமேந்தி பூமியில்[illegible]
சரஸ்திரகாந்தி
தோற்றும்பாவனைபோலத்துலங்குஞ்சடைமுடித்து
நேத்தியதாய்சபைகாத்தபிர்மாமுன்னில் (வந்தார்)

கலையினில்யோக்கியர் குறைவில்லாத
கபன சிலாக்கியா
பலபலசாஸ்திரம்படித்துத்தெளிந்தவர்
நிலையுள்ளமதிதிருகலைமகள்நேசர்பால் (வந்தார்)

வேதவியாசர்-பிர்மாவுக்குச்சொல்-விருத்தம்.

வித்துவஜனங்களோடு மெய்யில்வெண்ணீறுபூசும்
தத்துவங்கற்றயோகதபசுகளோடுங்கூடி
இத்தண்டசபையில்வாழுமெழில்சதுர்முகவனுரே
பத்தியாயென்னையழைத்த பாக்கியஞ்சொல்லுவீரே

(வசனம்) கேளும்பிர்மதேவரே சப்தரிஷிகளோடும்வித்துவஜனங்கழ்ளாடுங்கூடிமழகாயிருக்கப்பட்ட சபைக்குளென்னையழைப்பித்தகாரியந்தெரியச்சொல்லும் பிர்மதேவரே.

பிர்ம்மர்-வேதவியாசருக்குச்சொல்-விருத்தம்.

வேதத்தையமுதாய்கொள்ளும் வேதவியாசரேகேள்
மாதவத்தினிலுயர்ந்த மாமுனிவர்கள்தன்பக்கல்
நீதியாயுமையழைத்த நிலைதன்னைச்சொல்வேனிந்த
ஆசனத்திலே வீற்றிருந்திடீரிருந்திடீரே

(வசனம்) கேளும்வியாசரே உம்மையிந்தசபைக்கு அழைப்பித்தகாரியஞ்சொல்லுகிறேன் இந்தஆசனத்திலிருந்திடும் வேதவியாசரே

பொதுவிருத்தம்.

வேதவியாசர்வந்து வேடிக்கையாய்விளங்கும்
நாதனான்முகவன்பக்கல் நலமுடனிருக்கும்போது
பூதலந்தன்னில்வாழும் புண்ணியமிருகண்டேயர்
ஓதியசிஷர்வாரா ருலகெலாமகிழ்ந்தானே

கட்டியக்காரன்சொல-வசனம்

அகோ தெப்படியென்றால் பிர்மதேவர்சபையில்சப்தரிஷிகள்முதல்வஷிஷ்டர்விஸ்வாமித்திரர் வேதவியாசர்முதலானவர்கள் வந்திருக்கும்போதுமிருக[illegible]மகாரிஷி சிஷர்களவருகிறவிதங்காண்க.

[illegible]சிஷர்வரு[illegible]ரு-இ-ம்-சங்கராபரணம்-

பல்லவி

மாமுனிசிஷர்கள்நாங்களே-செய-மாமுனிசிஷர்கள்நாங்களே
ஆ-ஆ-சிவ-சிவ-ஆ-ஆ.
சிவசிவவென்றிதந்தவமதுபுரிந்திடும் (மாமுனி)

ஆ-ஆ-அர-கர-ஆஆ-அர கர-ஆஆ.
அரகரவெனநிதம்பரமனைத்துதிசெய்யும் (மாமுனி)

ஆ ஆ-செப தப-ஆஆ-செபதப-ஆஆ-செப தப-ஆஆ
செபதபநிலையுள்ள, சுடலிதமிருகண்ட (மாமுனி)

ஆஆ-தகுர்தத்தி ஆஆதகுர்தத்தி-ஆஆ
தகுர்தத்திகுர்தத்திமி-தத்தரிநாதரித்திங்கணத்தோமென (மா)

அநுபல்லவி

சாமியைநித்துதிப்போம் நேமநிஷ்டையாயிருப்போம்
தாணிமாமிருகண்டர் ஆண்மனைகாத்திடும் (மாமுனி)

சரணங்கள்

பூசைபெட்டியையேந்துவோம்- அதில்
இருக்கின்றநீறெடுத்துவுருக்கமாயச்சிவன்பாதம்
போற்றுவோம்கெற்றியிற்சாற்றுவோம்
தாசனைப்போலேதிரிவோம் ஈசனைப்புரிவோம் (மாமு)

சிஷர்கள்-சபைக்குச்சொல்-விருத்தம்

இதுவென்னசெனனீங்க ளிடிப்படுகிறீர்கள்
பதிவிட்டுவேஷம்பார்க்கப் பட்சமாய்த்தானேவந்தீர்
மதமூற்றுக்கூச்சலிட்டு மல்லுபோர்செய்யலாமோ
குதிகுதித்தேசமிப்போஙீ கூப்பிடாதிருந்திடீரே.

(வசனம்)கேளுங்கள்சனங்களே நீங்கள்வேஷம்பார்க்கத்தானேவந்தீர்கள் அதைப்பார்மல் இப்படிக்கெல்லாம்படுகிற சனனம் என்னசுளனம்மதமூற்றுக் கூச்சலிட்டுப்போர்செய்யலாமாசபிக்கப்போறேன் கூப்பிடாதிருங்கள் அடாதம்பி ஞானசிரோன்மணிவெள்ளைப்போரில்லை எண்ணையேகொள்ளை கொள்ளையாயிருக்குதுபார் ஆம்மெய்தான் மெய்தான்பல்லப்பல்லைத்திறந்து கூட்டுதடா, அடாதம்பிமணி கெண்டாமணிகாட்டயில்லைகாட்டயில்லையேகூட்டங்கூட்டமாய்க்காட்டயில்லை காட்டயில்லைஎண்ணையேகூட்டங்கூட்டமாய்க்காட்டுதுபார்டிங்டிங் அடாதம்பிமணிகெண்டாமணி எனைவர்களிப்படி கூச்சலிடுகிறார்கள் பேபே பேசினபேருக்குஆப்படிக்கிறதுஆப்படித்தால்சரியாசரியா சரியில்லாவிட்டால் விரியப்பொத்துகிறது அதுவுஞ்சரிபல்லகேளும் சனங்களே.

சிஷர்சொல்-தரு[illegible]ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்

பல்லவி

கூப்பிடாதிருங்கள் ஜனங்களே சபையோரேசற்றுநேரம்
சற்றுகெடி கூப்பிடாதிருங்கள்

அநுபல்லவி

கூப்பிடாதிருங்களேன் குளறவோவந்தீர்கள
கோஷ்டமேனிடுகிறீர் நாட்டுக்கிடாக்களே (கூப்பி)

சரணங்கள்

சாப்பாடுவுண்டீரே தாம்பூலங்கொண்டீரோ
சட்டமாயுட்கார்ந்து திட்டமாய்ப்பாருங்கள் (கூப்பிடா)

தபசிவருகிறார் சந்தடியாகாது
சரணைவுலைககூப்பிதருணம்பார்த்துசேவிப்பீர் (கூப்பிடா)

சளசனவென்றாலே சமர்த்தரென்பார்களோ
சயித்திடுவோம்நாங்கள் அபத்தஞ்சொல்லோம்நீங்கள் (கூப்)

சீஷர்கள்சொல்-விருத்தம்.

மருகுலமெய்ருத்திராட்ச வடத்துடன்மார்பிற்பூனூல்
பரிவுடன்விபூதிபூசி பலகல்விஞானமோதி
திருவெனுமுமையாளான தேவியைமனதிலெண்ணி
அரகரசம்போசம்போ வெனமிருகண்டர்வாரார்

(வசனம்)கேளுங்களசனங்களே எங்கள்குச்சகமகாமுனியினுடைய குமாரானமிருகண்டர்வருகிறார்சந்தடிபண்ணாதிருங்கள்சனங்களே

மிருகண்டர்வருகிற-தரு-இ-ம்-தோடி-சாப்புதாளம்.

பல்லவி.

திருமண்டலம்புகழ் நிறைகண்டசெபதப
மிருகண்டமுனிநாதனே

அநுபல்லவி.

சர்வசிவசெந்துக்கள் முதலாயெங்கும்படைத்த
சம்புதாசிவனே அன்பாய்மனதில்நம்பி

சரணங்கள்

பஞ்சாட்சரத்தையும் நெஞ்சக்கருத்தினில்
பதித்துதுதித்ததை விதித்துத்தியானஞ்செய்யும் (திரும)
எண்சாணுடம்பையும் நஞ்சாகவேயறுத்து
எழில்பெறக்கதிகாண வழியதைத்தெரிந்திட (திரும)
செகமீதில்வருமாய்கை பலகைபயந்தோட
சித்திவித்திவழி முத்திதனையறிந்த (திரும)

மிருகண்டர்-சீஷர்களுக்குச்சொல்-விருத்தம்.

ஏவல்சீஷர்களேகேளீர் யானுமேமாலகுடும்
பாவையாளிடத்திற்சென்று பத்தியாய்வணக்கின்று
கூவியேமிருகண்டையர் குணமுடனழைத்தாரென்று
தேவியையெனதுபககல் சீக்கிரமழைத்துவாரீர்

(வசனம்)அடாமனோன்மணி,அடாஞானச்சிரோன்மணி அடாமணி கெண்டாமணி அடாமவுனசிந்தாமணிநீங்கள்எனதுதேவியானஞானச்சிறாளின்ஆசிரமத்துக்குப்போய் மகாபத்தியுடனே வணங்கிநான் அழைத்துவரச்சொன்னதாக அழைத்துவாருங்களப்பாசீஷர்களே

முதல்சீஷன்-மற்றசீஷருக்குச்சொல்-வசனம்.

அடாதம்பி ஞானச்சிரோன்மணி தம்பிமணிகெண்டாமணி அடா மவுனசிந்தாமணிஐயர்நமதுஅம்மாளை அழைத்துவரச்சொன்னார்நாம் போய் அழைத்துவருவோம் வாருங்கள் அப்படியேபோவோம்.

சீஷர்கள்-ஞானச்சதிராளுக்குச் சொற்-கவி.

அம்மாவம்மாயெங்களைப்பெற்
றுதரித்திருந்தாயே
அம்மாசரணமிகசரணம்
அன்னையேயம்மாவம்மணியே

ஞானச்சதிராள-சீஷர்களுக்குச்சொல்-கவி.

ஆரப்பாநீங்களாரப்பா ஆசிரமந்தேடியேவந்தோர்
ஆரப்பாயென்கைதட்டி அழைக்கிறீர்நீரரப்பா

சீஷர்கள-ஞானச்சதிராளுக்குச்சொல்-கவி

மாதாவேநீர்தான்பெற்ற மக்களம்மாமிருகண்டர்
ஆதாரம்செய்சீஷரம்மா அம்மாவுன்பால்வந்தோமே

ஞானச்சதிராள்-சீஷருக்குச்சொல்-கவி.

அன்னையேயுனபால்வந்தோமென் றழிக்கையிட்டபாலகரே
என்னகாரியமதாய்வந்திர் இயம்புமாமுனிசீஷர்களே

சீஷர்கள்-ஞானசசதிராளுக்குச்சொல்-விருத்தம்,

சின்னேரிடையினரே தெரிவையர்களுக்குயர்ந்த
அன்னமேமயிலேதேனே அரம்பையூர்வசியோர்போற்றும்
கன்னியேயுன்னையையர் கடிதினிலழைத்துக்கொண்டு
இந்நிமிஷத்தில்வாவென் றியம்பினார்வருவாயம்மா.

(வசனம்)கேளும் எங்களைப்பெற்றதாயாகிய ஞானச்சதிரேஐயர்உ ம்மை அழைத்துக்கொண்டு வரச்சொன்னார்ஆசிரமம்விட்டுசீக்கிரமா கவாருமம்மா.

ஞானச்சதிராள் சீஷர்களுக்குச்சொல்-விருத்தம்.

மெய்யினில்நீறுபூசி விளங்குஞ்சீஷர்களேகேளீர்
கையினில்செபமாலேந்தி கபனத்திலிருக்குமெந்தன்
ஐயருமழைத்தபோதே ஆசிரமத்திருக்கொணுது
பையவேபோவோம்வாரீர் பாலரேவிரைவிற்றுனே

(வசனம்)கேளுமைந்தர்களே எந்தனையராகியமிருகண்டர் அழைத் துவரச்சொன்னபோதே நானிவ்விடமிருககப் போகாது இதோவரு கிறேன் வாருங்களப்பா சீஷர்களே.

சிஷர்கள் மிருகண்டருக்குச்சொல்-கவி

தையலார்ஞானச் சதிரெனுந்தாயை
ஐயரேநொடியி லழைத்தோடிவந்தோம்

மிருகண்டர் சிஷர்களுக்குச்சொல் கவி.

வந்தசிஷர்களே மகாபாக்கியந்தாள்
எந்தன்பக்கலிலே யிருந்திடுவீரே

ஞானச்சதிராள் மிருகண்டருக்குசசொல் கவி.

அந்தணனாரேவேத மறிந்திடுஞானியாரே
மந்திரநூலுணர்ந்த வள்ளலேசரணமையா
அநமதாகவி...பா ஆசிர்மந்தனிலிருந்த
எந்தன்னயழைத்தசேதி யினனதென் றருளுவீரே

(வசனம்)காணஞ்சாணம் மந்திரநூலுணர்ந்தஎன்பிராணனாதாஆசிர்மத்திலிருந்தஎன்னேயழைப்பித்த காரியம் அருளிச்செய்ய வேணுஞ் சுவாமி

மிருகண்டா-ஞானச்சதிராளுக்குச்சொல்-விருத்தம்

மனைவியேயுனையழைத்த வாறினைச்சொல்வேனல்ல
வினைவொடுமாசிர்மத்தில் நீபதலமாதாய்ப்பெண்ணே
உனதடிபார்த்திருப்பா யுயர்திசைமுகன்சபைக்கு
அனைவரும்போறார்பெண்ணே யானும்போய்வருகுவேனே

(வசனம்)வாராய்பெண்ணே ஞானச்சதிரேநம்மைப்போன்றதபசிகளா யிருக்கப்பட்டவர்க ளனைவரும் பிரமசபையில்காரணவிசேஷமறியப்போறார்கள் ஆகையால் நானும்போய்வருகிறேன்நீஆசிர்மத்தில் உனதுதிருவடியைப்பார்த்துக்கொண்டுவெகுபதலமாயிரும்பெண்ணே

ஞானஞ்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்

நான்முகன்சபையிலே தான் நடந்திடும்வாறுகேழ்க்க
மாணியாயெனையழைத்து மதியுரைத்திட்டநாதா
நானுமேயாசிர்மத்தில் நற்புத்திகொண்டிருப்பேன்
கானமாய்நீருஞ்சென்று கடிதனில்வருகுவீரே

(வசனம்)கேளும் என்பிராணநாதரே தேவரீர்பிர்மசபைக்குப்போய்அவிடத்தில் நடக்கப்பட்ட விசேஷங்களையெல்லாம்அறிந்துவாரும் அடியா ளாசிர்மத்தில்பதலமாகயிருக்கிறேன் சுவாமி.

மிருகண்டர்-சிஷர்களுக்குச்சொல்-விருத்தம்.

சிஷரேகேளீரிந்த திசைமுகன்சபைக்கிப்போது
பாசமாய்ப்போகவேணும் பாவைதன்பக்கல்தானே

ஆசிரமத்திரண்டுபேர்க ளடிபணிந்தேயிருங்கள்
நேசமுற்றிரண்டுபேர்தா னென்னுடன்வருகுவீரே

(வசனம்)ஆரடாமனோன்மணி அடாஞானச்சிரோன்மணி அடாம ணிகெண்டாமணி அடாமவுனசிந்தாமணி நான்பிர்மசபைக்குப் போக வேணும்ஆதலால்நீங்களிரண்டுபோநம்முடைய ஆசிரமத்திலிருங்கள்ம ற்றிரண்டுபேர்என்னுடனே கூடவாருங்களப்பா.

சிஷர்கள்சொல்வசனம்.

அப்படியேவருகிறேஞ்சுவாமி.

மிருகண்டர்பிர்மசபைக்குவருகிற

தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

நான்முகன்சபைநாடியே நடப்போம்வாரும்வாருஞ் சிஷரே
நான்முகன்சபைநாடியேநடப்போம்.

அநுபல்லவி

மான்விழிமடமாதினைவிட்டு
வானமெங்கிலுந்தான்புகழ்ந்திட (நான்)

சரணங்கள்.

வாய்பொத்திபயமாகவாருங்கள்
மாமுனிவர்கண்டாலெனச்சொல்வார் (நான்)

ஆஅஅரனென்றேதுதி
அடிக்கடிசொல்விழுடுக்குடன்வாரும் (நான்).

இத்தலமெல்லாமிதுவதிசெயம்
என்னிடவேவெகுவுன்னிதத்துடன் (நான்)

மிருகண்டர்-பிர்மா-முதலிய மற்றவர்களுக்குச்சொல்வந்தன.

விருத்தம்

சகலசம்பத்தாலிந்தசபைதனிற்பெரியோர்சூழ
அகிலமெல்லாந்துதிக்குமையனேநான்வந்தனஞ்செய்
தகமிகமகிழ்ந்தேன்மிக்கசம்பிரமமாயிருக்கும்
மகிமைமாமுனியிந்திரர்க்கும்வந்தனமுட்கொள்வீரே

(வசனம்)சரணஞ்சரணம்பிர்மதேவரேயுமக்குவந்தனம்தேவேந்தி ரபூபதியே யுமக்குவந்தனம்வேதவியாசரேமற்றபெரியோர்களாகியத பத்தோர்க்கெல்லாம்வந்தனம்.

தேவேந்திரன்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்

வந்தனஞ்செய்துவந்தமாமிருகண்டரே
தொந்தமாய்வீற்றிருக்குஞ்சுபமுள்ளமுனிவரோடு

விந்தையாய்நீருமிங்கேவேடிக்கையாகச்செய்த
இந்தவாசனத்திலேதானிருந்திடீரிருந்திடீரே

வசனம்)வாருவாருமிருகண்டரே இந்ததபசிகளோடுங்கூடி-ஆசனத்
திலிருந்துவிடுவீர்மிருகண்டரே

மிருகண்டர்-வசனம்அப்படியேஇருக்கிறேன்-இந்திரபூபதி.

வசிஷ்டர்-பிர்ம்மாவுக்குச்சொல்-விருத்தம்

திசைமுகத்தயனேகேளீர்செகந்தனிலேயெந்நேரம்
உசிதமதானநீதியுரைக்கிருருமிடத்தில்
வளையுள்ளமுனிவத்தோர்மன்னவர்வந்திருந்து
இசைமொழியுரைப்பார்காணேனிப்படியிருக்கலாமோ

(வசனம்)கேளும்பிர்ம்மதேவனே உலகத்தில் எந்தஇருச்சபையிலு
ம்நீதிசாரங்களை எந்நேரமும்பேசிக்கொண்டேயிருப்பார்தளஉம்முடை
யகொலுவில்வெகுதபசிகளிருந்தும் இராஜாக்களிருந்தும்ஒருசாரமா
கிலும்பேசவில்லையேஇப்படிக்கிருக்கலாமோபிர்ம்மதேவனே

விஸ்வாமித்திரன்-வசிஷ்டருக்குச்சொல்-விருந்தம்

இப்படியிருக்கலாமோவென்றுமேவசிஷ்டாநீதான்.
ஒப்புடன்சொல்லவந்தாயுனக்கென்னதெரியுமத்தை
செப்படாபார்ப்போமிந்ததிசைமுகனின்னுள்ளோர்கள்
எப்படியாறுலுமெச்சயிடந்தேடிக்கொள்ளுவாயே.

(வசனம்)அடாவடாவசிஷ்டா இந்தசபையிலேநானிருப்பதையும்பா
ராமல்எங்களைப்பார்த்துநகைத்து இப்படியிருக்கலாமோவென்றுநீகே
ழ்க்கலாமா நல்லதுஉலகத்திலென்னசாரம்வழங்குகின்றது இங்கேஎ
ன்னவழங்காமற்போனதுநீதானிந்தநீதிசாரங்களை இந்தசபையில்வி
ளம்படாபார்ப்போம்இவர்களெல்லாமெச்சுவார்கள்.

வசிஷ்டர்-விஸ்வாமித்திரனுக்குச்சொல்விருத்தம்.

நீயெனைக்கேழ்க்கலாமோ நில்லடாவிஸ்வாமித்திரா
பேயரைப்போலெழுந்துபினத்துராயுந்தனுக்கு
ஞாயமுந்தெரியுமோடாநான்முகன்கொலுவினுந்தன்
சாயமுமெடுத்துப்போகுஞ்சபைவிட்டிநடந்திடாயே

வசனம்)அடாவாடாவிஸ்வாமித்திரா நீயென்னைக்கேழ்க்கத்தகுமாஉ
ன்னுடனேநான்பேசவில்லைநீயேன் பேயனைபோலேபினத்திவதியுரு
ய்உனக்குஞானவுசிதந்தெரியுமா யோக்கியாயோக்கியந்தான்தெரியு
மாவீண்வேலைவைத்துக்கொள்ளாதே இந்தபிர்ம்மசபையிலே உன்னு

டையசாயமெடுத்துப்போகக் காலமாச்சுதுபேசாமல்இச்
சபையைவிட்டெழுந்துபோடா விஸ்மாமித்திரா.

விஸ்வாமித்திரருக்கும்-வசிஷ்டருக்கும்-தர்க்கம்.

கண்ணிகள்-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்

விஸ்வாமித்திரன்-சொல்லல்

சட்டஞ்சட்டமெந்தன்கட்டுக்குளகப்பட்டாய்
கெட்டமதியுடையவசிஷ்டா-மெத்த
துஷ்டத்தனமுடையவசிஷ்டா

வசிஷ்டர்,சொல்லல்

துஷ்டப்புத்தியினாலேகெட்டுப்போ[illegible]ங்காலமோ
சட்டமாய்வரலாச்சேகோசிக[illegible]வுன
பெட்டுங்குலையலாச்சேகோசிகா

விஸ்வாமித்திரர்-சொல்லல்

இத்தண்டசபையினிற்கற்றவன் போலவுந்து
மெத்தபேசாதடாவசிஷ்டா-மெத்த
தத்திவீசாதடாவசிஷ்டா

வசிஷ்டர்,சொல்லல்

கத்தித்திடாதேசெத்தநாயைப்போலே
ஒத்தியிருந்திடடாகோசிகா-எந்தன்
வித்தைதெரிந்திடடாகோசிகா

விஸ்வாமித்திரர்-சொல்லல்.

வெள்ளையாய்நரைத்துநீதள்ளாடுங்கிழமாகி
துள்ளலைக்காட்டாதேவசிஷ்டா-மெத்த
சள்ளைகூட்டாதேவசிஷ்டா

வசிஷ்டர்-சொல்லல்

சள்ளையெனக்கேண்டா கொள்ளிபிசாசைப்போல்
துள்ளலைத்துள்ளுறாய்கோசிகா
தள்ளித்தள்ளிவாராய்கோசிகா

விஸ்வாமித்திரர்-சொல்லல்

எந்தனுக்கெதிர்நின்றுவந்தமட்டும்பேசாதே
தந்ததம்விழவடிப்பேன் வசிஷ்டா-வேசி
மைந்தாயுனைக்கெடுப்பேன்-வசிஷ்டா

வசிஷ்டர்-சொல்லல்

மைந்தனுக்குச்சிறுமெனத்தவிதமாமென்று
இந்தசபையிற்கேளுங்கோசிகா-அதி
எந்தவழியிலமீளுங்கோசிகா

விஸ்வாமித்திரர்-வசிஷ்டருக்குச்சொல்-விருத்தம்

எனைபார்த்துப்பயந்திடாமலென்னுடனெதிர்த்துயெந்தன்
மனதினையறிந்திடாமல்மடையனேவசிஷ்டாநீதான்
இனியாகிலும்புத்தியுண் டாயிருந்திட்டாலென்துகோபம்
தனைநீக்கியுன்னையிந்தசபையினில்வைப்பேன்கண்டாய்

(வசனம்)அடாவடாவசிஷ்டாஎன்னுடையகோபத்தைப்பார்த்துப
யப்படாமலெதிர்த்துஉத்தரவுக்குஎதிருத்தரவு கொடுத்தாயல்லவாங
ல்லது இன்னேரம் இந்தபோபத்தைநிறுத்தினேன் இனியாகிலும்நீய
ங்கியிருந்தால்இந்தசபையிலுன்னை வைப்பேனில்லாவிட்டால்உனக்
குகெதிவேறேநடக்கும்பாரடாவசிஷ்டா.

வசிஷ்டர்-விஸ்வாமித்திரனுக்குச்சொல்-விருத்தம்.

என்னடாவிஸ்வாமித்திரா யிந்திராசன்முன்னில்
சொன்னசொல்சபையோர்கேட்டுசோர்ந்துமேநகைநகைத்தி
உன்னிடபவுஷையெல்லாமுள்ளத்தில்வைத்தாரிந்தச்
சின்னமேன்பெற்றுக்கொண்டாய்சலவையுடனிருக்கொணுதோ

(வசனம்)சபாசடாவிசுவாமித்திரா இந்திராசன்முன்னிலும்இன்
னம்இந்தசபையோர்முன்னிலும்நீசொன்னதைக்கேட்டுகுலுங்கநகைத்
து அங்ஙனேசேர்ந்து உள்ளத்திற்வைத்துக்கொண்டார்கள் அதுவே
போதும்இந்தச்சின்னமேன்பெற்றுக்கொள்ளவேணுங்கோசிகா.

தேவேந்திரன்-விஸ்வாமித்திரருக்குச்சொல்-விருத்தம்

வேதத்தின்பயனுணர்ந்த விஸ்வாமித்திரரேகேளீர்
மாதவத்தினிலுயர்ந்த வசிஷ்டமாமுனிவரோகேள்
எதுகாலமுமுங்கட்குயிந்த போராட்டந்தானே
ஆதலாலினிபோராட்டமாகாது பொருத்திடீரே

(வசனம்)வாரும்விஸ்வாமித்திரரேகேளும் வசிஷ்டமாமுனிவரேஎ
ந்தகாலமும் உங்களுக்கு இந்தபோராட்டந்தான் மற்றொன்றுமில்லைஆ
னதால்இப்போது என்னைப்பற்றி பொருத்திருங்கள் காரணவிசேஷ
ம்பேசவேணும் விசுவாமித்திரரோ வசிஷ்டமகாமுனிவரே.

பிர்ம்மா-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்

இந்திராசனேகேளிருடிகளிருவருக்கும்
வந்தபொல்லாங்குக்கேற்ற வழிதேடிசொற்கொடுத்தீர்

மூந்திபோர்செய்தோருந்தன் மொழிதள்ளதிருந்திட்டீர்கள்
சந்தோஷமிந்தஞாயஞ் சகலர்க்குமழகதாச்சே

(வசனம்) கேளும்இந்திராசனே நல்லவுபாயமெடித்து இவர்க
ளுக்கேற்றநியாயஞ்சொல்லி சண்டையைநிறுத்திவிட்டீர் அவர்களும்
உமதுசொல்தள்ளாமல் நின்றுவிட்டார்கள் அதுவேசகலபேருக்கும்
அழகாச்சுது என்மனமுமழகாச்சுது இந்திராசனே.

தேவேந்திரன்-பிர்மாவுக்குச்சொல்-விருத்தம்

சிஷ்டிக்குங்கர்த்தனே திசைமுகத்தயனேகேளீர்
சட்டமாய்கொலுவிருக்குந் தபசிகள்பெரியோரெல்லாம்
பொட்டெனவெழுந்திருந்து புகலிடம்போகாமுன்னம்
கட்டுகாரணவிசேஷங் களைக்கேட்டேயனுப்புவீரே.

(வசனம்)கேளும்பிர்மதேவரே இந்தவதிஷ்டர் விஸ்வா மித்திரா
ளே யின்றைக்கிங்கே நேரமாயிற்று மேலுமுமது கொலுவில் வந்திருக்
கும்பெரியோர்களெல்லாம் அவர்களிருப்பிடம் எழுந்துநடவாமுன்ன
ம் இன்னமேதாகிலுங்காரண விசேஷமறியவேண்டியதாயிருந்தால்அ
றிந்துகொண்டு யாவருக்குஞ் செலவுகாரும்பிர்மதேவனே.

பிர்மா-வேதவியாசருக்குச்சொல்-விருத்தம்

வேதவேதியர்கள்சூழும் வியாசரேபூமிதன்னில்
ஆதினத்துக்கோர்பிள்ளை யாகிலும்மில்லாதார்க்கு
நீதியாய்ச்சொர்க்கபாக்கியம் நேரிடுமேவறிந்து
தீதிலாமலேயெனக்குத் திறமுடன்தெரிவிப்பீரே

(வசனம்)கேளும்வேதவியாசரே பூமியிலாருக்காகிலும் பிள்ளையில்
லாதிருந்தால் அப்பேர்க்கொற்றவர்களுக்கு சொர்க்கமுண்டோ இல்லை
யோசொல்லும் வேதவியாசரே.

தேவியாசர்-பிர்மாவுக்குச்சொல்-விருத்தம்

வெரிவதுமென்னபிர்மதேவனே சொல்லக்கேளீர்
அரிகுவீரென்றுபிள்ளை யாகிலுமில்லாதார்க்கு
இருபிறப்பினிலுஞ்சொற்க்க மில்லாதனெனவேதத்தில்
முறையமதிடுதுவேத முற்றிலுஞ்சோதித்தேனே

(வசனம்)கேளும்பிர்மதேவனே உலகத்தில் பிள்ளையில்லாதவர்களு
க்குச்சொர்க்கமில்லையென்று சட்டமாய் வேதத்திற்சொல்லுகின்றது
முற்றிலும் நன்றாகப்பாரிசோதித்தேன் பிர்மதேவனே

மிருகண்டர்வேதவியாசருக்குச்சொல்விருத்தம்

உள்ளமுங்கலங்கவேதா னுரைததிடும்வியாசரேகேள்
பிள்ளைதானில்லாவிட்டாற் பிள்ளையுண்டாவதற்கு
கள்ளமில்லாமலெநதன் கருத்தினுக்கறியத்தானே
மெள்ளனவுபாயமொன்று விளம்பிடவேணுமையா

(வசனம்) கேளும் வேதவியாசரே பிர்மாமொழிக்குச்சரியாய் அத்தாட்சிநீர் சொன்னதுஞ்சரியே பூமியில் இல்லாதபேருக்குப் பிள்ளை வேண்டுமென்கிறதாய்ஆசையுமிருந்துபிள்ளையில்லாமலிருந்தால்அவர்களுக்குப்பிள்ளையுண்டாகிறதற்கு உபாயமுண்டாயில்லை அதை விளங்கச்சொல்லவேண்டுமையாவேதவியாசரே.

வேதவியாசர் மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

உபாயமுமென்னவேத முறைதெரிமிருகண்டாகேள்
தபோபலத்தாலேபிள்ளை தான்வரச்செய்யவேணும்
சபாபதிதன்னைநோக்கித் தபசிலேகொண்டாலீசன்
குபேரனைப்போலேபிள்ளை கொடுத்தாட்சிக்கின்றாரே

(வசனம்)கேளும் மிருகண்டரே பிள்ளையில்லாதபேர்அடர்ந்தவனத்திலேசென்றுபரமசிவத்தைநோக்கிஓமனதாகஸ்திரீகளுடன்கூடதபத்தைச்செய்தால் புத்திரபாக்கியங்கொடுத்தாட்சிப்பார்மிருகண்டரே

பிர்மசபையிலுள்ளயாவருக்குஞ்சொல்-விருத்தம்

இந்திராசனேநல் லெழில்வேதவியாசரேகேள்
சுந்தரச்சபையில்வந்து துலங்குமற்றவரேகேளீர்
மந்திரவேதசாஸ்திர மறிந்ததுபோதும்போதும்
அந்தரங்கமதாய்வாழு மாசிர்மம்நடந்திடீரே

(வசனம்)கேளுந்தேவேந்திரமகாராசனே வேதவியாசரோமற்றுமிருக்கப்பட்ட தபசிகளேநீதிசாஸ்திரங்கேட்டதுபோதும்தேசகாலமாச்சது அவரவர்களாசிர்மம்போய் வாருங்கள்சபையிலுள்ளவர்களே

சபையோர்சொல்-வசனம்

அப்படியே போய்வருகிறோம் பிர்மதேவரே

பொதுவிருத்தம்

மதிநிசைமுகவனூர்தன் மகாசபைதான்கலந்து
பதிதனக்கெழுந்தானிந்திரன் பரிவுடனடந்தான்பின்பு

அதிஅரிதமாய்வாழுமாசிர்மம்நடந்தார்யாரும்
சுதனிலாமிருகண்டையர் துயரமாய்ப்புலம்பலுற்றார்

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் பிர்ம்மசபைகலைந்துபிர்ம்மதேவன்அ ரண்மனைக்குசென்றார்தேவேந்திரமகாராசன் அமராபுரிபட்டணத்தி ற்குநடந்தார் இப்பால்மிருகண்டமுனி புத்திரனில்லாதசோகத்தினால் பிரலாபிக்கிறவிதங்காண்க.

மிருகண்டர்சொல்-கொச்சகம்.

பிர்ம்மசபையடுத்ததற்குப் பிரியமுடன்வியாசர்சொன்ன
கர்மவிதிக்கென்னசெயவேன் கயிலையனேயாலுமென்ன
துர்மதிகள்செயதேனோ துலையாதோசங்கரனே
மர்ம்மம்வைத்திருந்துமென்னை வஞ்சனைகள்செய்தீரோ

(வசனம்)ஹாகராசர்க்கனேபிர்ம்மசபையிலேவேதவியாசர்சொன் னமொழிக்குசரியாகயெனக்குப்புத்திரனில்லையே அதுதானோ யென க்குங்கதி நானென்னா துர்ப்புத்திநினைத்தேனோ அல்லதுஉமதுசெய லோ இனிசொர்க்கங்காணாத சடலமிருந்தென்னகர்த்தனே

மிருகண்டர்சொல்-புலம்பல்

கண்ணிகள்-இ-ம்-கண்டாபீகாதாளம்

கர்த்தனேநானென்னசெய்வேன் அத்திமாமுகனைப்பெற்ற
ஈஸ்வரா-மயேஸ்வரா
புத்திரனில்லாதவர்கள் மெத்தபாவியென்றுரைத்தார்
ஆதியே-பரஞ்சோதியே
பிள்ளையில்லாதார்க்குச்சொர்க்க மில்லையென்றுவியாசர்சொன் [னார்
ஈஸ்வரா-மயேஸ்வரா
உள்ளமுங்கலங்கியுடல் துள்ளியேவிழுந்தேனையா
ஆதியே-பரஞ்-சோதியே
ஒருசெவியில்நாராசங்கள் சொருகினப்போலுருகினேனே
ஈஸ்வரா-மயேஸ்வரா
உரிசையானவுடலிருந்து மாவதினாலென்னபலன்
ஆதியே-பரஞ்-சோதியே
இச்சடலமிப்புவியில் வைத்திருந்துமாவதென்ன
ஈஸ்வராமயே ஸ்வரா
தக்ஷணமேவிட்டுவிட்டால் மெச்சிடுமேலோகமெங்கும்
ஆதியே-பரஞ்-சோதியே
நான்முகன் சபையிலென்னை யேனகைக்கவிதித்தாய்
ஈஸ்வரா-மயேஸ்வரா

மான்மழுவணிந்தோனேநீ தான்கபடமாயிருந்தால்
ஆதியே-பரஞ்-சோதியே
பதியிருந்தும்கிதியிருந்தும் பலன்றாராதுநாளெயென்றார்
ஈஸ்வரா-மயேஸ்வரா
கதியினைத்தந்திடுவதற்கோ காதல்சுதன்வேணுமென்றார்
ஆதியே-பரஞ்-சோதியே
இந்தசேதியறிந்திடாம லிருந்திட்டோமேமலடாக
ஈஸ்வரா-மயேஸ்வரா
எந்தறையேலயாவதொன்று மில்லையெல்லாமுன்செயலே
ஆதியே-பரஞ்-சோதியே
இப்பவாகிலுஞ்சுதனை யெப்படியாகிலுந்தருவாய்
ஈஸ்வரா-மயேஸ்வரா
தற்பராநீயேகதியே னப்பனேரக்ஷித்தருள்வாய்
ஆதியே-பரஞ்சோதியே

மிருகண்டர்-சிஷர்களுக்குச்சொல்விருத்தம்.

அன்னையும்பிதாவென்றென்னை யடுத்தசிஷர்களேகேளீர்
சொன்னசொற்கேட்டமாத்திரந் துயரமுமதிகமானல்
என்னமாய்நடப்பதப்பா யிளைப்புமேமிகவுமாச்சு
இந்நிலந்தனிலிருந்து இளைப்பாரிநடப்போம்வாரீர்

(வசனம்)கேளுங்களப்பாசிஷர்களே அந்தர்மசபையிலேவேதவியாசர்சொன்னசொல்லைக்கேட்டு நெஞ்சங்கலங்கித்துயரமும்அதிகமாயிளைப்புகொண்டுநடக்கப்போனல் நடைகொடுக்கவில்லை ஆதலால் இந்தசோலைநிழலில்சற்றுநேரமிருந்து இளைப்பாறிஅதன்பின்புநடப்போம் இருங்களப்பா சிஷர்களே.

சிஷர்கள்-மிருகண்டருக்குச்சொல்-வசனம்.

அப்படியேதேவரீர் சொற்படிகாரம்இருக்குறேனுசுவாமி

பொது விருத்தம்.

சதுர்முகன்சபைக்குவந்த தபசிமாமிருகண்டையர்
சுதனிலாதாற்றயங்கித் துயரமாய்வருகும்போது
ததியறிந்துதவஞான சதிராளைக்காணவேண்டி
மதியுள்ளரிஷிகளபத்னிமார்களுமிதோவந்தாரே

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் பிர்ம்மசபைக்குவந்த மிருகண்டமகாமுனிசுதனில்லாததுயரத்தால் மிக்வும்வாடிசோலையிலிருக்கும்போது அவருடையபத்தினியான ஞானச்சதிராளைக் காணும்படியாகரிஷிபத்தினிகள் வருகிறவிதங்காண்க

ரிஷிபத்தினிகள்வருகிற-தரு இ-ம்-ஆநந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

சீலமையுடன்றவத்தைவலுமையுடன்புரியும்
ரிஷிபத்தினிமார்கள்வந்தார்

அநுபல்லவி.

உலகிலுள்ளபெண்களு மோடிவந்தடி தாழ
ஒருமையானமாதர்க ளருமையுடனே சூழ
உத்தமியான போதர்-ரிஷி
பத்தினிமாதர்கள்நீதர்
உண்டென்றாலுண்டு இந்தஅவைடமதிக்கப்பெற்றோர்
ஓதுதற்கொரு ஆதிமெய்ப்பொரு
ளதனைத்துதித்தேதும் விட்டவர்
ஒருமையாக மன முறுதியாகதினங்
கருதிவைத்த சிவனுறுதிபெற்றருளும் (சீலமை)

முதற்பத்தினி-மற்றபத்தினிகளுக்குச்சொல்-கொச்சகம்

என்னுயிருக்குயிரான யிருடியர்தன் றேவியரே
இங்காசிர்மம்விட்டு யெலலவருந்தானடந்து
வன்னமலரிருக்கும் வனந்தேடிமலரெடுத்து
அன்னிடநாம்கொண்டையினிற் சூடிவருவோம்வாரீர்

(வசனம்)கேளுங்களம்மாரிஷிபத்தினிமார்களேநாமெல்லோரும்ஆசிர்மம்விட்டுஒன்றாய்க்கூடிக்கொண்டுகேளிவிலாசமாயவனங்கள்தோறும்போய்அவ்விடத்திலிருக்கப்பட்டநந்தவனங்களிற்புகுந்துநல்லசாதியானமலரெடுத்து கொண்டையில முடித்துக்கொண்டுமகா வேடிக்கையாய்ப்போகையிலும்வருகையிலும்பந்தெடுத்துவிளையாடிவருவோம் வாருங்களடியம்மா.

மற்றபத்தினிகள்-முதற்பத்தினிகளுக்குச்-சொல்-கவி

மெல்லியேநீயுவினவியவாறு
மல்லிகைமுல்லைநலல மலர்சூடிவருவோம்

(வசனம்)அப்படியே உன்சொற்பிரகாரம்வருகிறோம் போவோம் வாருமம்மா.

பத்தினிகள்-சொல்-த-ரு-இ-ம்-நாதநாமக்கிரியை-மிசுரதாளம்.

பல்லவி.

பத்தினிமாதே-நந்த-வனம்பாரடியிதே

அநுபல்லவி

சுத்திலுமவரவர் சோதித்தமலரெல்லாம்
வைத்திடாமற்பறித்து மடியிலேகட்டுங்கள் (பத்தினி

சரணங்கள்.

பெண்ணேயிக்குறிபார் செந்தாமரை
யொண்ணே நிற்குதுபார்
கண்ணேநீயுன்னிடகைதொட்டுப்பறிக்காதே
இன்னுநானதின்மேலே யிச்சைக்கொண்டேனடி (பெண்)
சுந்தரமாதே சந்தனச்சோலே
தோன்றுவ திதே
வந்திருமெதிராக வருகுது பந்திதோ
முந்தினபிறகு நீமோசஞ்செய்யாதடி (சுந்தா)
மங்கையேயோடி பந்தையெடுத்து
இங்கேநீ வாடி
சங்கையில்லாமலே சாலேயிலாடுவோம்
பங்கமாய்த்தோர்த்தோரைப்பத்துகுட்டுகுட்டுவோம் (மங்கை)

ரிஷிபத்தினிகள்சொல்-விருத்தம்

வேலேப்போல்விழியைவாய்த்த மென்கொடிமாதேகேள்நன்
னூலேப்போலிடைகொள்நல்ல நோன்புசெய்மாதேகேளீர்
காலமாய்நாமெல்லாம் பந்தாடினதுவுபோதும்
கோலமாய்ப்பகடைகையிற் கொண்டுசற்றுடுவோமே

(வசனம்)கேளுங்களம்மா ரிசிபத்தினிகளே நாம்பந்தாடினதுபோதும்இப்போது சற்றுநோம்நாம்உட்கார்ந்து பகைடையாடுவோம்வாருங்களம்மமார்களே.

மற்றரிஷிபத்தினிகள்-சொல்வசனம்

ஆனல்அப்படியே-ஆடுவோம்வாராயம்மா.

ரிஷிபத்தினிகள்-பகடையாடுகிற

தரு-இ-ம்-கௌளிபந்து-ரூபகதாளம்.

முதலரிஷிபத்தினிசொல்லல்.

சந்திரகாந்திமிகுந்த சுந்தரமாதேநான்
முந்திவிநாயகனை சிந்தைபிற்றுதித்தேன்
தந்திரப்பாச்சிகை யெடுத்தேந்தன் கையிலுனிதோ
தொந்தமாய்விடுத்தே னிந்தவிந்தையைப்பாராய்

உ-வதுரிஷிபத்தினி-சொல்லல்

விந்தையைப்பாராய் நீயென்றுசொன்னஅன்னமேயென்
மந்திரத்திலகப்பட்ட யென்நலவிதாணியே

உந்தனைக்கெலித்துவாவென்றிந்தவேளையில்நான்
பந்தமாய்விடுத்துவிட்ட அந்தத்தைப்பாராய்

௧-வது-ரிசிபத்தினிசொல்லல்

ஒன்பதுபத்தும்பகூடஒன்ருய்க்கூடவிழதான்
தென்புடனபாச்சிகையெடுத்தேவிட்டேனிதோ

உ-வது-ரிசிபத்தினிசொல்லல்

அன்புடன்பனிரண்டு அழகாய்த்தேடிவிழநான்
இன்னமும்பாச்சிகையைதந்தொட்டேவிட்டேனிதோ

முதலாவது-ரிசிபத்தினிசொல்லல்

குங்குமங்கருப்புசோடு கொண்டுவிட்டினேனிந்த
சிங்காரம்பாரடிஅம்மாதெய்வீகமாகவே

உ-வது-ரிசிபத்தினிசொல்லல்

குங்கமஞ்சளும்பச்சையுஞ்சோடுகட்டினேனடி
சங்கையில்லாமலே பாரடிதையலேமாதே

முதலாவது-ரிசிபத்தினிசொல்லல்

எட்டிமறுக்கால்துகையாலே யெண்ணிநான்மெள்ள
இஷ்டமஞ்சள்பச்சைசோடெடுத்தெறிந்தேனே

உ-வது-ரிசிபத்தினிசொல்லல்

வெட்டுபகையுள்ளதுகைமெள்ளவேபோட்டுநீ
கட்டுங்குங்குமங்கருப்பைக்கண்டெறிந்தேனே

முதலாவது-ரிசிபத்தினிசொல்லல்

கட்டினசோட்டைக்கலைத்தகன்னியரேநானிதோ
பொட்டெனக்கெலித்துனைப்போதுவந்தேனே

உ-வது-ரிசிபத்தினிசொல்லல்

சட்டமாயுரைத்திடுஞ்சமர்த்தையறியயென்
இஷ்டதேவதையாலுன்னையிதோகெலித்தேனே

முதலாவது-ரிசிபத்தினிசொல்லல்-சொக்கம்.

வந்துவெகுநேரமாச்சுதடியம்மையரே
எந்தன்கணவனுக்கென்னென்றுசொல்லுவேனுன்
முந்தியவர்கேபிப்பார்மொய்குழல்மாளேநாமும்
இந்தவனம்விட்டுயிருப்பிடம்போய்ச்சேர்வோமே

(வசனம்)அடியம்மாரிசிப்பத்தினிமார்களேநாம்வந்துவெ
குநேரமாச்சுது எனதுபத்தாவாகியகணவன்கோபிப்பாஇ
ந்தவனமவிட்டுஆசிர்மம்போவோம்வாருங்களடியம்மமார்க
ளே.

மற்றரிஷிபத்தினிகள்முதல் ரிஷிபத்தினிக்குச்சொல்

கொச்சகம்

எத்தனைநாளஙகடியிப்படியுல்லாசமதாய்
பத்துபேருங்கூடி பரிவுடனேவந்ததுவும்
தந்தைஞானச்சதிரான் தானிருக்குமிடமிதுவே
சற்றவளைப்போய்பார்த்துநாம் நடப்போம்வாருமம்மா

(வசனம்)கேளம்மாரிசிபத்தினியே இப்படிநாமெல்லோரும்ஒன்று க்கூடிவந்துவெகுநாளாச்சுது அதோமிருகண்டமகாமுனியினிடதே வியான ஞானச் சதிரானுண்டைய ஆசிர்மமாணையால்நா மெல்லோரும் போய்ஞானச்சதிரானைக் கண்டு பேசிபிறகுநமது ஆசிர்மம்போய்சேரு வோம்வாராயம்மா

முதல்ரிசிபத்தினிசொல்-வசனம்.

ஆனால் அப்படியேசெய்வோமம்மா

ரிசிபத்தினிகள்-ஞானச்சதிரானுக்குச்சொல்-கவி

ஆரம்மாசேய்மிருகண்டையர்தன்தேவியாளே
ஆசிர்மத்திலருள்ஞானச்சதிரேவாராய்

ஞானச்சதிரான்-ரிஷிபத்தினிக்குச்சொல்-கவி

சதிரேவாவென்றெந்தன்றலைவாயற்படியில்நின்று
மதியாலழைப்பாதாரே வருகுவீர்வளவிற்றுனே

ரிஷிபத்தினிகள்ஞானச்சதிரானுக்குச்சொல்-கவி

வளவினிலழைத்தமாதே வந்துவுன்முகத்தைக்கண்டோம்
இளமயிலாளேநீதா னெங்களையறிவாயோடி.

ஞானச்சதிரான்-ரிசிபத்தினிகளுக்குச்சொல்-விருத்தம்

ஆகமும்பரிவுமுள்ள அறிவையரேகேளீர்கள்
நாகமங்கையரோசேடன் ரத்தினிமணிவிளக்கோ
தேகமுமகிழ்ந்துயென்னைத் தேடியேவரப்பெற்றேனே
வாகைசேர்நீங்கள்வந்த வாரதுவுரைசெய்வீரே

(வசனம்)வாருங்களம்மா நீங்களார் நாகமங்கையரோ முனிநாதரு டையதேவிகளோ அல்லதுஆதிசேஷனுடைய சிரசில்விளங்கப்பட்ட ரத்தினமோ நீங்கள் என்னிடத்திற்குவந்தகாரியத்தைச் சொல்லுங்க ளம்மா.

ரிஷிபத்தினிகள்-ஞானச்சதிராளுக்குச்சொல்-விருத்தம்.

மாமுனிதேவியான மயிலேமெஞ்ஞானப்பெண்ணே
நாமுமேரிசிகள்பத்தினிநங்கையேயுன்னைப்பார்த்து
க்ஷேமமாய்ப்போவோமென்று சிறந்தவாசிர்மந்தன்னில்
நேமகமாகவந்தோம் நிலையெங்கள்வாறுதானே

(வசனம்)கேளாயம்மா ஞானச்சதிரே நாங்களோ ரிசிபத்தினிமார்கள்இன்றையத்தினம்வேடிக்கையாய்ப்புறப்பட்டோம்புறப்பட்டவிடத்திலஉன்னையுங்கண்டு பேசிப்போகலாமென்று உன்னுஆசிர்மம்தேடிவந்தோம்இதுதான் எங்கள்வரலாறு அம்மா

ஞானச்சதிராள்-ரிஷிபத்தினிக்குச்சொல்-விருத்தம்.

வந்ததேபாக்கியம்பெற்றேன் மாமுனிதேவிமாரே
சந்தோஷமாகயிந்த தழைத்தவாசிர்மந்தன்னில்
எந்தனுடைனிதாய்நீங்க ளிபோவருங்கூடிக்கொண்டு
பந்தாட[illegible]வுடன்வருகுவீரே

(வசனம்)அம்மா ரிஷிபத்தினிமார்களேநீங்கள்ரிசிபத்தினிமார்களென்று என்னுடை ஆசிர்மந்தேடிவந்தபோதே நான் முன்செய்தபாக்கியந்தான் இப்பவும்ஆசிர்மத்தில் நீங்கள்சந்தோஷமாய்என்னுடனேகூடிசற்றுநேரம் பந்துவிளையாடவேணும்வாருங்களம்மாரிசிபத்தினிமார்களே.

ரிசிபத்தினிகள்-ஞானசசதிராளுக்குச்சொல்-விருத்தம்

மண்டலமெங்குநல்ல மாமுனியென்றபேர்
கொண்டவேதத்தி ஞானக் குச்சகபாலனுமிரு
கண்டர்தன்தேயாரே சித்தசெங்கரத்திலேதான்
அண்டொணுப்பந்தையேந்தி யாடுவோம்வருகுவாயே

(வசனம்)கேளுமம்மா ஞானச்சதிரே அப்படிகையைக்கு அணடாத பந்துகளையெடுத்து ஆடுவோம் வாருமம்மா

ரிசிபத்தினிகளும்-ஞானச்சதிராளும்-பந்தாடுகிற

தரு-இ-ம்-புன்னுகவராளி-அடதாளம்
ஞானச்சதிராள்-சொல்லல்

பந்தெடுத்தேனிதோவாரடி
பார்த்துப்பிடித்துநீ சேரடி
அந்தரந்தன்னிலே சுழன்றுவருகுது
தந்திரத்தையூந்திப்பிடியடி (பந்தெ

ரிஷிபத்தினிகள்-சொல்லல்

இதோஅதோபார்தென்றுருட்டிருநீ
யென்னடியெனைமெத்தமிரட்டுறாய்
பதித்தகொண்டையவிழ்ந்து பாரினில்புரண்டாலும்
குதித்ததைப்பிடிப்பேனே கோதையரேயடி (இதோ

ஞானச்சதிராள்-சொல்லல்

வேகமாய்வருகுதுபந்தடி-அதின்
முன்னேயுன்பந்தைநீமுந்தடி
மோகத்திறற்பந்தைமுடுக்காயெயிங்கே
முன்பின்பாராதேநீ யென்முன்னேயில்லடி (வேக)

ரிஷிபத்தினிகள்-சொல்லல்

அப்படிநான்மோசம்போவேனோ-போனால்
அருந்தவரிஷிபத்தினியாவேனோ
எப்படியாகிலுங்கெலிப்பேன்மேயல்லாமல்
எளிதத்திற்கிடங்கோலினைவக்கிறதி (அப்படி)

ஞானச்சதிராள்-ரிஷிபத்தினிக்குச்சொல்-கொச்சகம்

நாகரீகமுள்ளதிரு நங்கையரேநீங்களெல்லாம்
வேகமதாயென்னுடனே மேல்விழுந்துவிளையாடி
ஆகமெத்தமெல்லியரே அலுத்துக்காதடைத்தீரே
தாகவிடாய்தீருங்கள் சத்தரிஷிதேவிகளே

(வசனம்)வாருங்களம்மா ரிஷிபத்தினிமார்களே நீங்களெல்லோரும் என்னுடனே கூட இந்நேரம் பந்துவிளையாடிமெத்தவுங்காதுவிடாய்க் கொண்டிருந்தீர்கள் ஆகையால்நீங்களெல்லோரும்நமதுஆசிரமத்தில் தாகபானஞ்செய்யுங்களம்மா ரிஷிபத்தினிகளே

ரிஷிபத்தினிகள்-ஞானச்சதிராளுக்குச்சொல்-கொச்சகம்

மெள்ளவந்துரைத்தபெண்ணே விளம்புவோங்கேளுமுந்தன்
வள்ளல்தானெங்கேயடி மைந்தனுண்டோசொல்லடிநீ
பிள்ளையில்லாதாண்மனையில் பெண்ணேதாகமுமருந்தோம்
உள்ளதிருமாமயிலே யுண்மைதனைச்சொல்வாயே.

(வசனம்)கேளுமம்மா ஞானச்சதிரே நாங்களுன்வீட்டில்தாகபானஞ்செய்வது இருக்கட்டும் உன்பர்த்தாவான மிருகண்டரிஷியெங்கே உங்களுக்குப்புத்திரசந்தானமிருக்குதா நாங்கள்கேட்டவார்த்தைக்கு உண்மையாகச்சொல்லுவாயம்மா.

ஞானச்சதிராள்-ரிசிபத்தினிக்குச்சொல்-சொக்கம்

கள்ளமதுசொல்வதில்லைக் கதித்தமுனிதேவியரே
வள்ளல்நைமிசாரண்ய மாதவத்தோரிடஞ்சென்றூர்
தெள்ளியதோர்பிள்ளையில்லை சிவன்செயலோநானடியேன்
உள்ளங்கலங்கிமெத்த வுருகுறுநானென்னசெய்வேன்

(வசனம்) கேளுங்களம்மாரிசிபத்தினிமார்களேஉங்களுக்குப்பொய்யைச்சொல்வதில்லை என்பத்தாவாகிய மிருகண்டர்நைமிசாரண்யவனம்போயிருக்கிறூர் எங்களுக்குப்பிள்ளையில்லைநீங்கள்சொன்னவிசேஷத்தைக்கேட்டு எனதுள்ளமுருகிப்போகின்றது என்னசெய்வேன்எப்படியாகிலுந் தாகம் அருந்தவேணுமம்மா.

ரிசிபத்தினிகளுக்கும்-ஞானச்சதிராளுக்கும்-தர்க்கம்-தரு

இ-ம்-பந்தாசந்தோடி-ஆதிதாளம்

ரிசிபத்தினிகள்-சொல்லல்.

புத்திரனில்லாதவீட்டில் போஜனம்புரிசியோமே
புகழ்பெற்றரிஷிசாதி யெங்கள்சாதி அம்மா

ஞானச்சதிராள்-சொல்லல்.

எங்கள்ஜாதியீதென்று மென்சாதியீனமென்றும்
இயம்பலாமோவுங்கட்கு வெறுப்பாச்சோ அம்மா

ரிசிப - வெறுப்பாகநாங்களிப்போ வேருகச்சொல்லவில்லை
விளங்கப்பிள்ளையில்லாத சஞ்சலந்தான் அம்மா

ஞான - சஞ்சலமாவதேது சதுர்முகன்றலைவிதியைத்
தடுக்கவும்நீதியுண்டோ அம்மமாரே அம்மா

ரிஷிப - அம்மையைப்பாகம்வைத்த ஆண்டவனைத்தொழுதால்
ஆதிநாளிற்செய்த வினைதீரும் அம்மா

ஞான - வினைதீர்ந்தபின்பாகிலு மிருகண்டமாமுனிபேர்
விளங்கவெங்களுக்கொரு பாலனுண்டோ அம்மா

ரிஷிப - பாலனிடபாக்கியமும் பதவிந்தான்பெறுவீர்
பாருநான்சொன்னபடி செய்யுமம்மா அம்மா

ஞான - செப்வேனைமிசாரண்ணியஞ் சென்றமுனிவர்வந்தால்
சேதியுரைத்துத் தபஞ்செய்வேன் அம்மா

கூ

ரிஷிபத்தினிகள்-ஞானச்சதிராளுக்குச்சொல்-கவி

அப்படியேசெய்வா யருள்ஞானச்சதிரே
மெய்ப்புடனுய்செல விடையதுதருவா

ஞானச்சதிராள்-ரிஷிபத்தினிகளுக்குச்சொல்-கவி

பொற்புடனெனக்குப் புத்திகளுரைத்த
கற்பினிலுயர்ந்த கன்னிகளேசெல்வீர்

ஞானச்சதிராள்-புலம்பல்-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

தெய்வமேயிதுவென்ன தீவினைவார்த்தையென்
செவியிற்கேட்கலானேன் தெய்வமே
மெய்யானமாதர்களென வீடுவந்துசொன்ன
விபரீதமென்னசொல்வேன் தெய்வமே
சின்னசொல்லைக்கேட்டுத் தியங்கிடவெந்தனைச்
சென்மித்ததென்னவோ தெய்வமே
என்னுடன்சமைதையா யிருந்திடும்பெண்கள்வந்
யேனிதஞ்செய்திட்டாரே தெய்வமே
வளாலேதானறுத்து வதைசெய்திடுகின்ற
வாறுபோலிருந்துதே தெய்வமே
கேளாதவார்த்தையை கேடுத்தாளெப்படிக்
கிருப்பதுஞாயமோதான் தெய்வமே
இனிமேலுலகினி லென்போலெடுத்தபெண்கள்
என்னைநகைப்பாரே தெய்வமே
மணதாசைகொண்டயென் மருணனுமிந்நேரம்
வந்திடக்காணேனே தெய்வமே
பாலனில்லாப்படி பாவிநானுகினேன்
பாடுதானென்னமோ தெய்வமே
சிலமெனும்ரிஷி தேவியர்களுந்தாகஞ்
செய்யாமற்போனரே தெய்வமே
ஏதேனுதமென்னக் கில்லாமற்போனது
ஈசாமயேசா தெய்வமே
மானுளைப்பாகத்தில்வைத்தவாயெனக்கொரு
மைந்தனுதவிசெய்வாய் தெய்வமே

பொதுவிருத்தம்

சித்திமுத்திகளைக்கண்ட சீருள்ளவிருடிமார்கள்
பத்தினியோர்களெல்லாம் பரிவுடன்சென்றபின்பு
புத்திரனில்லையென்ற பெருஞ்சோகத்தாலுறங்கும்
சித்தனுமிருகண்டர்க்குச் சீஷருஞ்சொல்லுவாரே

கட்டியக்காரன்சொல்-வசனம்

அகோதெப்படியென்றால் ஞானச்சந்திராளைக்கண்டுபேசிரிஷிபத்தினிமார்கள் போனபின்புபுத்திரனில்லையென்றசோகத்தினால்சோலைநிழலில்நித்திரைசெய்திருக்கும் மிருகண்டமகாமுனிவருக்குச்சீஷர்கள்சொல்லுகிற விதங்காண்க.

சீஷர்கள்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

தந்தையேகேளீரெங்கள் தாய்தனையாசிரமத்தில்
விந்தையாய்விட்டுவந்து வெகுநேரமாச்சுதையா
இந்தமாநிழலிலேவீற்றிருந்ததாலிளைப்புத்தீர்ந்தோம்
செந்திருவாசிரமம்போய்ச் சேருவோமெழுந்திடீரே

(வசனம்)சுவாமிசுவாமிஎங்கள்தாயாராகியஞானச்சந்திராளம்மாளை ஆசிரமத்தில்விட்டுவந்து வெகுநேரமாயிற்று நாமேன் இவ்விடத்திலிருக்கவேணும் இன்னோம்போவோம்சுவாமி.

மிருகண்டர்சீஷர்களுக்குச்சொல்-தரு-இ-ம்சங்கராபரணம்ரூபகதாளம்

பல்லவி

வாராய்மனோன்மணியே ஆசிரமம்போவோம்
வாராய்சிரோன்மணியே

அநுபல்லவி

பூராயமொழிகேட்ட தாராதிருக்குதே
தீராதோஆராலும் ஆராதடாகூட (வாராய்

சரணங்கள்.

தத்தைமொழியாளொடும் பெண்சித்தமுங்களித்திட
சுத்திலுமகத்துவ மிகுத்துடன்வருகுவீர் (வாராய்)
சாந்தன்மனதுங்களிக்க முந்தியேநடந்திடீரே
அந்தமுள்ளமைந்தர்களே சுந்தரமதாகவே (வாராய்)
கண்டவரதிசயிக்க மண்டலம்புகழவே
அண்டபகிரண்ட நவகண்டமும்நடுங்கவே (வாராய்)

மிருகண்டர்சிஷர்களுக்குச்சொல்-கவி.

மணியேமனோன்மணியேவாராய்
மணியேசிரோன்மணியேகேளாய்
மணியேதிகழ்ஞானச்சந்திராளை
மணியேயழைத்தோடியேவாரீர்

சிஷர்கள்-மிருகண்டருக்குச்சொல்-கவி

தேவரீர்சொன்ன திருமொழிப்படியே
ஆவலாயம்மை யழைத்தோடிவருவோம்

சிஷர்கள்சொல்-கவி

தம்பியர்சொற்படியே தம்பிப்போதம்மானே
தம்பியழைத்தோடியேவருக தம்பிநீவாடாவாடா

சிஷர்-ஞானச்சந்திராளுக்குச்சொல்-பாணி

அம்மா அம்மாபிர்ம்மசபைக்கையர் போனார்வந்துடனே
நம்மாலழையுமென்றுரைத்தார் நங்கைக்கரசேவாராயே

ஞானச்சந்திராள்-சிஷருக்குச்சொல்-பாணி

தேடிவந்தசிஷர்களே திசைமாமுகன்பால்நடந்து
வாடிவந்தமாமுனிபால் வருவேனுநும்வருவீரே

சிஷர்மிருகண்டருச்சொல்-பாணி

ஐயரேயின்சொற்படியேஆசிரமத்துள்ளாகப்போய்
வையம்புகழெங்களைப்பெற்ற மாதாவைத்தானழைத்துவந்தோம்

மிருகண்டர்-சிஷருக்குச்சொல்-பாணி

பாக்கியம்பாக்கியஞ்சிஷர்களே பரிவாயெந்தனிடந்தன்னிலே
யோக்கியாயோக்கியமாயிருங்களுமக்கோர்குறைவுமில்லைதானே

ஞானச்சந்திராள-மிருகண்டருக்குச்சொல்-பாணி

பிர்மசபைக்குப்போயிருந்த பிராணேசாநீரெனையழைத்த
மர்ம்மமேதாகிலுமுண்டோ வழங்குங்குறைவிலாவென்சாமி

மிருகண்டர்ஞானச்சந்திராளுக்குச்சொல்-கொச்சகம்

எந்தன்பட்சமானபெண்ணே யான்போனசபையிலொரு
விந்தையராய்நதிசைமுகனும் வியாசரைக்கேட்டாரவரும்
மைந்தனில்லாதார்க்குசொர்க்க வழியில்லையென்றுரைத்தார
அந்தமொழிகேட்டெழுந்து அலறிவந்தேனென்னசெய்வேன்

(வசனம்)கேளும்பெண்ணே ஞானச்சந்திரேநான்பிர்ம்மசபைக்கும்
போனயிடத்திலபிரம்மாகாரணவிசேஷங்களைப்பேசும்போதுவியாச

ர்சொன்னதுஎன்னவென்னில்பிள்ளையில்லாதபேர்களுக்குச்சொர்க்கமி
ல்லையென்கிறதாய்சொன்னார்அந்தமொழியைநானுங்கேட்டேன்கேட்
மாத்திரத்தில் எனக்குச்செவியில் நாராசமேற்றினாப் போலிருந்தது
அந்தட்சணமேபிள்ளையில்லாதவர்க்குஎப்படியுபாயமென்றுகேட்டேன்
அதற்குஈசனைநோக்கித்தபத்தைச் செய்யச்சொன்னார்அதைக்கேட்டு
மனங்கலங்கியோடிவந்தேன்பெண்ணேஞானச்சகியே

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்-கொச்சகம்

பிரமசபைதன்னில்வந்த-பேச்சதுவுமல்லாமல்
பரமனருள்பெற்றரிஷிபத்தினிமாருடம்வந்து
அருமதலையுண்டோவென்றவர்கேட்டாரில்லையென்றேன்
திருமயிலேபாவியென்று செப்பியவர்போனாரே

(வசனம்)கேளும் பிராணநாதரே நீரல்லவோபிர்ம்மசபையில் அப்படிக்குக்கேட்டுவந்தீர் இவ்விடத்தில்யாரோசிலரிஷிபத்தினிகள்வந்து என்னுடன்பந்தாடினார் பந்தாடினபேர்க்குஇளைப்புதீரத்தாகதனிமரு ச்சலங்கொண்டுபோய்க்கொடுத்தேன் அதைவாங்காமல்உங்களுக்குப் பிள்ளையிருக்கிறதாவென்று கேட்டார்கள் நான்பிள்ளையில்லையென்று உண்மையைச்சொன்னேன் என்முகம்பாராமல் அடிபாவி யென்று சொல்லிப்போனார்கள்சுவாமி.

மிருகண்டர்ஞானச்சதிராளுக்குச்சொல்-வசனம்

அப்படியானால் அவர்கள்வந்தது உன்னுடனேபேசினதும்என
க்குவிபரமாகச்சொல்லுவாய்பெண்ணே.

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்-புலம்பல்

கண்ணி-இ-ம-கண்டா

சட்டமாய்பிர்ம்மசபையில்
சங்கையறிந்துவந்த — ரிஷிநாதா-இங்கு

தானடந்தசங்கதியை
நானுரைப்பேன்கேளுமெந்தன் — ரிஷிநாதா

வட்டவிழியானரிஷி
மாதரென்றனிடம்வந்து — ரிஷிநாதா,என்னை

வண்மையுடனேயழைத்து
வள்ளலெங்கேயென்றுகேட்டார் — ரிஷிநாதா

வந்தவரைப்பந்தாடுவோம்
வாருமென்றுடனழைத்தேன் — ரிஷிநாதா-எந்தன்

வார்த்தைக்கிசைந்தென்னோடு
வந்தாடினார்பந்தெடுத்து — ரிஷிநாதா

தொந்தமாய்ப்பந்தாடினவர்
சேர்ந்துமிகக்களைத்தார் ரிசிநாதா-நான்
தோத்தியடிவணங்கி
தொழுதுசலங்கொடுத்தேன் ரிசிநாதா
உங்களுக்கேதேனும்பிள்ளை
உண்டோவென்றென்னைக்கேட்டார் ரிசிநாதா-நான்
உள்ளதாய்ப் பிள்ளையில்லையென்
றுரைத்தேனப்போதவர்க்கு ரிசிநாதா
தங்காமற்பாவியென்று
தாகஞ்செய்யாமறபோனார் ரிசிநாதா-அதற்குத்
தடுத்தினியென்செய்குவ
தம்மணியுரையுமென்றேன் ரிசிநாதா
புத்திரனும்வேணுமென்றால்
புருஷனும்நீயுமாக ரிசிநாத-வனம்
புகுந்தெழிற்சங்கனைப்
போற்றித்தவந்தைச்செய்தால் ரிசிநாதா
சர்த்தனும்வந்துங்களைக்
காத்திரட்சிப்பாரென்றார் ரிசிநாதா-எந்தன்
கண்ணீர்துடைத்துவிட்டுக்
கடுகெனநடந்திட்டார்காண் ரிசிநாதா

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்,கொச்சகம்.

சந்திரனைப்போல்விளக்குந் தையலரேநானறிந்து
வந்துரைத்தவாறேநீமாதர்சொன்னதென்றுரைத்தாய்
சுந்தரமேமொழியிரண்டுந்தோகைதாயிதற்கு
அந்தரங்கமானதெனக்கறியத்தெரிந்துரைப்பாயே

(வசனம்)வாராய்பெண்ணே ஞானச்சதிரே நான்பிர்ம சபைக்கும் போய்அறிந்துவந்தசொல்லுக்குசசரியாகத்தானே நீயும்ரிசிபத்தினிகள்சொன்னதைச்சொன்னாய் நமக்கும்பிள்ளை யில்லாத படியினாலல்லவோ இவ்விரண்டுசொல்லும்நமக்குத்தொடாந்தது இதற்குஉனக்குத் தெரிந்ததைச் சொல்லும்பெண்ணே.

ஞானச்சதிராள் மிருகண்டருக்குச்சொல்-கொச்சகம்

அகமகிழவெனைக்கேட்ட அருமுனியேநீர்கேளீர்
மருமன் சொல்லைத்தடுத்து மறுவார்த்தைசொல்வதுண்டோ
செகமதனிலெங்கினும்போய்த் திரிந்துவரப்பட்டவர்நீர்
வகையெனக்கிதென்னுத்தாலமனமகிழ்ந்துசெய்வேனே

(வசனம்)கேளும்என்பிராணநாதரே அடியாளைக்கேட்டால எனக்
கென்னதெரியும் நானென்சிந்தையில நினைப்பதென்ன தேவரீர்எந்த
சபைக்குப் போய் வரப்பட்டவர் உமக்கல்லவோதெரியும்நீசொன்ன
சொன்னபோதைக்கும் அந்தப்படியே நடந்துவருவேன் இதற்குத்தே
வரீரேசொல்ல வேணுஞ்சுவாமி.

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்விருத்தம்

மாதருக்கரசேவியாசர் வழங்கியபடிநமக்கு
ஆதினத்துக்கோர்பிள்ளை யாகிலுமிலாததாலே
ஏதுபோனாலும்பெண்ணே ஈசனார் பாதந்தேடி
போதும்நாம்தபத்தைச்செய்து புதல்வனைப்பெறுகலாமே

(வசனம்)கேளாய்பெண்ணே ஞானச்சதிரே நமக்குவெகுகாலமாய்
ப்புத்திரசந்தானமில்லாதிருப்பது நமக்குத்தெரியுமே ஆகையாலந்தவே
தவியாசர்சொன்னபடிக்கு நாமிருவருங்கூடி கானகத்திற்சென்றுஈச
னைநோக்கித்தவத்தைச்செய்து அதிகபாக்கியம்பெற்றுவருவோம் வா
ரும்பெண்ணே.

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்

வல்லமையுடையவேத மாமிருகண்டரேகேள்
செல்வனில்லாததென்னா சென்மமேசனனங்கண்டீர்
அல்லலைத்தீர்க்கநாமு மடவியென்றுகச்செய்து
எல்லையில்தவத்தைசசெய்வ தெனக்குநன்றுதானே

(வசனம்)கேளும் என்பிராணநாதா புத்திரனில்லாதசென்மம்என்
னசென்மம் தேவரீர்மனதின்படி அல்லலைத்தீர்க்கஈசனைநோக்கித்தவ
த்தைச்செய்து புத்திரபாக்கியம்பெறுவதேயுத்தம்என்பிராணநாதா

மிருகண்டர்ரிஷிகளுக்குச்சொல்-விருத்தம்.

ஆச்டாரிஷிரேயென் அடியாளுநானுமிப்போ
சீருடன்தபத்தைச்செய்து செல்வனைப்பெறுவதற்கு
பாரடாயிடந்தானுதி பரமனைக்காணவேணும்
ஓரடையாளமாக வோடிவந்துரைசெவீரே

(வசனம்)ஆர்டாரிஷர்களே நானும்எனதுதேவியமாக ஆரணியத்
தில்தபஞ்செய்து ஈசனைக்கண்டுபுத்திரபாக்கியம்பெற்றுவரவேணும்
ஆகையால்தபஞ்செய்ய நல்லயோக்கியமானயிடமாய்ப்பார்த்து வாரு
ங்களப்பாரிஷர்களே.

சீஷர்கள்சொல்-பரணி

நம்மையாளையரும் நமதம்மாளும்
செம்மையாய்த்தவத்தைச் செம்யநினைத்தார்
நம்மைபோயிடத்தை நாடிப்பாரென்றார்
வண்மையாய்ப்பார்த்து வந்துரைப்போமே

பொதுவிருத்தம்

மாலொருமிருகண்டேயர் வனத்திற்றவத்தைச்செய்து
ஈசனைக்காண்பதற்கு யி[illegible]டமதைப்பார்க்கச்சொல்ல
ஆசையாய்சீஷர்கூடி [illegible]ர்வனம்வருகும்போது
நேசமாய்வனத்து ரிசிகளும்வருகின்றாரே

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாகமிருகண்டர்தபத்தைச்செய்யஇடம்பார்க்கும்படியாய் தம்முடையசிஷர்களை யனுப்ப அவர்களிடத்தைத்தேடிக்கொண்டுவருகிற தருணத்தில் அவ்வனத்தில்தபசுசெய்யப்பட்டரிசிகள்யாவருங்கூடிக்கொண்டு அவ்வழியாய்வருகிற விதங்காண்க.

வனத்துரிசிகள்வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

பல்லவி.

நினைத்தபடிமுடிக்கவே-சிவத்தைக்காண
வனத்துரிசிகள்வந்தாரே

அநுபல்லவி

கனத்தமுனிவர்களைக்
காரணமறிவா
ரேணிவனமதி
கணத்திலடைக்க
ருதாரணமாகிய
லாரணமாகிய (நினைத்த)

சரணங்கள்

தவத்துக்குமிக
தனைத்துதிக்குந்
பவத்தைப்பறக்கடிக்கப்
பரமனும்நிமையினி
தெரிகுவர்சிவசிவ
யோக்கியர்-பஞ்சாட்சரக்
சிலாக்கியர்
பண்ணும்வலுமையுளோர்
லருகினில்வரும்விதம்
ஹரகரவெனவிதம் (நினைத்த)

மதத்தயோர்களைச்
மர்மத்தையெல்லசஞ்
மிகுத்தவயன்விதியை
விண்ணவராசர்க
புண்ணியர்களென
சபிப்போர்-உலகிலுள்ள
செபிப்போர்
யெல்லமுறைதெரிந்தோர்
ளெண்ணரிருஷிவர்களைப்
வெண்ணிடமனதினில் (நினைத்த)

கண்டவர்மனங் கலங்க-நீறணிமலர்
கரத்தினில்தெண்டு துலங்க
மண்டலம்புகழவே மணிசடையாடவே
யமர்கள்ளவர்களுந் முவமைபிதென்னவே
உமையவர்தான்மகிழ நிமையினில்வனமதில் (கினைத்த)

வனத்துரிஷிகள்சொல்-கொச்சகம்.

காட்டிலுள்ளமிருகங்களே காக்கைகுயில்களவாக்கினைக்கேள்
தாஷ்டீகமதாய்வனத்தில் தனித்துவங்கோர்தவத்தைசெய்ய
ஒட்டிவிடாதேயிருங்க ளுங்களுக்கோர்புண்ணியந்தான்
கீட்டேனேலூன்றி நிலத்தில்நின்றோந்தவத்தினிற்கே

(வசனம்) கேளுமிவ்வனத்தில் வாழுமிருகங்களே பறவைபட்சிகளே நாங்கள் ஈசனைநோக்கித்தவத்தைச்செய்யக்காலூன்றி நிலத்தில் நின்றுவிட்டோம் எங்கள்தவத்திற்குப் பின்னம்வராமல் பார்த்திருங்கள் தவஞ்செய்தால் உங்களுக்குப் புண்ணியமுண்டு.

வனத்துரிஷிகள்-தோத்திரஞ்செய்கிற-கண்ணிகள்-எச்சரிக்கை

ஐயனேமலர்க்கையனேயும்மை
அடுத்தோம்துதிதொடுத்தோம்
மெய்யனேயெங்கள்துய்யனேவந்து
விடுவாய்பின்புநடவாய்
முத்தனேபரிசுத்தனேயாதி
மூலமேமின்னஞ்சாலமேமன்
அத்தனேயெங்கள்கர்த்தனேயிங்கு
அடிப்பாய்வரங்கொடுப்பாய்
ஈசனேயுமையேசனேயுன்னை
யெண்ணினோமிகநண்ணினோம்
வச்சனேபிரகாசனேமுன்பு
வருவாய்வரந்தருவாய்

சீஷர்கள்-வனத்துரிஷிகளுக்குச்சொல்-வசனம்.

ஆனையா யிவ்வனத்திலே பாரம்பரியமாய்க் காலாகாலமாய்த்தபஞ்செய்து காதுங்கண்ணு மூக்கும்வாயும்அடைபட்டுபோனபெரியோர்களே பொச்சுபொச்சாயிருக்கும் தாடியும்மீசையும் சிகையும்வளர்த்த பெரியோர்களே சந்நியாசிகளே தபசிகளே எங்கள் குச்சகமா முனிவருடையகுமாரரானமிருகண்டமகாரிஷியும் அவர்தேவியுமாகத்தவஞ்செய்யவருகிறார் அத்தவத்துக்கு கொஞ்சம் இடமகப்படுமோ அசப்ப

ங்டுத்தவஞ் செய்தால்சசனைக்கானுவாரா கலிதிருமா மாகதியனைவா
ரா சொல்லுங்கள்ரிஷிகளே தபசிகளே சந்நியாசிகளே அடாதம்பி ஞா
னச்சிரோன்மணி இவ்விடத்திலிருக்கும்ரிஷிகள் பேசப்போகிறதில்லைக
மேன் விணாகத் தொண்டைக்குக்கேடாய் கத்தவேணும் அண்ணே அ
துவசியாயம் அதோஒருவர் இப்போதுதான் கண்ணைத்திறக்கிறார்
பார் அவர்தான்சொல்லுவார் சற்றுபொறு ஆக்கப்பொறுத்தது ஆற
ப்பொறுக்க வேண்டியதில்லையா அண்ணே.

வனத்துரிஷிகள்-சிஷர்களுக்குச்சொல்-விருத்தம்.

ஆரடாவில்வனத்தி லருமையாயோடிவந்து
ஓரிடங்கேட்பதாரோ வுங்களூர்பேர்தானென்றாய்
விருட்டனைங்களுக்கு விவரமாயுரைப்பீராகில்
இருட்டனிடமிருக்குஞ் செய்தியைச்சொல்லுவோமே.

(வசனம்) ஆரப்பா இந்தஅடர்ந்தவனத்தில்சனையருகில்வந்து இட
ங்கேட்கப்பட்டபேர் நீங்களார்தபசியார் ஊரென்ன இன்னமொருதரம்
தெரியச்சொல்லுங்கள் கேட்கவந்ததற்கு இடஞ்சொல்லுகிறோம்,

சிஷர்ரிஷிக்குச்சொல்-கவி.

திருக்கடையூரில்வாழ்கின்ற
செயமாமிருகண்டையர்வந்து
உருக்கமதாகத்தவஞ்செய்ய
வோடியிடம்பாரென்றாரே

(வசனம்)கேளுங்கள்சுவாமி வனத்துரிஷிகளே திருக்கடையூரில்வா
ழு மிருகண்டரிஷியும் அவருடையதேவியுமாய்தவஞ்செய்ய எங்களை
யிடம்பார்த்து வரச்சொன்னார் நாங்களோ அவருடைய சிஷர்கள். இட
ந்தரவேண்டுஞ்சுவாமி.

வனத்துரிஷிகள்-சிஷர்களுக்குச்சொல்-விருத்தம்

சமதியுடையவேத சுந்திரமிருகண்டர்க்கு
அமத்தநாம்சொல்வதில்லை அவர்மனமகிழ்வதாக
தவமதுசெய்யச்சாலை சந்தனச்சோலையுண்டு
செபமிகுசிஷரோநீர் சுதனமதினிலழைத்துவாரீர்

(வசனம்) வாருங்களப்பா மிருகண்டருடையசிஷர்களே அவர்ம
காயோக்கியர்அவருக்குநாங்கள் அமத்தஞ்சொல்லக்கூடாதுஅவர்தவ
ஞ்செய்ய சந்தனச்சோலையும் தடாகங்களுமிருக்கின்றது அவருக்கி
து மகாயோக்கியமான இடந்தான் சீக்கிரமாக அழைத்துக் கொண்டு
வாருங்களப்பா சிஷர்களே.

26

சிஷர்-மிருகண்டருக்குச்சொல்- கவி.

ஐயாஐயாதாம்சொன்ன
அடர்ந்தவனத்திற்குள்ளேபோய்
மெய்யாய்தபத்திற்கிடம்பார்த்து
வேடிக்கையாகவந்தோமே

மிருகண்டர்-சிஷருக்குச்சொல்-பாணி.

வேடிக்கையாகநீர்பார்த்தி
விடந்தானெங்கேசிஷர்களே
பாடிக்கயிலைவாசனைப்
பணிவேண்டிக்கத்துணிவேனே

சிஷர்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்,

சந்தனமரத்தின்மேல் சாருகள்மடர்ந்ததெத்த
விந்தையாயிருக்குதங்கே விளங்கியவிடந்தானையா
மைந்தனைப்பெறுவீரையா வல்லவந்தருளேசெய்ய
செந்திருசந்திராளோடு சிவாதஞ்செய்யவாரீர்.

(வசனம்) சுவாமி சுவாமி நாங்கள்போய்பார்த்துவந்தயிடத்திலே ச
ந்தனச்சோலைநெருங்கியிருக்கின்றது தடாகமுமிருக்கின்றது வெகுரிஷி
கள் தவம்புரிகின்றார்கள் தாமும்வந்துதபஞ்செய்தால் உடனேயீசனை
க்கண்டு புத்திரபாக்கியம்பெறுவீர் வாருஞ்சுவாமி.

மிருகண்டர்-ஞானச்சந்திராளுக்குச்சொல்-பாணி.

பெண்ணேஞானச்சந்திரேகேள்.
பிள்ளைகளெல்லாந்தானடைந்து
அண்ணேதவத்திற்கிடம்பார்த்து
கடிதில்வந்தார்வருவாயே

மிருகண்டர்சொல்-தரு-இ-ம்-தோடி-ரூபகதாளம்

பல்லவி.

நல்லகாலமகிதுவோ-மகோன்மணி-சிரோன்மணி
கண்டாமணி-சிந்தாமணிநீங்கள்வந்து-சொல்லும்வளமிதுவோ

அநுபல்லவி.

மல்லிகைவாசனை-முல்லையணிந்திடும்
இல்லைமயேசனை-மெல்லப்பணிந்திட (நல்ல)

சரணங்கள்.

சந்தனச்சோலையின்-விந்தைகளோயிது
ரதங்கனந்தவங்கள்-மிருகணகமிது (நல்ல)

சோலைநெருங்கிய-ஆலயந்தோணுது
நீலகண்டரிருந்த-சோலைபோற்காணுது (நல்ல)
சிங்காரங்கன்னைநாம் யொங்கமாய்ப்பணிந்திட
இங்ஙனமே தபந்தங்கியிருந்திட (நல்ல)

ரிஷர்-மிருகண்டருக்குச்சொல்-பாணி.

ஓங்கிநட்டுந்தான்வந்த வுறுதியுள்ளஐயாவே
நாங்கள்பார்த்தயிடமிதுவே நன்றோநன்றல்லோவுரைப்பீர்

மிருகண்டர்-ரிஷர்களுக்குச்சொல்-விருத்தம்.

மாணிக்கப்பொருளேதிவ்ய மகோன்மணிசிஷியாநீகேள்
ஆணிப்பொன்முத்தேஞான அதிசிரோன்மணியேநீங்கள்
பூணிப்பார்த்ததினாலிந்தப் புண்ணியவிடங்கண்டோர்நாம்
ஊணிட்டசிவனையிந்த வுடலுக்குள்காணலாமே.

(வசனம்) ஆரடாசிஷர்களே நீங்களெனக்காக வெகுதூரம்வந்துபா
ர்த்தபடியினாலே உங்களுக்கு இப்போர்க்கொத்தயிட மகப்பட்டது இ
வ்விடமேயிருக்கட்டும் உடனேயீசனைக்காணலாம்-

ரிஷர்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

ஐயரேகேளீரையா யாவருந்தலைகீழாக
மெய்யனைநோக்கியிங்கு வெகுகாலந்தவஞ்செய்கின்றார்
செய்கினுஞ்சிவனைக்காணார் தேவரீர்செய்தயத்தால்
பையவேயிவர்களெல்லாம் பரமனைக்காணுவாரோ.

(வசனம்) சுவாமி சுவாமி இவ்விடத்திலிதோதவஞ் செய்யப்பட்ட
தபசிகளெல்லாம் தலைகீழாகக்கட்டிக்கொண்டுவெகுகாலமாய்த் தவஞ்
செய்கிறார்கள் இதுவரையிலும் பரமசிவனைக்கண்டபேர்களில்லை தே
வரீர்செய்யவந்த தபோபலத்தினாலே இவர்களெல்லாம் யீசனைக்கா
ணலாயிற்று நாங்களும் அந்தசந்திலே காணுவோஞ்சுவாமி.

மிருகண்டர்-ஞானச்சந்திரருக்குச்சொல்-விருத்தம்.

மதியுள்ளயாதேகேளாய் வனத்தினில்வந்துவிட்டோம்
மதியுடனென்னைப்போலுன் மதியையொன்றுகச்செய்து
மதியுற்றபாலன்வேண்டி வள்ளலைமனதிலெண்ணி
மதியுமேகலங்கிடாமல் மாதபத்திருந்திடாயே.

(வசனம்) வாராய் மிருத்தமதியுள்ள ஞானச்சந்திரா புத்திரவாஞ்
சையினாலே நமது ஆசிரமம்விட்டு ஆரண்ணியமான மலையடிசாரலிலே
வந்துவிட்டோம் தபத்துக்குயோக்கியமானவிடந்தான் ஆனதாலெனை
து மதியைப் போலவே யுனதுமதியையும் ஒன்றாக்கிப் பரமசிவத்தை
மனதிலெண்ணி தவம்புரிவாயென்னை.



மிருகண்டரும்-ஞானச்சதிராளும்-புத்திரனில்லாமையால்
ஈசனை நோக்கித் தவஞ்செய்தல்

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்-பரணி

கெதிபெறுமுனியே மதியையொன்ற[illegible]ங்கி
சுதன்றனைவேண்டி கதிபதஞ்செய்வேன்

சிஷர்கள்சொல்-பரணி

அம்மாளும்அய்யாவுங்கூடி யருமையாய்த்தவத்தைச்செய்தால்
நம்மாலானபடியிடைக்கை காடித்தவம்நாம்செய்வோமே

மிருகண்டரும்-ஞானச்சதிராளும்-தபஞ்செய்கிற-தரு
இ-ம் ஆனந்தபைரவி.

ஆத்திமலரையணிந்தோனேயுனை
போற்றிவந்துதவம்பு[illegible]ந்தோம் (அரகர)
கூத்தவனேயாதிமூலமேயெங்கள்முன்
தோற்றிவந்துவரந்தருவாய் (அரகர)

சிஷர்சொல்-தரு

தோற்றுங்கடல்மீனைத் தோணக்கொண்டுவந்து
ஆத்தின்சலத்திலலைத்தேயெடுத்து
தூற்றியெண்ணெயைவிட்டுச்சொய்யுஞ்சொய்யெனவறுத்து
பார்த்துப்படைக்கிறேன் பகலிரிஷியே

மிருகண்டரும்-ஞானச்சதிராளுஞ்சொல்-தரு.

ஆற்றங்கரைதழிவந்தோமிருவரும்
சேற்றியுடனேதவம்புரிந்தோம் (அரகர)
வேற்றுமையாகவிராமலேயெங்களைப்
பார்த்துவந்துவரந்தருவாய் (அரகர)

சிஷர்சொல்-தரு

பார்த்துப்பார்த்துமகிழ்ந்துபாவையேவிட்டிங்கு
ஆத்திரமாய்வந்து அலைவானேன்
காற்றுமழையில்நிற்கக்காரணமேதொரு
கூத்தியாளைக்கொண்டுகொன்றையானே

மிருகண்டரும்-ஞானச்சந்திராளும்சொல்-பரணி

சங்கரனேசுதன்வேணுமென்றேயெண்ணி
இங்குவந்துதவம்புரிந்தோம் (அரகர)
பொங்கமுடன்விடையேறியேவந்தெங்கள்
சங்கைகள்தீரவரந்தருவாய் (அரகர)

சிஷர்சொல்-தரு

சங்கையாயிருந்திடத்தாளாதேயெப்படி
வங்கைப்பிசாசேநீவாவா
இங்கிதக்கருப்பல்லுப்பிரிசியேவாடி
உங்களைக்கொல்லுவோம்ஓடிவாவா

மிருகண்டரும்-ஞானச்சந்திராளும்சொல்-தரு

மங்கையிடப்பாகம் வைத்தவனே வனம்
தங்கியினிந்து தவம்புரிந்தோம் (அரகர)
கங்கையுடன்கூட வந்துஎங்களிட
அங்கங்குளிரவரந்தருவாய் (அரகர)

சிஷர்கள்சொல்-தரு

அங்கம்பசிக்குது அடிவயர்பெருக்குது
எங்கேதாம்போவோம் அப்பாலே
பொங்கலிடுகிறோம் பொலிகிடாவெட்டுறோம்
இங்கேநீயோடிவா யீஸ்பரனே

மிருகண்டர்சொல்-தமம்-கழிநெடில்விருத்தம்-இ-ம்-நீலாம்புரி

விடைமீதேறியசங்கரனே விண்ணோர் துதிக்குமெய்யோனே
விமலாநீவரமேதருவாய்
வடிவேவடிவேநற்றும்வ மதியேமதியேமெய்யுருவே
வருவாய்நீவரமேதருவாய்
எந்தாயுமையேமனோகரியே யெங்கள்குறையுந்தீர்ப்பாயே
இனிதாய்வரமேநீதருவாய்
சந்தானம்வேண்டித்துதித்தோனு சாஷ்டாங்கமதாகப்பணிந்தோம்
சாமிநீவரமேதருவாய்



வேடர்வருகிற-பொதுவிருத்தம்.

புத்திரவாஞ்சையாலேபுண்ணியமிருகண்டையர்
கர்த்தனைத்துதித்துநிற்குங்காலத்திற்புதுமையாக
எத்திசைநடுநடுங்க விருளிடியிடித்தாற்போல
மெத்தவெற்றிகள்கொள்காட்டுவில்லியர்வருகின்றாரே

கட்டியக்காரன் சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால்இப்படியாகமிருகண்டரும் அவர்தேவியாகிய ஞானச்சந்திராளும் புத்திரபாக்கியத்திற்காகத் தபஞ்செய் திருக்குங்காலத்தி லந்தவனத்தி லிருக்கும் வேடர்வேட்டையாட வருகிற விதங்காண்க.

வேடர்வருகிற-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

பல்லவி

வனத்துவில்லியர்வருகிறார்-வெகு
வலுமையுடையகுட்டிப்புலியைமிரட்டித்தட்டி (வனத்து)

அநுபல்லவி

நினைத்தப்படியேகாளி நேரிட்டமிருகத்தைப்
பேரிட்டுமடித்திட நேரிசங்கைப்பிடித்திதோ (வனத்து)

சரணங்கள்.

காட்டெருமைகளையெல்லாங் கூட்டைவிட்டேகலைத்து
ஆட்டுக்குட்டிகள்போலே ஓட்டிவிட்டடிக்கயிதோ (வனத்)

சிங்கக்குட்டிகளெல்லாம் வங்கைப்பசாசைப்போல்
எங்கெங்கொளிப்பமென்று அன்றுநின்றுதிகைக்க (வனத்)

வெள்ளமுசல்களெல்லாம் பள்ளத்திலேயதுங்கி
மெள்ளமெள்ளவொதுங்கித் தள்ளித்துள்ளிக்கொண்டோட (வனத்)

முதல்வேடன்சொல்-கவி.

கானகக்கட்டம்மா ஏனகத்துடும்பா
மானுகள்படும்வலை தானெதோகொடுதா

(வசனம்) இதாரங் கானக்கட்டம்பாம் என்னடாங் ஏனகத்துடும்பாங் இதாங் மான்வலையெடுத்துவாடாங் ஏண்டாங் வலைகட்டிவேட்டையாடுவம் எடுத்துவாங்கடாங் இதோஎடுத்துவந்தேன் பாரடாங்மாரடாங்.

வேடர்வேட்டையா[illegible]ற-தரு-இம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

பரும்வலையையெட்டா ஐயேஐயேயிந்தப்
பள்ளத்தில்விடடா ஐயே

அநுபல்லவி.

பருவம்வலையெடுத்திந்தப்பள்ளத்தில்விடுத்தந்த
கருங்கன்னியைப்பதித்துக்காட்டைக்கலைத்திடுவோம் (பரும்)

சரணங்க[illegible].

வரும்புலிகரடிகள்மதமூற்றயானைகள்
பெருத்தலைசிவிங்கிவாய்பிரண்டுவிழுகுமிதில் (பரும்)

ஓடிக்கவரிமான்ஒருபுள்ளிமான்பன்றி
கூடிக்கூடியலைந்துகுருடர்போல்விழுகுமிதில் (பரும்)

வானம்பாடிபறவைவகையுள்ளகுயில்மயில்
கானகமதில்மயங்கிக்கடுகவிழுகுமிதில் (பரும்)

வாணருக்கீயாதமடையனைப்போற்காக்கும்
வீணருக்கெதிர்வந்துபிரண்டுவிழுகுமிதில் (பரும்)

உ-வது- வேடன்சொல்-கவி

கரும்வலையெடுத்தும் பள்ளத்தருகினிற்கட்டிவந்து
பெருமிருகங்கள்துரத்தித்துரிதவேட்டைகள்செய்வீரோ

(வசனம்) இதிராங் காணகக்கடம்பாங் ஏனடாங் ஏனகத்துமேம்பா ங் இதிராங் பள்ளத்தில் வலைகட்டி மிருகங்களைக் கலைத்துவிட்டோம் கலைத்தமிருகம் ஓடிப்போகாமுன்னம் பிடித்துத்திங்க வேட்டையாடுங்

முதல்வேடன்சொல்-கந்தார்த்தம்

சுத்திலுங்கடம்பைமரம் தூரத்திலேயுளாயே
மத்தியாய்முசல்கூட்டங்கள் பள்ளத்திலிருக்குதாயே
வெற்றிசெய்யாளிபோன்று விடுபட்டுதேயுதாயே
உத்தமத்துடையமான்க ளெல்லாமிரோ

ஓடுறுதையே-ஒன்றோடொன்று-கூடுறுதையே
ஓடுறு-கூடுறு-தேடுறு-பொறு பொறு
நாடுறு பலர்தட மாடுறு அரோணடையே

உ வது-வேடன்சொல்-கந்தார்த்தம்,

வள்ளமுமகிழ்ந்துயானை வரும்புதுபாரடையே
துன்னரியாளிபோன்று சொருகுடன்பார்க்குதாயே
கொன்னையாய்மயில்வர்க்கங்கள் சொக்கரித்திடுகுதாயே
பள்ளத்திலிருந்முசல்க ளெல்லாமிரோ.

பரிக்குதடையே நம்மைக்கொண்டு சிரிக்குதடையே
மறக்குது சிரிக்குது இருக்குது பொறு பொறு
அரிக்கலா மரிக்கலாம் பொழுக்கலாம் அரோணடையே (பரி)

௩-வதுவேடன்சொல்-கந்தார்த்தம்.

வில்லியர்தலைவரயிந்த வேடிக்கைப்பாரடையே
அல்லியகடம்பைகானில் தூங்கிருப தூங்குதையே
பல்லியேபோமோனல் மடக்கிப்போர்செய்யுதாயே
சொல்லிக்கொண்டோடி வருகாமுன்னத்தலை

தூக்குதடையே கொம்பைமண்ணில் தாக்குதடையே
தூக்குது தாக்குது பார்க்குது பொறு பொறு
ஏக்குது நோக்குது வாக்குது அரோணடையே (தூக்குத)

௪-வதுவேடன்சொல்-கந்தார்த்தம்.

பக்கத்திற்பதுங்கிவாங்கள் பாக்கியம்பலிக்குதாயே
கொக்குகள்கூட்டமிங்கே குருடூர்போல்தவிக்குதாயே
சக்களத்திக்குவந்த சண்டைபோலுழலுதாயே
முக்கிக்கி கிக்கி யென்றுகொக்கு

முளிக்குதடையே பள்ளத்தில் ஒளிக்குதடையே
முளிக்குது வொளிக்குது விளிக்குது பொறு பொறு
கலைக்கலாம் களைக்கலாம் துலைக்கலாம் அரோணடையே (முளிக்

முதல்வேடன்சொல்-விருத்தம்.

இந்தாலமரத்தின்மீது விரைச்சலேதோன்றுதையே
குந்தியேயிருந்துபார்க்க கூடொன்றுதோற்றுதையே
பந்தமாயிதிலிருந்த பரிங்குயில்முளிக்குதையே
எந்தன்கையம்பாலத்தை யெய்புரேன்பாரடையே

(வசனம்) இதிராங் கானகக்கடம்பாங் எனடாங் எனகத் துடுப்பா ங் இதிரான் இந்தரிஷியிருக்கிற ஆலமரத்திலே கூடுகெட்டிக் கொண்டு எ தோ ஒருபெட்டைக்கருங்குயில் முளிக்குதாங் (ஆமடேங்) இதிரா ங் இதைப்பிச்சுபோடுரேன் பாரடாங் (இதிராங் பிஞ்சுராங் பார்ப் போமடேங்)

உ-வதுவேடன்சொல்-விருத்தம்.

அடிக்கவேகுயிலைத்து அருமுனிகையில்வீழ்ந்து
துடிக்குதுபாரடையே தூயமாமுனிவர்கண்டால்
சடுக்கெனநம்மையெல்லாஞ் சபித்திடப்போராதையே
மிடுக்குடனோடிக்கானில் மேன்மையாய்ப்பிழைப்போம்வாரீர்

(வசனம்) இதிரான் கானகக்கடம்பாங் என்டா எனகத்துடும்பாங்இ திராங் இந்தக்குயிலை அடிக்கவே அடிபட்டு துடிதுடிக்குது இந்தஐயர் கையில்விழுந்துபதைக்குதாங் ஆமடாங் ஐயர் கண்ணைத்திறந்துபா ர்த்தால் நம்மைச்சபித்துப்போடுவார் ஓடிப்போவோம் வாங்கடாங்

மிருகண்டர்-சீஷருக்குச்சொல்-பரணி

மனைதொன்றுக்கு மனோன்மணியே
வளருமெய்ஞ்ஞானச் சிரோன்மணியே
ஏனதுகையிற் றுடிப்பதென்ன
இதையானறியச் சொல்லீரோ

சீஷர்-மிருகண்டருக்குச்சொல்-பரணி

ஐயா அரகரா அரகராயிவ் வாலமரத்திலிருந்தகுயில்
மெய்யாயவில்லியராம்பாலடித்தார் விழுந்துகையிற்றுடிக்குதையா

மிருகண்டர்-சீஷருக்குச்சொல்-பரணி

அட்டா அரகரா அவ்வில்லியர்கள் அடங்கலுமிருக்கின்றாரோ
கொடூடாதானையிலவர்களைத்தான்கொலையேன்செய்தாய்கேட்டறிவீர்

சீஷர்-மிருகண்டருக்குச்சொல்-பரணி

குயிலையடித்தவில்லியரிங் கொருவரில்லையிக்கானில்
மயில்போலோடியேயொளித்தார் பார்த்தோமெங்குமில்லையையா

மிருகண்டர்-சீஷருக்குச்சொல்-பரணி

புத்திகெட்டவில்லியர்கள் போனார்போகட்டுநீங்கள்
இத்தையெடுத்துநீர்பூசி யெழுப்பிக்கூண்டில்விடுவீரே

சீஷர்கள்சொல்-பரணி.

உபாயமாகமிருகண்டர் உரைத்தபடியேகுயில்மீதில்
விபூதிதன்னைப்போட்டெழுப்பி விடுவோங்கூண்டில்விடுவோமே

சிஷர்கள்குயிலுக்கு-உயிர்கொடுக்கிறமந்திரம்-வசனம்

மொணை மொணை மொணை மொணை கிணை கிணை கிணை கிணை டிங்டிங் டிங் டிங் பே பே பே பே வா வா உயிர்வா கூ கூ குயிலே கூவு

சிஷர்கள்சொல்-பரணி.

அடாதம்பிசம்மையர்ளும் ஐயர்கொடுத்தவிபூதிதன்னைத்
தொடவேகுயிலெழுந்துடனே சுகமாயோடிமுழிக்குதடா

சிஷர்கள்-மிருகண்டருக்குச்சொல்-பரணி. [க்ட

வேதாவென்னீர்தான்கொடுத்தமெய்யாயகுயில்மேல்தான்போ
போதேயெழுந்துதன்கூண்டிற் புகுந்துவிளையாடுறதையா

மிருகண்டர் சிஷருக்குச்சொல்-பரணி.

விளையாடினதேபாக்கியந்தான் மெய்யானசொல்சிஷர்களே
சளசவென்னுதேயிருங்கள் தபத்தைச்செய்யும்வேளையிலே

சிஷர்-மிருகண்டருக்குச்சொல்-பரணி,

புத்திபுத்தியையாநீர் புகன்றபடியேமுன்பின்னும்
பத்தியாகவேயிருப்போம் மன்னுந்தபத்தைச்செய்வீரே

மிருகண்டரும்-ஞானச்சதிராளும்சொல்-தோத்திரம்.

கன்னிகள்-இ-ம்-முகாரி-திரிபுடைதாளம்.

மிருகண்டர்-சொல்லல்.

சோதியேசொரூபமே அநாதியேயுனைநம்பினேம்
நீதியாயிங்கேரம்நீவந்து நின்றுவரமருளீஸ்வரா

ஞானச்சதிராள்-சொல்லல்.

குதில்லாமலேசுதனுக்காகவே மாதவங்களைச்செய்கிறோம்
மாதுவேபரமேஸ்வரியிங்கு வந்துவரமருளீஸ்வரி

மிருகண்டர்-சொல்லல்.

நாம்பணிந்தசங்காதராசிவ சாம்புவேயுனைநம்பினேம்
காமபரிசுதன்கண்ணினுற்காணவந்துவரமருளீஸ்வரி

பொதுவிருத்தம் .

புத்திரசோபத்தினாலே புண்ணியமிருகண்டையர்
இத்திசைவனத்தில்வந்து யெழிலுடன்தபத்தைச்செய்ய
அத்திமாமுகனைப்பெற்ற ஐபருமவிடையீதேறிப்
பத்தியாய்வரமளிக்கப் பாங்குடன்வருகின்றாரே

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் புத்திரசோபத்தினாலே மிருகண்டரும் ஞானச்சதிராளும் வனத்தில்வந்து யீசனைநோக்கித் தவஞ்செய்யும் போது மிருகண்டருக்குப்புத்திரவரமளிக்கப் பரமசிவனுமவர் பார்வதிசமேதராய் ரிஷபவாகனரூடராய் வருகிறவிதங்காண்க.

ஈஸ்வரர்வருகிற-த-ரு-இ-ம்-ஸௌராஷ்டிரம்-அட-தாளம்.

பல்லவி.

சங்கரர் வந்தார் விடைமீதேறிச்
சங்கரர் வந்தார்

அநுபல்லவி;

பொங்குங்கதிர்மதி புனைந்தசடையாளர்
பொறிகொள்வெம்புலித்தோற் பொருந்துமிடையாளர் (சங்)

சரணங்கள்.

அதிக்குமான்மழுவுந் துலக்கிடுங்கையாளர்
அல்லயவிபூதித துன்னிடுமெய்யாளர் (சங்)
நாதகீதவே தாந்தர்கள்போற்றிடும்
காமெங்கலைகளெங் காருக்குதிசாற்றிடும் (சங்)

காதினித்தவஞ்செய்மிரு கண்டர்க்குப்புத்திரவரங்
களித்துத்தந்திடுதற்குக் கடினவேகத்தோடு (சங்)

மிருகண்டரும் ஞானச்சதிரனும்
சுவாமிக்குச்சொலப்போற்றி - விருத்தம்.

அத்தனேபோற்றிபோற்றி அருமறைப்பொருளேபோற்றி
முத்தனேபோற்றிமூவர் முதல்வனேபோற்றிபோற்றி
எத்திசையோரும்போற்றி யெங்களாண்டவனேபோற்றி
கர்த்தனேசிலம்பணிந்த கமலத்தாள்போற்றிபோற்றி.



ஈஸ்வரர்-மிருகண்டருக்கும்-ஞானச்சதிரனுக்கும்
சொல்- வாழிவிருத்தம்.

அந்தணர்குலத்தில்வந்த அருமறைதன்னிற்சேர்ந்த
விந்தைசேர்மிருகண்டர விரைவுடன்வனத்திற்றானும்
எந்தனைநோக்கிநீய மெய்த்தவஞ்செய்ததாலே
புத்தியில்மிகமகிழ்ந்தோம் புகலுவீர்வாழிவாழி.

(வசனம்) வாழி வாழி மிருகண்டரே வாழி வாழி ஞானச்சதிரே நீங்கள் நம்மைத்துதித்து தவஞ்செய்யவந்த காரியம் என்னசொல்லு மிருகண்டரே.

மிருகண்டர்சுவாமிக்குச்சொல்-உலா.

கானகத்தில்வந்துமிகக் காரணத்தாற்றவம்புரிந்தோம
மானுமழுவேந்துகின்ற வள்ளலேஆனதில்
பாராயிவ்வேளை பாலனளித்திடவேயெங்கள்
கோராகவருமொழிசொல் வின்று

(வசனம்) அரகரா ஆதியே ஐயனேசோதியே சுடரோசாம்பவி சங்க் ரி லோகாட்சகி புத்திரவாஞ்சையினாலே கானகத்தில்வந்து தேவரீரை நோக்கித் தவம்புரிந்தோம்எங்கள்குறைதீர ஒருமொழியுரைக்கவேணு ம் இவ்விடம் நின்றுகர்த்தனே.

சுவாமி-மிருகண்டருக்குச்சொல்-உலா

நின்றனைமைநோக்கி நெடுநாளாயச்சுதன்வேண்டி
மென்றுதவஞ்செய்கின்ற விருடிகளே-ஒன்றேகேள்
நீங்கள்முன்புசெய்திருந்த நிஷ்டூரவினையிருக்க
நாங்களென்னசெய்வோ முனிநாதனே.

(வம்)கேளுங்கள் இருடிகளே நீங்கள்செய்ததபமோமகா அருமையா னதபந்தான்என்னதபஞ்செய்தும்நீங்கள்செய்தபாவினைஇன்னங்கொஞ் சமிருக்கின்றது ஆகையால்நாம்தானென்னசெய்யலாம் இருடிகேளே.



மிருகண்டரும்-ஞானச்சந்திராளும்-சுவாமியும்-அம்மனுஞ்சொல்
கண்ணிகள்-பூரணம்-இ-ம்-ஆதிதாளம்.

மிருகண்டர்-சொல்லல்.

சோதியென்னசொல்லுவென்றுனைக்கண்டினி
துணைவேறுண்டோவென் சுவாமி

சுவாமிசொல்லல்.

துணைவேறுண்டோவென் றஞ் சோதிசொரூபமென்றுந்
தொழுதாற்றீருமோ முனியே

ஞானச்சந்திராள் - சொல்லல்.

ஏது பாவஞ்செய்திருந்தாலு மனம்வைத்து
கட்டறப்பாருந் தேவி

ஈஸ்வரி-சொல்லல்.

ஈடேறப்பாருமென்று மிருவர்வந்தாக்கானி
லேன்றுதிக்கிறீர் மாதே

மிருகண்டர் சொல்லல்.

நிசியாயுனைநம்பினே மெங்கட்கொரு
நிலைசொல்லவேணுஞ் சுவாமி

சுவாமி-சொல்லல்.

நிலைசொல்லவேணுமென்று நிஷ்டூரமாகநம்மை
நினைந்ததைச்சொல் முனியே

ஞானச்சதிராள் சொல்லல்.

மாதபஞ்செய்தே மைந்தனுக்காகயிப்போ
வரந்தரவேணுந் தேவி

ஈஸ்வரி-சொல்லல்.

வரந்தரவேணுமென்று வாழ்த்தியேகைகூப்பி
வணக்குவதேனோ மாதே

மிருகண்டர்-சொல்லல்.

அன்னபூரணியம்மைமையப் பாகம்வைத்த
ஐயாட்சியுஞ்சுவாமி

சுவாமி சொல்லல்.

ஐயாட்சியுமென்று அனுதினந்துதித்தாலும்
ஆவதுண்டோ சொல்முனியே

ஞானச்சதிராள்-சொல்லல்.

என்னபிழைகள்செய்திருந்தாலும் மனம்வைத்து
ஈடேறப்பாருந் தேவி

ஈஸ்வரி-சொல்லல்.

ஈடேறப்பாருமென்றுவேனோ யிக்கானகத்தி
லிருக்கிறீர்போம்போம் மாதே

மிருகண்டர்-சொல்லல்.

முன்னாள்தெய்வமுண்டென்று மெண்ணியிருந்தோம்
முத்தியருளுஞ் சுவாமி

சுவாமி-சொல்லல்.

முத்தியருளுமென்ற முனியேநம்மை [illegible]தாலு
முயற்சியாவதோசொல் முனியே

ஞானச்சதிராள்-சொ[illegible]லல்.

உன்னைவிடதெய்வமுண்டோ சந்[illegible]னந்தா
உத்தரவுதாருந் தேவி

சுவாமி-மிருகண்டருக்குச்சொல்-உலா

உத்தரவுதாருமென வுறுதியாய்நம்மைவேண்டி
பத்தாவிதத்திலும் துதித்தபடியினால்-இத்தினமே
பதியிலாச்சுதனாது வயதினிற்றரவேவாபின்னை
மதிநுதிற்சொல்தாவோ பணிந்து

(வசனம்)கேளுங்கள் தபசிகளே நீங்கள்நம்மைத்துதிக்கின்றபடியி
னாலே நாலுவயதிலே மதியில்லாப்பிள்ளைவேணுமா அல்லது பதினாறு
வயதிலே மதியுள்ளதாய் கியானபிள்ளைவேணுமோ சொல்லுங்கள் உ
ங்கள்மதியைப்பார்ப்போம்.

மிருகண்டர்-சுவாமிக்குச்சொல்-உலா.

மதியில்லாச்சுதனாறு வயதினிற்றந்தாலதென்ன
நதிபுனைந்தசங்கரனே நல்லகலைவிதியுடைய
பிள்ளைபதினாறுகிற் பிரபலமுற்றேயிருக்க
உள்ளபடிசுதன்றாரு மென்றேசொல்

(வ-ம்)அரகரா.நிரஞ்சனமானசோதியே அடியார்களுக்கு நாலுவய
தில்மதியில்லாப்பிள்ளையைக்கொடுத்தாலதென்ன நல்லகல்வியும்மதியும்
உடையதாய்பதினாறுவயதுமாகத்தானே கொடுத்து ரட்சிக்கவேண்டு
ஞ்சுவாமி.



சுவாமி-மிருகண்டருக்குச்சொல்-உலா.

ஒன்றேசொலொன்றுசொன்ன வொருமையுள்ளவிருடிகளே
இன்றேசந்தானமதைய[...]ன்கொடுத்தேன்-நன்றேவுங்கள்
ஆசிரமத்திற்புகுந்து அன்[...]னைவாழ்ந்திருக்கள்
நேசமுடன்போய்வாரும் நிசமே

(வசனம்) கேளுங்கள்இருடிகளே அப்படியேஉங்கள் மனதின்படிக்
குப்பதினாறு வயதுபிள்ளைய் கொடுத்தேன்நீங்கள் ஆசிரமம்போய்ப்
பிள்ளையைப்பெற்றுவாழ்ந்திருங்கள் போய்வாருங்கள் இருடிகளே.

மிருகண்டர்ஞானச்சதிராளுக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணம் அப்படியேபோய்வருகிறேஞ்சுவாமி

பொது விருத்தம்.

பரமனார்மெய்மகிழ்ந்து பதினாறுவயதைப்பெற்ற
ஒருகுழந்தையின்வரத்தை யுவந்துடன்கொடுத்தனுப்ப
விரைவுடனவருஞ்சென்றார் வீரனுங்கயிலைச்சேர்ந்து
அருமைசேர்திருக்குண்டோ தரனுக்குமறிக்கைசெய்வார்

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அதேதெப்படியென்றால்பரமசிவமூர்த்தியானவர் திருக்கடவூர் மிருகண்டருக்குப் புத்திரபாக்கிய மளித்து கயிலாயம்வந்தபிறகு அவ டத்தில் நடக்கிற விதங்காண்க.

சுவாமி-குண்டோதரனுக்குச்சொல்லுகவி

எத்திசைமுனிவர்க்கெல்லா மெழிலுடன்வயதைப்பெற்ற
சத்தியாய்நமையென்றாளும் பணிகுண்டோதரனேவாராய்

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அதேதெப்படியென்றால் பரமசிவனானவர் குண்டோதரனை அழைக்க குண்டோதரன்வருகிற விதங்காண்க.

குண்டோதரன்வருகிற-தரு-இ-ம்-மோகனம்-அட-தாளம்.

பல்லவி.

வந்தான்வந்தானே-குண்டோதரன்-வந்தான் வந்தானே-

அநுபல்லவி.

வந்தான்சிவானந்தத்து அந்திவண்ணனைத்துதித்து
பக்தாய்மனம்பூரித்து விந்தையாய்மண்ணிற்குதித்து (வந்தா)

சரணங்கள்

தேவதேவருங்கொழிக்க பூவுலகத்தோர்தழைக்க
பாவலர்களுஞ்செழிக்க ஆவலாய்சிவனழைக்க (வந்தா)
கண்டவர்கலங்கிடவே மண்டலங்குலுங்கிடவே
தொண்டர்கள்விலங்கிடவே தெண்டனுந்துலங்கிடவே (வந்தா)
வேதியர்களும்புகழ சாதியர்களுந்திகழ
நீதியோர்களும்மகிழ ஆதிசிவனார்புகழ (வந்தா)

குண்டோதரன்-சுவாமிக்குச்சொல்-பாணி

மானுமழுவுங்கைக்கொண்ட
வானும்புகழுமகத்துடனே
தானுமிருக்கும்வேளைதனில்
எனையழைத்ததென்சுவாமி.

சுவாமி-குண்டோதரனுக்குச்சொல்-விருத்தம்.

பத்தியாயென்றுநம்மைப் பணிகுண்டோதரனேகேளாய்
ருத்திரபதவினுக்கு கோடிவினில்நடந்துமெத்த

வுத்தமன்சோழராஜ னுமதியாய்ப்பெற்றெடுத்த
வித்தையோன்வேந்தன்விதி விடங்கனையழைத்துவாராய்

வசனம்.

கேளாய்குண்டோதராருத்திரபதவியிலிருக்கும்விதிவிடங்கனை நா னழைத்தேனென்று சீக்கிரமாகநீபோய் அழைத்துவாரும்பிள்ளாய்.

குண்டோதரன்-சுவாமிக்குச்சொல்-விருத்தம்.

எண்ணுமெந்தனாட்சிக்கு யீசனேகயிலைவாசா
புண்ணியசோழராஜன் புவிதனில்விளங்கப்பெற்ற
மன்னனுலகாளும்விதி விடங்கனையழைத்துக்கொண்டு
கண்ணிமைக்குள்கொண்டு கடிகினில்வருகுவேனே.

வசனம்.

சுவாமி சுவாமி கைலாயபதியே தேவரீர் உத்தாரப்படிக்கு ருத் திரபதவிக்குப்போய் விதிவிடங்கனையழைத்து வருகிறேன் சுவாமி.

குண்டோதரன்விதி-விடங்கனுக்குச்சொல்-தருவு

என்னுஞ்சிரஞ்சீவிகள்பெற்றே யிருக்கும்விதிவிடங்கையனே
அன்னலழைத்தார்நீயோடி யருகில்வருவாயிப்போதே

விதிவிடங்கன்-குண்டோதரனுக்குச்சொல்-விருத்தம்.

ஈசனுரிடத்தில்வாழு மெழில்குண்டோதரனேகேளீர்
பேசிட்டாதோடிவந்து பேரிடிபிடித்தாற்போலே
ஆசையாயென்னையழைத்தீ ருயர்கதிதனைவல்லோனே
நேசமாயுரையுமையா நீர்சொல்லும்படிசெய்வேனே.

வசனம்.

சரணஞ் சரணங் குண்டோதரமூர்த்தியே தேவரீர் இவ்வளவுதூர ம் வந்தாளென்னைத்தேடி அழைத்தகாரியம் என்னசொல்லுஞ்சுவாமி

குண்டோதரன்-விதிவிடங்கனுக்குச்சொல்-விருத்தம்.

பத்தியாய்வந்துகேட்கும் வாரினையாண்டிருந்த
உத்தமசோழராச னரமகிழ்ந்திடுவதாக
வெற்றியம்பாலனேகேள் பிஞ்சகனுனையழைத்து
இங்கணம்வரவேசொன்னு ரீசர்பால்வருகுவாயே

(வசனம்) வாராய்விதிவிடங்கனே கயிலாயபதியுன்னை அழைத் துவரச்சொன்னூர் வாருமப்பா.

விதிவிடங்கன்-குண்டோதரனுக்குச்சொல்-விருத்தம்,

எனையொருபொருளாயெண்ணி ஈசனாரழைத்ததென்ன
மனமதையறியவேணு மான்மழுவேந்திடத்தில்
இனயிருந்தடிவணங்கிச் சிறப்புறும்பவரேகேளீர்
களிதமாய்வருவேன்வாரீர் கந்தன்கன்காண்கத்தாவோ

(வசனம்) கேளுங் குண்டோதரமூர்த்தியே அந்தக்கைலாயபதி அழைத்ததேபாக்கியம் வருகிறேன் வாரும்குண்டோதரமூர்த்தியே.

வீதிவிடங்கன்வருகிற-ஓடிதரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

வீதிவிடங்கன்வந்தான் ருத்திரபதவிவிட்டு
வீதிவிடங்கன்வந்தான்

அநுபல்லவி.

ஆதிபராபரனையனு தினமனதினில்
அன்புடன்றுதிக்குமன்னன் தென்புடனடக்குமன்னன் (வீதி)

சரணங்கள்.

சிரசினில்மகுடந்துலங்க யிருபுசத்
தினில்கிரீடியு மிலங்க
வரிசையுடனேமணி மாலைகள்மின்னிட
வானவர்மகிழ்ந்திட தானதருமஞ்செய்வோன்
வாசைபெற்றிடு ஞானகுணாகரன்
வாஞ்சைமுற்றிடு தினதயாபரன்
வசையிலாதபுகழ் பெற்றவரோதயன்
நேசமதானசொலுற்ற சகோதயன் (வீ)

குண்டோதரன்-சுவாமிக்குச்சொல்-விருத்தம்.

கர்த்தனேகயிலைவாசா கங்கையைத்தரித்தனேசா
ருத்திரபதவிதன்னில் விநோதமாய்வாழ்ந்திருந்த
தத்துவமானபிள்ளை சமைவீதிவிடங்கனைத்தான்
பத்தியாயழைத்துவந்தேன் பரமனேபோற்றிபோற்றி

(வசனம்) சரணஞ் சரணம் கயிலாசபதியே அடியேன்போய் ருத்திரபதவியிலிருந்த வீதிவிடங்கனை அழைத்துவந்தேன் சுவாமி.

வீதிவிடங்கன்-சுவாமியைத்துதிசெய்கிற-தரு.

இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

பல்லவி.

ஈசனேசரணம் கைலாச வாசனேசரணம்.

அநுபல்லவி.

மாசிலாமழுமான் றரித்தகையனே
ஆசையாய்த்தரிசனங் காணவந்தேனையனே (ஈசனே)

சரணங்கள்.

கெங்கையைச்சிரசினிற் கீர்த்தியாகவைத்த
சங்கராவுன்றனைச் சரணமெனவடைந்தேன் (ஈசனே)

அரவாபரணமணிந் தாதியானவினோதா
பரமதேவனேயுந்தன் பாதங்காணவந்தேன் (ஈசனே)

வெள்ளைமேனியனே விடைமீதில்வீற்றிருக்கும்
வள்ளலேயுன்றிருவடியைக் காணவந்தேன் (ஈசனே)

விதிவிடங்கன்-சுவாமிக்குச்சொல்-விருத்தம்,

கைதனிற்பாசமேந்தி காளிதன்னுடனேநின்று
வையகமதிக்கவாடி வந்ததோர்சிவனேபோற்றி
துய்யசிவபதவிதன்னிற் றுலங்கவேயிருந்தயென்னை
ஐயனேயழைத்ததென்ன வருளுநீரெனக்குத்தானே

(வசனம்) சரணஞ் சரணம் கைலாசபதியே ருத்திரபதவியிலிருந்த யென்னையழைத்தகாரியம் அருளிச்செய்யவேணுஞ்சுவாமி.

சுவாமி-விதிவிடங்கனுக்குச்சொல் விருத்தம்.

அறிக்கைசெய்வீரென்றெந்த னடியிணைத்தொழுதபாலா
திருக்கடையூரில்வாழுஞ் ஜெயமிருகண்டருக்கு
உருக்கமாய்வரமளித்தே னுண்மையாய்த்தருகவேணும்
பெருக்கமாய்நீயவர்க்குப் பிள்ளையாயுதித்திடாயே

(வசனம்) வாராயப்பா விதிவிடங்கா நீ ருத்திரபதவியில் என்றுஞ் சிரஞ்சீவியாய் வயதுபெற்றவனானபடியினாலே இப்பவும் நீ இந்தவயதே பெற்றிருக்கப்பூரணமான வரமளித்தேன் நீமிருகண்டதேவியாளுடைய வயிற்றிற் ஜென்மிக்கத் திருக்கடையூருக்குப் போவாயப்பா.

விதிவிடங்கன்-சுவாமிக்குச்சொல்-விருத்தம்.

தேவர்சொற்படியேயந்தச் செயமிருகண்டனார்தன்
தேவிதன்றிருவயிற்றிற் ஜென்மிக்கபுத்திபுத்தி
தேவர்கள் துதிக்குநாதா சிவசிவாகயிலைவாசா
தேவரீரென்னைக்காக்கத் திருவடிபோற்றிபோற்றி

(வசனம்) சுவாமிகைலாசபதியிலே அடியேன் ருத்திரபதவியில் என்றுஞ்சிரஞ்சீவியாய் வயதுபெற்றிருந்த என்னைப்பூமியிற்போய்த் தபசிகளுடைய வயிற்றிற்பிள்ளையாய் பிறக்கச்சொன்னீர் அப்படியே ஜென்மிக்கிறேன் அவ்விடத்திலும் இந்தவயதோடும் வாழ்ந்திருக்க [illegible]ருவாக்கனுக்கிரகஞ்செய் தனுப்பவேண்டுஞ் சுவாமி.

சுவாமி - விதிவிடங்கனுக்குச்சொல்-விருத்தம்.

வயதுபெற்றிருந்தவிதி விடங்கனேகேளாயென்றும்
வயதுண்டாகவுமேவாழ்க வரமதுமிகவளித்தேன்
வயதினில்மிகுந்தவந்த மாமிருகண்டன்றேவி
வயிற்றினிற்றரிப்பதற்கு மைந்தனேநடந்திடாயே

(வசனம்)வாராய் விதிவிடங்கா இப்பவும் நீருத்திரபதவியில் என்றும் சிரஞ்சீவியாய்வயது பெற்றவனானபடியினாலே இப்பொழுதுமிந்தவயது பெற்றிருக்கப்பூரணமான வரமளித்தேன் நீமிருகண்டருடைய தேவியாள் வயிற்றிற்சென்மிக்கத்திருக்கடையூருக்குநடந்திடுவாயப்பா

விதிவிடங்கன்-சுவாமிக்குச்சொல்-வசனம்.

அப்படியேநடக்கிறேன் உமதுபாதார விந்தமேதுணை சரணஞ் சரணம் சுவாமி.

கட்டியக்காரன்சொல்-வசனம்,

அகோதெப்படியென்றால் இப்படிக்குக் கயிலாசபதியின் அநுக்கிரகம்பெற்று ருத்திரபதவியிலிருந்த விதிவிடங்கன் திருக்கடையூர்வாழ்கின்றமிருகண்ட தேவியானஞானச்சுதிராளுடைய வயிற்றிற்பிள்ளையாய்வந்து ஜென்மிக்க அதின்பின்பு வனத்தில்நடக்கிறவிதங்காண்க.

மிருகண்டர்-ஞானச்சுதிராளுக்குச்சொல்-விருத்தம்.

நங்கையேசுதிரேகேளாய் நாம்செய்ததபோபலத்தால்
பொங்கமாயீசர்வந்து புதல்வனையளித்தார்பெண்ணே
அங்கமுங்குளிர்ந்தோமிந்த அடர்வனந்தன்னைவிட்டு
சிங்காரவாசிரமம்போய்ச் சேருவோம்வாராய்கண்ணே.

(வசனம்)வாராய்பெண்ணே ஞானச்சுதிரே நாம்மனதொன்றாகச்செய்த தபோபலத்தினாலே உடனேயீசர்வந்து புத்திரபாக்கிய மளித்தார் ஆகையால் முத்திமோட்சம்பெற்றோம் இனிநாம்நமது ஆசிரமம்போய்ச்சேருவோம்பெண்ணே.

முதல்சிஷன்-மற்றசிஷர்களுக்குச்சொல்விருத்தம்.

கேட்டோதம்பியையர் கிளிமொழியம்மையாரை
நாட்டமாயழைத்தாரிப்போ நம்மையெலாமழைக்கவில்லை
வீட்டுக்குவாடாவென்று வேண்டிடும்பிறகெல்லோரும்
நீட்டுமோட்டாகப்போவோம் நிலத்தினிற்படுத்திடாமே

(வசனம்) கேட்டதடாதம்பி ஐயர்சொன்னசொல் எதடாயிந்தக்காலம் அல்லவே நமக்குத்தான் ஒருவரங்கேட்டாராகேட்க்காதவாரிலும் நம்மைத்தான் வீட்டுக்குவாருங்களென்று முன்னுமழைத்தாரா

அதையும்விட்டுவிட்டு அம்மாளே அழைக்காமே அதுசரியா இப்பவும்ந ம்மையெல்லாம் வீட்டுக்குவாருங்களென்று வேண்டிவேண்டி அழை க்குமட்டும் நாம்பிகுவாயிருந்தால் நமக்குவரம் அகப்படும் அதுவரை க்கும் ஒருவருடனே ஒருவர்பேசாமல் பூமியிலேவிழுந்து படுத்துக் கொள்ளுங்களப்பா தம்பிமார்களே.

மிருகண்டர் - சிஷர்களுக்குச்சொல்-விருத்தம்.

இனிமனோன்மணியேஞானச் சிரோன்மணியுமானசிஷா
மணிகெண்டாமணியேமெத்தமவுனசிந்தாமணியேகேளாய்
பணிவிடைசெய்யும்நீங்கள் பாவையும்காமுமாக
அணியணியாய்நடந்து ஆசிரமம்போவோம்வாரீர்

(வசனம்.) ஆராடா அடாசிஷர்களே நாம் ஆசிரமம்போய்ச் சேருவ தாகஅழைத்தால் ஒருவரும்பேசாம லிருப்பதென்ன இடக்கானவார் த்தையைக்கொடுப்பதென்ன அடா உங்களுக்கு யேதோகொஞ்சம் கு றைவந்திருக்கிறதைப் போலத்தோற்றப் படுகின்றது அந்தக்குறை யைச் சொன்னீர்களானால் உங்கள்மனக்குறையைத்தீர்த்து அழைத்து ப் போகிறேன் சொல்லுங்களப்பாசிஷர்களே.

சிஷர்கள்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

தேவரீர்தவத்தைச்செய்தீர் சிவன்வந்துவரமளித்தார்
ஆவலாய்க்காத்திருக்கும் அடியார்கள்வீணாகினும்
சேவகபசகளுக்குத் தேவதானென்றுமில்லை
தீவரமாகயிந்தச் சிறுபுட்டைபெருக்கவேணும்

(வசனம்) சுவாமிசுவாமி எங்களுக்குக் குறையொன்றிருக்கின்றது அதென்னவென்றால் உமக்குமாத்திரம்சிவன்வந்து வரமளித்தார் நாங்க ளிதுவரைக்கும் காத்திருந்தும் வீணாய்ப்போனோம் இப்பவும் யெங்க ளுக்கு வேண்டியதொன்றுமில்லை இந்தபுட்டை பெருக்கும்படியாய் வ ரங்கொடுக்கவேண்டுஞ்சுவாமி

மிருகண்டர்-சிஷர்களுக்குச்சொல்-விருத்தம்.

பூமியில்லாதவார்த்தைப் புதுமையாய்சொல்லவந்தீர்
ஆமடாசிஷரோநீ ராசையாய்கேட்டபோதே
பாமுடைந்திட்டாற்போலப் பருத்திடவேணும்புட்டை
காமிதோவரமளித்தோம் நடந்திடீர்மனைக்குப்போவோம்

(வசனம்,) பளா பளா பூமியிலில்லாதவார்த்தையைச் சொல்லவந் தீர்சரியாக்குமா நல்லதுஉங்களுக்கேன் குறையாயிருக்கவேண்டும் நீ

ங்களை ஆசையாகப் புட்டைபெருக்வரங்கேட்டபடியினாலே அப்படி யே இன்னபுட்டைபெருக்க வரமளித்தேன் நடந்துவாருங்களப்பாசி ஷர்களே.

சிஷர்சொல்--தரு-இ-ம்-புன்னாகவராளி--ஆதிதாளம்.

பல்லவி.

சந்நேபொருத்துதே து-இது- மெத்தவருத்துதே

அநுபல்லவி.

இத்தையெப்படி யெடுப்போந்தம்பி
யேதடாவுன்னுது யீதடாயென்னுது (சந்நே)

சரணங்கள்

மோசம்வந்துதே-அப்போ
ஆசை தந்துதே
வீசிநடப்பதெப்படி தம்பி
விட்டுப்போகுதே-புட்டை நோருதே (சந்நே)

ஆட்டிப்புடைக்குதே-இதே
நாட்டித்துளைக்குதே
ஓட்டிநடப்பதெப்படி-தம்பி
ஒடுக்கிப்போகுதே கெடுக்கத்தேடுதே (சந்நே)

காலும் கையுதே-மெத்தக்
கோலஞ்செய்யுதே
ஞாலமுனிவர் செய்தது தம்பி
ஞாயமோவது வுபாயமேயிது (சந்நே)

சிஷர்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்,

கொப்பெனவரமளித்த கோலமாமுனிவர்கோவே
அப்பனேயிதையெடுக்க ஆகுமோயெங்களாலே
தப்பிதம்வந்ததற்குத் தாடையிற்போட்டுக்கொண்டோம்
இப்பவும்வலிசிறக்க வினியதாய்த்தயவுசெய்வீர்

(வசனம்) சுவாமி சுவாமி நாங்களறியாமல் மாட்டிக்கொண்டோம் புத்திவந்து தாடையிற்போட்டுக்கொண்டோம் இதையெடுக்கவெங்க ளால் ஆகாது போதும்போதும் எப்போதும்போல இந்தவலிசிறக்க வரங்கொடுத்து ரட்சிக்கவேணுஞ்சுவாமி.

மிருகண்டர்சிஷர்களுக்குச்சொல்தரணி

வருத்தந்தெரிந்ததாயிப்ப மதியுந்தெளிந்ததாநாளும்
உருக்கமாகவரமளித்தேன் ஓடிநடந்துவாருவீரே

சிஷர்கள்சொல்-வசனம்.

மகாசந்தோஷம்மகாசந்தோஷம் அப்படியேஇதோவருகிறேன்சுவாமி

மிருகண்டர்-சொல்-தரு-இம்-புன்னாகவராளி-மிசரதாளம்

பல்லவி.

நடந்துவா மயிலே-பதிசேரவேணும்
நடந்துவா குயிலே

அநுபல்லவி

நடந்துவாயிந்த அடர்ந்தவனம்விட்டு
வுடந்தையானபெண் மடந்தையேயினி(நடந்து)

சரணங்கள்.

என்னினப்படி யின்னுவனத்தினில்
அன்னமொருவரன் கண்ணமித்தனர். (நடந்து)
நந்திவாகன ரிந்தவேளையில்
வந்துநமக்கொரு வரந்தனளித்தனர்
கள்ளமில்லாம உள்ளபடியிங்கு
வள்ளல்நமக்கொரு பிள்ளையளித்தனர் (நடந்து)

மிருகண்டர்-சிஷர்களுக்குச்சொல்-விருத்தம்

அரிதானமாலயோகா மருந்தவஞ்செய்யயீசன்
பெரிதானவரமளிக்கப் பேதையுநானுமாக
விரிவானவாசிரமத்தின் விதிக்குவந்தோமப்பா
பரிவானவாசனத்தைப் பவனிக்கப்போகிரோ

(வசனம்) ஆஹா சிஷரோநாம் கானகத்தில் தவஞ்செய்யயீசர்வந்து வரமளிக்க வரம்பெற்றுக்கொண்டு பெண்ணாளாகிய ஞானச்சதிராளு ம் நீங்களும் நானுமாக ஆசிரமம்வந்து சேர்ந்தோம் சற்றுநேரம் பவனி க்கவேணும் ஆகையால் ஆசனத்தைப்போடும்பிள்ளாய்..

சிஷர்-மிருகண்டருக்குச்சொல்-கவி.

சுத்தனேதேவர் பித்திரைசெய்ய
பத்தியாயாசனம் பவனிக்கப்பட்டோம்

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-கவி.

கவனமாய்க்கானில் சிவனருள்பெற்ற
தவதிலேபெண்ணே பவனிக்கவாராய்

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

என்னிடபிராணநாதா யீசனார்தன்னைநோக்கி
முன்னக்காம்தவந்தனைச்செய்து மூர்த்தியைக்கண்டுபுத்ரன்

தன்னை தாம்வாங்கிவந்த தயவினாலேகர்த்தன்
சொன்னசொற்படிமுடித்தார் சோதியைத்தொழுதிடுமே

(வசனம்) கேளும் என்பிராணநாதரே அடியாளைப் பவனிக்குச் சொன்னீர் மெய்யே நாம்தபசுசெய்துவந்த தபோபலத்தினாலேயும் சாம்பசிவமூர்த்தியின் அநுக்கிரகத்தினாலேயும் சிறுவனைப்பெறுவதான வேளைபோலக்காண்கிறது அதுஎப்படியென்றால்நான் வழியில் வரும்போது தானே அடிவயறுகனத்துவந்தது தேகம்பாரித்திருந்தது இப்போது இரண்டுபக்கமும் விட்டுப்போகுது தேகம் ஒருவகையாயிருக்கவில்லை நான்சிறுவனைப்பெறுகிறவரைக்கும் தேவரீர் சிவத்தியானத்திலிருக்கவேணுஞ் சுவாமி.

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-கவி.

அப்படியேயுஞ் சொற்படியேசிவன்
பொற்பதங்காணவே கற்பனைசெய்வேன்

ஞானச்சதிராள்-கெ[illegible]ப்பவேதனையால்-சொல்-சிசபத்தியம்

இ-ம்-[illegible]ண்டா.

ஆதிமூலப்பொருளே [illegible]ச்சுடரோயென்
னாலேபிணியாகுமோ யிந்நாளில்வருவாய்
காதவத்திப்படிக் கப்பென்றடைக்குதே
கயிலாசவாசனே கருணைபுரிவாய்
மெய்தன்னிலெங்கினும் வீணைபோல்மீட்டுதே
மெய்யனேயொருவர மெள்ளதருவாய்
வாதையிப்படிப்பட வைத்தாயோகர்த்தனே
வள்ளலேயென்னிட மனதையறிவாய்
வந்துநீயெத்தனை யிந்தவேளை
தொந்தமாய்க்காத்திடும் நந்திவன்னா
நொந்துநொந்தழுகிறேன் வந்தையைத்தீர்
கந்தனைப்பெற்றிடும் அந்திவன்னா.

இதுவும்-ஞானச்சதிராள்-சொல் - சிசபத்தியம்-இ-ம்-கண்டா.

நந்திவண்ணாவுனை நம்பினேனம்பினேன்
நாகபூஷணசிவ நாதநாதா
யிந்தவேளையினிலே யெனக்காருமீசனே
இவ்வேதைபடுவனோ யீசயீசா
உந்தனருளாச்சுதே வுள்ளவேவதைக[illegible]த
வுண்டில்லையென்னுதே வுமை[illegible]

சிந்தைப்பமானேனே செல்வனைக்காணேனே
திரிபுரமெரித்திடுந் தேவதேவா
சித்தம்வைத்தெந்தனை யித்தனமுமே
கர்த்தனேகாத்திட ரத்திமுகனைப்
பெற்றிடும்வஸ்துவே பத்தியுள்ள
புத்திரனைப்பெற்றிட சித்தம்வைப்பாய்

ஞானச்சதிராள்-கெற்பவாதனையால்சொல்

தரு-இ-ம்-ஆகிரி-அடதாளம்

பல்லவி.

கர்த்தனேயிதவாய் செல்வனைநான் பெற்றிடவுதவாய்.

அநுபல்லவி.

அத்திமுகனைப்பெற்றவுத்தமம யேசா
இத்தனைவேதையில் வைத்தாயோ யீசனே (கர்த்தனே)

சரணங்கள்.

எந்தனுள்ளவயிற்றினிற் பந்தாகச்சுருட்டுது
இந்தப்பக்கமிரண்டும் நொந்துமநாந் துருட்டுது (கர்த்தனே)
இத்தனைவேதையில் வைத்தாயோயீசனே
குத்துதென் குலைமார்பில் சத்திமயேசனே (கர்த்தனே)
எப்படியெப்படி அப்பணிசடையோனே
இப்படிப்வேது ஒப்புமோகடையூரானே (கர்த்தனே)
பிஞ்ஞாகயென்னிட சஞ்சலந்தீர்த்திடும்
செஞ்சடையீசனே பஞ்சையைக்காத்திடும் (கர்த்தனே)

ஞானச்சதிராள்-சொல்-கொச்சகம்.

ஆதியேபரஞ்சுடரே யாதரிக்குமுமையவளே
நீதியுடன்சுதனளித்து நிஷ்டூரமாகயிப்போ
வாதைக்கிடம்வைத்ததென்னவயறுளைப்புக்கென்னசெய்வேன்
சாதகநெஞ்சத்தைவிட்டுக் காத்தருளுமெய்ப்பொருளே

(வசனம்) அரகரா அரகரா ஆதிபரஞ்சுடரே ஆதரிக்கு மநோன் மணியே அடியார்களுக்குப்புத்திரபாக்கியமளித்து இப்பேர்க்கொத்தவேதனையைக் கொடுத்ததென்ன அடியாளெவ்விதம் பொறுப்பேன் என்னைக்காத்தருளும் ஈசாஈசா.

பொதுவிருத்தம்.

தத்தைநேர்மொழியாள் ஞானச் சதிராளுங்கெர்ப்பமாகி
மெத்தவுஞ்சிவனைநோக்கி வீறிட்டுப்புலம்பும்போது
உத்தமர்பாகம்வாழு முமையவள்காதிற்கேட்டு
கர்த்தனுக்கேற்றவார்த்தைக் கடிதினிலுணர்க்கின்றாளே.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் இப்படியாகஞானச்சதிராள் கெர்ப்பவேதனைப்படுகின்றதைக் கேட்ட உமையவளானவள் மனந்தாளாமல் தன்னுடைய நாயகராகிய பரமசிவனுக்குச்சொல்லுகிற விதங்காண்க.

ஈஸ்வரிசுவாமிக்குச்சொல்- கொச்சகம்.

மாசிலாமணியே மாகயிலைவாழ்பரமனே
ஆசையுடனேவனத்தி லருந்தவத்தைச்செய்வதற்குப்
பாசமுடன்வரமளித்தீர் பாவைஞானச்சதிராள்
ஈசாஈசாவெனவே யேங்கித்தவிக்கின்றாளே

(வசனம்) சரணஞ் சரணஞ்சுவாமி தேவரீர்இப்போது வரமளித்தீரே திருக்கடையூர் மிருகண்டமகாமுனியினுடையதேவியானஞானச்சதிராள்கெர்ப்பவேதனையினாலே மிகவும் ஈசாஈசாவென்றுபரிதவிக்கின்றாள் அதற்குக்கிருபை அருளிச்செய்யவேணுஞ்சுவாமி.

சுவாமி யீஸ்வரிக்குச்சொல் - கொச்சகம்.

ஏங்கித்தவித்திடுமாதுக் கிரங்[illegible]னரம்பையுமொரு
பாங்கியர்போல்வடிவுகொண்டு பக்கலிற்போயுதவியதால்
ஆங்குமஞ்சமேல்வளர்த்திச் சுதன்றாய்வேறாகச்செய்ய
மாங்குயிலையிடப்பாகம் வாழ்மனைவிபோய்வாராய்

(வசனம்) பெண்ணேயென்பிராணநாயகியே அந்ததபசிகளுக்குப் பிள்ளையளித்தபோதே முழுமையுங்கார்க்கத்தான்வேணும் இப்பவும்நீ ஒருமருத்துவக்கிழவியைப்போலே வேஷங்கொண்டு அந்தஞானச்சதிராளிடத்திற்குப்போய் அப்பெண்ணைக் காத்துரட்சித்துத் தாய்வேறு பிள்ளைவேறாகச்செய்து பாலனைவாழ்த்திவாராய் பெண்ணே.

ஈஸ்வரி-சுவாமிக்குச்சொல்-வசனம்.

தேவரீர்சொன்னபிரகாரம் அப்படியேபோய் வருகிறேன்சுவாமி.

பொது விருத்தம்.

மெய்யனிடமதிலம்மன் விடையதுபெற்றுக்கொண்டு
வையமீதினிலேமெள்ள மருத்துவக்கிழவியைப்போல்
கையிலேதடியொன்றூணிக் கண்களைச்சிமிட்டிக்கொண்டு
தையலாளனும்பின்ஞானச் சதிராளினருகில்வாராள்.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் இப்படியாக ஞானச்சதிராள் பிரசவவேதனைகாலத்தில் யீஸ்வரி பரமசிவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு மருத்துவகிழவியைப்போலே வேஷம்பூண்டு ஞானச்சதிராள் அரண்மனைக்குவருகிற விதங்காண்க.

மருத்துவக்கிழவி-வருகிற-தரு-இ-ம்-புன்னாகவராளி- ஆதிதாளம்;

பல்லவி,

கிழவிவந்தாளே மருத்துவக்
கிழவிவந்தாளே

அநுபல்லவி.

கிழவிவந்தன ளழகொழுகிடவிதோ
முழமுழதேசப்புரு மூலிகளுமாடவே (கிழவியும்)

சரணங்கள்,

வாயினிற்சுங்கானும் வைத்து
வாதுகள்தான்பெற்று பெற்று
தாயினுந்தாயதுபோலமெள்ளத்
தள்ளாடித்தள்ளாடிக்கொண்டிதோ (கிழவியும்)

கொங்காணிமுகரும்படைத்துக்
குலுங்கக்குலுங்க நகைத்து
சிங்காரங்கெட்டிடுங்குழிக்கண்களைச்
சிமிட்டிச்சிமிட்டிக்கொண்டுமேயிதோ (கிழவியும்)

கூனுமுதுகுமாகக்காட்டிக்
கொண்டுகைகளை நீட்டி
ஞானச்சதிராளிடவேதைப்பாராட்டி
நயத்துடனேதன் முகங்களைக்காட்டி (கிழவியும்)

வேறு-தரு.

கலங்கள்கெடக்குது கழுவாமல்
கலநெல்லுகெடக்குது நோம்பாமல்
நிலத்திசிகிடக்குது குத்தாமல்
நேரமில்லே கேவுராதைத்திடவும்
குத்தாணியுன்னைநானுமிப்போ
கூத்துப்பார்க்கச்சொன்னேனே
கூத்துவந்துகும்கும்மென்ன
குத்திலேகட்டசிலையில்லை
வத்தானேவந்தாளேயிதோ
மருத்துவக்கிழவியும்வந்தாளே

மருத்துவக்கிழவி- ஞானச்சதிராளுக்குச்சொல்-கவி,

எனடியம்மா யிசலைத்துநித்தாய்
மானிடசெனனமோ வாதைதனயச்சொல்வாய்

(வசனம்) அடியம்மா ஞானச்சதிராளே ஏனடியம்மா ஈசனை மிகவும் நீ நினைத்துப்புலம்புகின்றாய் உனக்கு என்னமாய்த்தானிரு க்கின்றது சொல்லடியம்மா.

ஞானச்சதிராள்சொல்-கண்டா-தரு-இ-ம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னமென்றுரைப்பேன்-அம்மா-அம்மா-நான்
எப்படிபொறுப் பேன்

அநுபல்லவி.

இன்னதின்னதென்றென்னமாய்ச்சொல்வேன்
எப்பவாகிலுமிப்படியானேனோ (என்ன)

சரணங்கள்:

மைந்தனுசையாலேமகுணனுடன்கூடி
மாதபஞ்செய்தேனே ஆதலாலேயிதை (என்ன)

அம்மணிமார்பையபடைக்குதெ[illegible]னடி
அறிகிலேனிதைத்தெரியவுரையடி (என்ன)

பக்கத்திலிதோ பதைக்குதவுதைக்குது
பாரடியென்னைநீ காரடியம்மணி (என்ன)

விசாராலேவந்த யிடிநிந்தையோ[illegible]யிது
எப்படி அம்மணி இப்படிநோகுதே (என்ன)

மருத்துவக்கிழவி-ஞானச்சந்திராளுக்குச்சொல்-கவி.

உத்தமிமாதே ஒருபயமில்லை
கர்த்தனைத்துதிசெய் கார்க்கிறாரம்மணி

ஞானச்சதிராள்சொல்-கந்தார்த்தம்.

மாதேகர்த்தனைமனதிலெண்ணியேவாடி
யேதோயித்துடியிடைநோகுதுயென்ன
குதோவருகில்நில்லடி யிதுநிலைசொல்லடி
ஆதிசோதியானோரவாசொரூபம்
அறிகிலேனம்மா சங்கரன்குணந்தெரிகிலேனம்மா
அறிகிலேனெப்போதும் அறிகிலேனிப்படி
திரிபுரமெரித்திடும் பரமன்செய்திடுங்கோலம் (அறி)

வேறு-கந்தார்த்தம்.

சிவனேசிவனே சிருடன்வனமதிற்செய்த
தவமோதனாயினித்தள்ளுந்துதரிக்கிலைதானே

அவமாயேனோஅலைவது யென்னிடஐயா
ஒவ்வுதோயிதுவுன்மனமிதங்கியிங்கு
ஓடிவாஅரனே என்னைநீயிப்போ தேடிவாபரனே
ஓடிவாவுமையுடன் கூடியநாதனே
காடுபந்தனித்தாற்போ லோடிவந்தருள்புரி (ஓடிவா)

ஞானச்சதிராள்-சொல்-கொச்சகம்.

வள்ளலேசங்கரனே மான்மழுவுந்தரித்தவனே
என்னுக்குள்ளாயிருந்த யென்னெணயும்வேறுணதுபோல்
பிள்ளையைநானுமதருளாற் பெற்றெடுத்தேன்சங்கரனே
வுள்ளநாள்சுகமடைய வொருமனதாய்க்காப்பாயே.

(வசனம்] அரகரா மான்மழுமணிந்த மயேசனே வாதையைத்தீர்த்த கர்த்தனே கயிலாசபதியே உமதருளினாலே பிள்ளையைப் பெற்று சுகமதாகினேன் இனிமேலும் எங்களைக்காத்துரட்சித் தருளிப் பதவிதாருங்கர்த்தனே

கிழவி-ஞானச்[illegible]திராளுக்குச்சொல்-கவி.

உத்தமிமாதே உன்மகன்வாழி
சித்தருமகிழச்செலவதுதாராய்

ஞானச்சதிராள் கிழவிக்குச்சொல் -கவி.

பாட்டிநீகேளாய்-[illegible]ாக்கியமோவுன்னைக்
கூட்டிற்றுதெய்வங் குறைவிலேநடவாய்

சீஷர்கள்-மிருகண்டருக்குச்சொல்-கவி.

சந்தோஷிஞ்சுவாமி சந்தோஷமிப்போ
சந்தோஷமின்னுஞ் சந்தோஷித்தானே

மிருகண்டர் சீஷருக்குச்சொல்-கவி.

என்னடாசீஷர்களே என்னடாவுங்களுக்கு
என்[illegible]டாவந்ததுதான் என்னடாசொல்வீர்

சீஷர்-மிருகண்டருக்குச்சொல்- விருத்தம்.

அப்பாவுபிறந்தானையா யாங்களுமினிமேலத்னைச்
செப்பமாயெடுத்துப்போயி செண்டுகளாடிப்பின்னும்
கொப்பாகக்குதித்துக்கோலி குண்டுகளாடிமொச்சை
பப்புகள்தின்னுகொண்டு பலிவிளையாடுவோமே

(வசனம்) சுவாமி சுவாமி அப்பாவுபிறந்தான் இனி நாங்களவனையெடுத்துக்கொண்டுபோய் பப்புகள்வாங்கிக்கொடுத்து கெச்சக்காய்செண்டுகோட்டிபாடிகுதித்துகுதித்து பலிசப்ளாக்குடுகுடு ஆடிவருவோஞ்சுவாமி.

ஞானச்சதிரான்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்,

வேதாமுனிநாதாசரணம்
ஆதிமூலப்பொருளாலே
நாதாயானேர்புத்திரனிப்
போதேபெற்றுவந்தேனே

மிருகண்டர்ஞானச்சதிராளுக்குச்சொல்- விருத்தம்,

திருவுளச்செயலினுலே செனமித்தபாலனுக்கு
மருவியேவாழததியானு மார்க்கண்டனெனும்பேர்தந்தேன்
அருமையாய்தேவர்வாழ்த்த அருமறைமுனிவர்போற்ற
பெருமையாய்நீயுமிந்தப் பிள்ளையும்வாழ்கவாழ்க

(வசனம்) வாராய்பெண்ணே ஞானச்சதிரே அந்ததிருவுளச் செயலி னுலே உனதுவயிற்றிற்செனமித்த இந்தபாலனுக்குமார்க்கண்டனென் று பெயர்கொடுத்தேன் இனிஇந்தப்பிள்ளையும் நீயும் சிரஞ்சீவியாயவா ழ்க வாழ்கஇப்போது இந்தபாலகனைத் தொட்டிலிலேவளர்த்தி தாலா ட்டும் பெண்ணே ஞானச்சதிரே.

ஞானச்சதிராள்-தாலாட்டுகிற-கண்ணிகள்-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ

ஞானமாமுனியே செல்வமேயென்கண்ணே
போனபாலகனே பிள்ளைகலிதீர்த்தவனே (ஆராரோ)
பொன்னேநவமணியே புகழோங்கவந்தவனே
மின்னேதிருவழகே விளங்கவந்தமார்க்கண்டா (ஆராரோ)
குச்சரிஷிவங்கிஷமே குலக்கொழுந்தேயென்கண்ணே
உச்சிதமாகியசுடரே உத்தமனேகன்னவளராய் (ஆராரோ)

மிருகண்டர்-சீஷர்களுக்குச்சொல்- விருத்தம்.

சீஷரோகேளிரேந்தன் செல்வமார்க்கண்டனுக்கு
சீஷரோவயதைந்தாச்சு தெரிவிக்கவேணுங்கல்வி
சீஷரோநீங்களெந்தன் தேவிதன்னிடத்திற்சென்று
சீஷரோயிதுவுரைத்துச் செல்வனையழைத்துவாரீர்

(வசனம்) ஆரடா அடா சீஷரே எனது குமாரனுகிய மார்க்கண்ட னுக்கு ஐந்துவயதாசசுது கல்விகற்பிக்கவேண்டும் நீங்கள் ஞானச்சதி ராளிட ஆசிரமத்துக்குப்போய்மார்க்கண்டனை அழைத்துவாருங்களப்பா.

சீஷர்சொல்- பாணி,

வாடாஞானசிரோன்மணியே மகிழ்வாமிருகண்டயர்பெற்று
நாடோர்புகழும்பாலகனே நாம்போயழைத்துவருவம்வா

சீஷர்-ஞானச்சதிரானுக்குச்சொல்--கவி.

தாயேமிருகண்டையனுநந் தன்பாலிருக்கும்பாலகனை
மாயாவினோதமாயழைத்து வருகச்சொன்னானுப்புவையே

ஞானச்சதிரான்-சீஷருக்குச்சொல்- பாணி.

சீஷரேநீரிப்படிக்கே செல்வனுனபாலகனைப்
பாசமிருந்தமிருகண்டர் பக்கல்கொண்டுபோய்விடுவீர்

சீஷர்-மார்க்கண்டனுக்குச்சொல்-பாணி,

அப்பாமைந்தாமார்க்கண்டாஜயருனைப்போயழைத்துக்கொண்டு
இப்போதேவாச்சொன்னார் எழிலாய்நடந்துவருவாயே

மார்க்கண்டன்-சீஷருக்குச்சொல்-பாணி!

ஆசையாயென்தந்தையர்தான் அழைத்தபோதேநான்மெத்தப்
பாசமாகவேவருவேன் பரிவாய்நடவீர்சீஷர்களே

—மார்க்கண்டன்வருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

ல்லவி.

மார்க்கண்டனிதோவந்தான் - ஜெயமார்க்கண்டனிதோவந்தான்.

அநுபல்லவி.

தீர்க்காயசுபடைத்தோன்-பெண்
சித்தமதைவிடுத்தோன்-ஜெய (மார்க்கண்)

சரணங்கள்,

அண்டரண்ட மகிக்க-இந்த
அவனியெங்கும் அதிக்க
கண்டவர்தொழு திருக்க-மிரு
கண்டர்மனங் களிக்க-ஜெய(மார்க்க)

ஞானகல்வி யுடையோன்-முனி
நாதர்வண்ணியும் விடையோன்
தியானகுறிக் கிடையோன்-அரன்
சிரேஷ்ட பூசைக் குடையோன்-ஜெய(மார்க்க)

அல்லிமலரை யெடுப்போன்-மெத்த
அன்பாகைத் தொடுப்போன்
செல்விசிரசில் விடுப்போன்-ஆதி
தேவர்பாதம அடுப்போன்-ஜெய(மார்க்க)

சீஷர்-மிருகண்டருக்குச்சொல்-பாணி,

மெய்யனேசரணம் விச்சித்ராபாலனை
ஐயனேநாங்கள் அழைத்தோடிவந்தோம்

மார்க்கண்டன் மிருகண்டருக்குச்சொல்-பாணி.

காதலாய்பெற்ற நாதரேயென்னை
எதிறலழைத்தீர் ஓதுவீர்புத்தி

மிருகண்டர்-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்.

அப்பனே கண்ணேவாடா அருமைமைந்தனேயுனக்கு
இப்பவும்வயதைந்தாச்சு யினியுனக்கிசைந்தகல்வி
செப்பமாய்ச்சொல்லிவைக்கச் சிந்தையிலெண்ணியுன்னைக்
கொப்பெனவரவழைத்த குறியிதுவறிந்திடாயே.

வசனம்.

அப்பாமார்க்கண்டா உன்னையழைத்ததென்னவென்றால் இப்பவும் உனக்குஐந்துவயதாயிற்று காலத்தில் கல்விகற்பிக்கவேணும் ஆகையால் உனக்கு சீக்கிரத்தில் கல்விகற்பிக்கவேணுமென்று அழைப்பித்தேனப்பா மார்க்கண்டா.

மார்க்கண்டன்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

தந்தையேயுமதுவாக்கியந் தவறுமலப்படிக்கே
எந்தனுக்கடுத்தவித்தை யெல்லாம்நீர்சொல்லிவைத்தால்
உத்தமனாசீர்வாதத்தாலுலகத்தோரதிசயிக்க
அந்தகனென்னைக்கண்டு அலறிடச்செய்குவேனே

வசனம்.

கேளும் என்னுதந்தையே உமதுதிருவாக்கின்படியே எனக்குண்டாகிய வித்தைகளைச்சொல்லிவைத்தால் இந்த ஈரேழுபதினாலுலோகமும் அதிசயப்பட அந்த யமதர்மராஜனும் என்னைக்கண்டுபயந்து பின்னிட்டோடும்படி செய்விப்பேன் ஐயாவே.

மிருகண்டர் சிஷருக்குச்சொல் பாணி.

பாசமாகப்பெற்றெடுத்த பாலனுக்குத்தமிழுரைக்க
சீஷரேநீரோதுவ்வா செக்ஷணத்திலழைத்துவருவீரே

சீஷர்கள்சொல்-பாணி.

தம்பிமார்க்கண்டனுக்கிப்போ
ஸ்தயர்கல்வி சொல்லிவைக்க
நம்மாலோ அவர்தான் வருக
நாடிஞர்காணழைப்போம்வா

சீஷர்-வசனம்.

ஆனால் அப்படியே போவோம்வா அண்ணே.

பொது கவி.

வேதமாமிருகண்டையர்
வேண்டியின்றமைந்தனுக்குச்

சாதகந்தமிழுணாக்கத்
தானேவோதுவர்வாராரே.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் மிருகண்டமகாமுனிவருடைய புத்திரனாகிய மார்க்கண்டேயருக்குக் கல்விகற்பிக்கஉபாத்தியாயராகிய வேதியர்வருகிற விதங்காண்க.

உபாத்தியாயர்வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

ஓதுவர்வாரார்-குலகுரு-வேதியர்வாரார்.

அநுபல்லவி.

நீதியறிந்தவர் நேர்மைதெரிந்தவர்
சாதகநூல்முறை சாஸ்திரங்கற்றவர் (ஓதுவர்)

சரணங்கள்.

அஷ்டாங்கஞ்சுத்தி யறிந்தபேர்பெற்றவர்
அருமறைமுனிவர்க்கு மறிவுகொடுத்தவர் (ஓதுவர்)
வேதமார்கலைகளும் வெண்ணிட்டறிந்தவர்
வித்தியாகுருவென்னும் வீறிபேவாழ்ந்தவர் (ஓதுவர்)
பூமியையாளும் புகழுள்ளமன்னர்க்குப்
புத்தியுணர்த்தும் பெருமைப்படைத்தவர் (ஓதுவர்)

உபாத்தியாயர்-சட்டாம்பிள்ளைக்குச்சொல்-விருத்தம்.

ஆடாசட்டாம்பிள்ளை ஆதிமூலமேநீவாடா
பாடாபசகளெல்லாம் பயப்படாதிருப்பதென்ன
கூடாயேட்டைப்பார்த்துக் கூக்குரலாய்ப்படிக்க
சேடாபிரம்பினாலே சிவுக்கெனவடித்திடாயே

வசனம்.

அடாவாடா சட்டாம்பிள்ளை ஆதிமூலம் என்னடா பசகளெல்லாம் கலகலென்றுபடிக்காமல் விளையாடிக்கொண்டிருப்பதென்ன கோஷ்டமாகப்படிக்கச்சொல்லிப் பிரம்பையெடுத்துசிவுக்கென்று அடியடா அடியடாசட்டாம்பிள்ளையாகிய ஆதிமூலமே அப்படியேசெய்கிறேனையா.

சட்டாம்பிள்ளை-பசகளுக்குச்சொல்-தரு.

இ-ம்-கேதாரகௌளம்-மிசுரதாளம்.

பல்லவி.

அடட்டாப்படியடா சுவடியை-நல்ல
தாகட்டுமொகட்டுந்தகடியே

அநுபல்லவி.

கொட்டீர்வன்றுடையில் குறைப்பாஉன்பாடங்
கொண்டுவாவன்னடையில் மொண்டிநீபண்ணுதே (அடடா)

சரணங்கள்.

ஆத்திசூடிபடித்திடும்வீராசாமி நீயிங்கேயில்லடா
நேற்றுவருகாதமுத்தையா யிந்தநிலத்திற்காலூன்றியில்லடா
போற்றிப்பணிந்திடும் புண்ணியவேர்துவர்
பொல்லாதகாதகர் வல்லாள்ளையசீர்தகர் (அடடா)

நீகண்டபன் விரலெடுக்குஞ்சொல்லும்
நீலகண்டாநீவாயைத்திறவடா
சிகண்டிவேஷங்கொண்டு சேர்ந்தீர்களிருவரும்
நீச்சமதமோடா கூச்சலேதடா (அடடா)

காட்டுச்சொல்லே சொல்லாய்ப்பேசிடுமப்பு
காளத்தியுன்பாடங் கொண்டுவா
உருட்டிப்பார்ப்பதேது உள்ளான்மூஞ்சிநாயே
உலகத்தைநீவெல்ல கலகத்தைக்கொண்டாய் (அடடா)

சட்டாம்பிள்ளை-உபாத்தியாயருக்குச்சொல்-விருத்தம்.

அந்தணரோநீரெங்க ளையரோநீலகண்டன்
தந்தைதாய்சொற்கேளாமற் றறிதலையாகியின்னம்
எந்தனைமதிக்கிடாம லெதிர்த்துமேகவிழ்த்துவிட்டான்
இந்தகாரியஞ்செய்தோனுக் கென்செய்வோஞ்சொல்லுஞ்சுவாமி,

வசனம்,

சரணம் சரணம் வித்தியாகுருவே நிகண்டிக்கு உமைகேட்கப்பட்
ட இந்தநீலகண்டன் நாம்இந்தவித்தைகற்றுக்கொண்டோமென்கிற
கெர்வத்தினாலே தன் தாய்தகப்பன் சொல்லுங்கேளாமல் என்சொல்லு
ங்கேளாமல் நான் ஏதாகிலுஞ்சொல்லப்போனால் உறுமிமிரட்டிக்கொ
ண்டு மகாதறிதலையாய் தன்மனதுபோனபடிக்கு நடக்கிறான் அவனை
யென்னசெய்கிறது சுவாமி.

உபாத்தியாயர்- சட்டாம்பிள்ளைக்குச்சொல்-விருத்தம்.

புத்திசாலுவாப்பேன்கேளாய் புகழ்பெற்றசட்டாம்பிள்ளை
இத்தனைகெர்வங்கொண்டு யென்னுமல்நடந்தோன்றன்னை
குத்திடுஞ்சிட்டக்கல்லைக் கொடுவந்துகாற்குமகைக்கும்
வித்துமமாட்டிவிட்டு வெய்யலில்நிறுத்துவாயே,

வசனம்.

அடாகேளடா சட்டாம்பிள்ளை ஆதிமூலம் ஐப்பேர்க்கொத்தபொ
ல்லாதவனு அந்தநீலகண்டன் அவன்தாடையிலறைந்து பசங்களையெல்

லாம் விட்டு காறியுமிழச்சொல்லி கறடுமுறடாயிருக்கப்பட்ட சிட்டக்க
ங்களைக் கொண்டுவந்து காலுக்குங் கைக்குமாட்டி அவனுக்குப் புத்திவ
ருகிறவரைக்கும் இந்தவெய்யலில் நிறுத்திவையும் பிள்ளாய்.

சட்டாம்பிள்ளை நீலகண்டனுக்குச்சொல்-விருத்தம்.

வாத்தியாருரைத்தபோதே வழக்கென்னபுழக்காவுன்னை
சேர்த்துமேகான் பிடித்துக் கட்டினேன் நீலகண்டா
பார்த்தையாசிட்டந்தன்னைப் பதைத்திடவுங்காற்கைக்கும்
சாத்துவேனிந்தவெய்யல் தன்னில்நீயிருந்திடாயே

வசனம்,

அடாவாடா நீலகண்டா உபாத்தியாயர் உத்தாவு வந்தபோதே உ
ன்னைக்கொஞ்சத்திலே விடப்போகிறதில்லை இதோமாட்டினசிட்டமு
ங்கொஞ்சத்தில் வாங்கப்போகிறதில்லை உன்னுனுவம் இப்போதெங்கே
போயிற்று சீச்சி திருட்டுமூஞ்சி உனக்குப்புத்திவருகிற வரைக்கும்இந்
தவெய்யலிற்றானே விழுந்துகிடவும் பிள்ளாய்.

நீலகண்டன்-புலம்பல்-கண்ணிகள்-இ-ங-முகாரி-ஆதிதாளம்,

ஐயாசட்டாம்பிள்ளை யென்னையாசிட்டத்தை
  அன்புடனே வாங்குமையா
ஐயாஐயாசரணம் ஐயாவுன் திருவடிக்
  கையாசட்டாம்பிள்ளை யென்னையா
காலுங்கடுக்குதே ஐயாஐயாஐயாசிட்டத்தை
  கடுகெனநீர்வாங்குமையா எந்தன்
மார்பையுளைக்குதே ஐயாசிட்டத்தை
  மகிழ்ச்சியாய் நீர்வாங்குமையா எந்தன்
இடுப்புந்துடையுதே ஐயாஐயாஐயாசிட்டத்தை
  எழிலுடனீர்வாங்குமையா எந்தன்
பக்கமுளைக்குதே ஐயாசிட்டத்தைப்
  பரிவுடனே வாங்குமையா
ஐயாசரணமென்னையா சிட்டத்தை
  அன்புடன் வாங்குவீரையா
வெய்யலுரைக்குதே விடாய்மிகக்கொடுக்குதே
  வேர்வைநீரொழுகுதே ஐயா
ஐயாபள்ளிக்கூடமென்னையாயினிநான்
  அமர்ந்து படிக்கிறேனையா

சட்டாம்பிள்ளை-உபாத்தியாயருக்குச்சொல்-விருத்தம்.

ஐயரேசரணமையா அவனுக்குச்சிட்டமாட்டி
வெய்யிற்போட்டபோதே விடாய்த்தனனிதுவல்லாமல்
கைகளுங்காலும்வீங்கிக் கதறுறுன்புத்திவந்து
தையனேசிட்டம்வாங்கத் தயவுறபுரிந்திடீரோ.

(வசனம்) சரணஞ்சரணம்வித்தியாகுருவே அந்தநீலகண்டனுக்கு அவன்கொழுப்புகளேததாப்போல் பொல்லாதசிட்டக்கல்லைக் கொண்டு வந்து காலுக்குங்கைக்குமாட்டி வெய்யலிலுருட்டிவி லே மிகவும்விடாய்ப்பட்டுப்போனான் வீக்கமுங்கண்டு கதறிக்கதறியழுகிறான் புத்திவந்திருக்கும் செவ்வையுடனடப்பான் அந்தச்சிட்டத்தைவாங்கச் செலவு தாருஞ் சுவாமி.

உபாத்தியாயர்-சட்டாம்பிள்ளைக்குச்சொல்-விருத்தம்.

சிட்டத்தைவாங்குமென்று திருடனுக்குபாரல்வந்த
மட்டிம்நீயினியென்றாலு மவனுக்குவருவதெல்லாம்
சட்டமாயுனைப்பிடிக்குந் தயிரியமிருந்தகாறும்
பொட்டெனச்சிட்டம்வாங்கிப் புத்திகளுரைத்திடாயே.

(வசனம்) வாரும்பிள்ளாய் சட்டாம்பிள்ளை ஆதிமூலம் ஏதடாநீயே அவனுக்குஉபாரல்வருவது அடா அவன்திருடனுக்கே அவனுக்குநீ உபாரல்வந்து பேசுகிறபடியினாலே இனி அவன் என்னசெய்தபோதிலும் அந்தக்குற்றம் உன்னைவந்துசாரும் அதற்குத்தயிரியமிருந்தால் சிட்டக் கல்லைவாங்கிப் புத்திசொல்லி உட்காரவையுமப்பர்.

சட்டாம்பிள்ளை-நீலகண்டனுக்குச்சொல்-பாணி.

ஏதடாசிட்டம் வாங்கிவிட்டேன்
இனியாகிலும்நீ நீலகண்டா
பார்த்தோர்நகைக்கப் பேரெடுக்காமற்
படித்துக்கொண்டே யிருப்பாயே.

நீலகண்டன்சொல்-வசனம்.

அப்படியேபடித்துக்கொண்டு வருகிறேன்சட்டாம்பிள்ளை.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் இப்படிக்குவாத்தியாரும் சட்டாம்பிள்ளையும் பிள்ளைகளுமாகயிருக்கும்போது மிருகண்டமகாமுனியினுடைய சிஷர்களவ்விடத்திற்கு வருகிறவிதங்காண்க.

சிஷர்-உபாத்தியாயருக்குச்சொல்-கலி.

கல்விசிறுவர் தமக்குரைக்குங்
காவியநெறிதேர் துவோரே

செல்வமிருகண்டையருமமை
சொருணத்திலழைத்தார்வருவீரோ.

உபாத்தியாயர்-சட்டாம்பிள்ளைக்குச்சொல்-கவி.

அட்டாளுதி மூலமேகே
னருமாமுனிவர் கமையழைத்தார்
கொட்டா பிரம்மைப்பீயிக்தக்
குமாரனைப்பார்த்திருப்பாயே.

சட்டாம்பிள்ளை-உபாத்தியாயருக்குச்சொல்-கவி.

குமாரனொக்குங்கலையாமற்குருவேவவைத்துக்கொண்டிருப்பேன்
சமானமானமிருகண்டா தன்பாற்சென்றுவருவீரோ.

உபாத்தியாயர்-மிருகண்டருக்குச்சொல்-கவி.

சுபமாமிருகண்டையரோகேள் தானேனே தானமைவேண்டி
சுபமாயழைத்தகாரியத்தைச சொல்வீரயச்சொல்வீரோ.

மிருகண்டர்-உபாத்தியாயருக்குச்சொல்-பாணி.

வந்தவோனவரோகேளிர் மகிழ்லாயெனதுபாலனுக்குச்
செந்தமிழையெல்லாமுனாக்கச்சீக்கிரமழைத்துப்போவீரோ.

உபாத்தியாயர்-மார்க்கண்டனுக்குச்சொல்-பாணி.

மதியும்விதியுந் தானுள்ள
மைந்தாமணியே மார்க்கண்டா
விதியால்விளங்கச் செய்திடுவேன்
மெய்யேயென்பின் வருவாயே,

உபாத்தியாயர்சொல்-அகவல்,

கணபதியென்றிடக் காலனுங்கைதொழும்
கணபதியென்றிடக் கலங்கும்வல்வினை
கணபதியென்றிடக் கருமமாதலாற்
கணபதியல்லதோர் கருமமில்லையே,

விநாயகனென்றிட வினைகள்தீர்ந்திடும்
விநாயகனென்றிட வெறுமைமாற்றிடும்
விநாயகனென்றிட வேள்விகுணந்தரும்
விநாயகனல்லதோர் வேறுமில்லையே,

வசனம்.

நமோஸ்து நமோஸ்து கட்டைபோடுத்திவா கடுகென கடுகென பாடம்வா கூடாயெழுத்தாணியும் குறும்பனீர்ஓலையும்வாராயெழுத்தெல்லாம் எனக்கேவா கட்டைமணத்திலே புதிதிழுத்தது தற்பகப்பிள்ளையாருக்கு மூன்றுகுட்டும் மூன்று தோப்புணமும் போட்டுச் சேவித்துக்கொள்ளுதம்பிள்ளாய்,

உபாத்தியாயர்சொல்-தரு-ஜம்பை,

ஆதிமுதல் சுபமோஸ்து அலங்காரகுருவே துணை
ஆனைமாமுகவன் றுணை அருள்வாணி துணையே.
ஹரிஓமோஸ்துடன் சிந்தம்-அ-ஆ
அறிவிதுவும்-இ-ஈ-யீது
உறுதியுள்ள-எ-ஏ-ஐ-யீது
ஒ-ஓ-ஒவ்வாத-ஔ
ஒன்றுக்குமாகாத-கூ-யீது
க-ங-ச-ஞ-கரேமுள்ள-ட-ண-யீது
த-ந-ப-ம-தருணமுள்ள-ய-ர-யீது
ல-வ-ழ-ள-லவிதமுள்ள-ற-ன-யீது
பக்குவமதாகயிந்தப் பதினெட்டெழுத்தையும்
பார்த்தபேரெப்போதும் பாவித்துவாழ்வார்.

உபாத்தியாயர்சொல்-முச்சீரடி-இபதை,

ஊமையெழுத்திது உடலெழுத்திது வுலகில்வழங்குமிது
நேமையெழுத்திது நெட்டையெழுத்திது நினைவறிவானதிது
உயிரெழுத்திது புதுமையெழுத்திது புண்ணியமானதிது
காமியெழுத்திது கதிரவெழுத்திது காணவேணுமிதுவே.

உபாத்தியாயர்சொல்-சந்தவிருத்தம்.

உலகமாக்கலுங்காக்கலுமாகிய
உண்மையானதோ ரக்ஷரந்தானிது
கலகமுற்றிலுமைவைத்தலுமாகிய
காரணப்பொருளட்சரந்தானிது
நிலைமைமாதவர்நெஞ்சிலுதித்திடு
நின்றதோரித்தவக்ஷரந்தானிது
வலுமையாகும்விவேகமுமாகிய
வள்ளலைக்காணுமக்ஷரந்தானிது.

மார்க்கண்டன்-உபாத்தியர்யருக்குச்சொல்-கவி,

உத்தமகுருவே வித்தையையறிந்தேன்
கர்த்தனையறியப் புத்திதந்திடுவீர்

உபாத்தியாயர்-மார்க்கண்டனுக்குச்சொல்-கவி.

கல்வியையறிந்த செல்வனேயினிமேல்
வள்ளலையறிய இல்லறம்வாராய,

மார்க்கண்டன்-உபாத்தியாயருக்குச்சொல்-கவி,

உமதருளதனால் நமனைநான்வெல்ல
நிமையினில்வருவேனுமதடிசரணம்,

உபாத்தியாயர்-மிருகண்டருக்குச்சொல்-கவி,

மிருகண்டமுனியே கோகண்டான்பாலன்
அறிவுண்டாயிருப்பான் திறமுண்டாண்மையா

மிருகண்டர்-உபாத்தியாயருக்குச்சொல்-கவி.

அறிவினையுரைத்த மறையவாவுனக்குத்
திரவியமளித்தேன் பிரியமாய்நடப்பீர்

ஞானச்சதிரான்-மிருகண்டருக்குச்சொல்-கொச்சகம்,

வேதமுமெய்ஞ்ஞானமுநீர் வேண்டிமைந்தனுக்குரைத்தீர்
மாதவத்திற்சிவனளித்த வயதுபதினாறுச்சே
எதுபதேசஞ்செய்து மிங்கிருப்பதில்லையேயிவன்
ஆதலினாற்கேட்டேனிதை யறிந்தெனக்குச்சொல்வீரே.

வசனம்,

கேளும் பிராணநாதா இவ்வளவுசீக்கிரமாய் நமது குமாரனுக்குக் கல்விகற்றுக்கொடுத்துமென்ன அப்போது இந்தப்பாலகனுக்குப் பரமசிவனளித்த வயது பதினாறுதானே அந்தப்பதினாறுவயதிற்குப் பின்பு இந்தப்பிள்ளை இவ்விடத்திலிருக்கப்போகுதா இந்தக்காரணத்தை அறிந்துசொல்லும் பிராணநாதா,

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-கொச்சகம்.

ஆமிதுவுமெய்தானே அறிவுடையதேவியரே
பூமிதனிலுயிர்வதைசெய் பொல்லாதகாலனிட
சேமகத்திற்கென்னென்றந் நேரமேயிருவருமாய்ச்
சாமியைக்கேட்காறுவந்த சஞ்சலத்திற்கென்னசெய்வேன்-

வசனம்.

வாராயென் பிராணப்ரியமானபெண்ணே ஞானச்சதிரே இப்போ நீசொல்லவந்த சொல்மெய்யே இந்தப்பாலனுக்குப் பதினாறுவயதுஞ் சென்றபிறகு பிடிக்கவரப்பட்ட எமனுக்கு என்னவிதஞ் சொல்வதென்றுநாமிருவோருஞ்ஈசனைகேழ்க்காதவர்தசஞ்சலத்திற்குநான்தானெ ன்னசெய்வேன்நீதானென்னசெய்வாய் உள்ளபடிக்குநடக்கும்பெண்ணே.

மார்க்கண்டன்-மிருகண்டருக்குச்சொல்-கொச்சகம்,

என்தனைப்பெற்றுளமகிழ்ந்து மிஷ்டமுடன்பார்த்திருந்த
தந்தையேதாயேநீர் சஞ்சலமுற்றேதியங்கி
வந்ததென்னவென்றேடவ் வகையுரைத்தீராகிலுங்கள்
சந்தேகந்தீர்த்திடுவேன் சட்டமுடன்சொல்வீரே.

வசனம்.

கேளும் என்னைப்பெற்றுவளர்த்த தந்தையேதாயே குருவினிடத்தில் கல்விகற்பித்துக்கொடுத்து இப்போது என்னைப்பார்த்துநீங்களிருவரு

ம்சஞ்சலப்படுவதென்ன அந்தச் சஞ்சலமான சங்கையை யென்னுடனேசொல்லுங்கள் சஞ்சலத்தை நிவர்த்திசெய்கிறேன் தந்தையே.

மிருகண்டரும்-ஞானச்சதிராளும்-புலம்பல்.

கண்ணிகள்-இ-ம்-பைரவி- ஆதிதாளம்.

என்னென்றுசொல்லுவோமுந்த னெழுத்தின்விதிவசத்தை
யேதென்றுசொல்வோமடாமகனேமகனே ஐயோ
இந்நாள்வரையிற்புத்திர னில்லாததோஷித்தாலே
யிருள்வனந்தேடியடா மகனே மகனே
தபத்தைச்செய்துஞ்சிவன் றனைக்கண்டுமிப்போது
சங்கையாச்சுதேயடாமகனே மகனே
தபத்தைச்செய்தபேர்க் கொருபாலன்கிடைத்ததாலும்
தன்பாக்கியமில்லையோடாமகனே மகனே
ஈசர்வந்துவயது யீரெட்டெனக்களித்தார்
இனிவேறில்லையோடாமகனே மகனே
ஆசையாய்ச்சிவன்வய தளிக்கும்போதேகேட்டு
அறியாமற்போனேமடாமகனே மகனே
வயதுசரியானாலே மன்னன்நமனுமுன்னை
மடக்கிப்போவானேயடா மகனே மகனே

மார்க்கண்டன்- மிருகண்டருக்குச்சொல்-கொச்சகம்.

முனிவர்குலத்திற்பிறந்து முத்திபெற்றவையாவே
புனிதனென்னையெனைநினைந்துப் புலம்பிநிற்குமென்றாயே
தனியதவத்திற்குடையோர் சஞ்சலத்தையெண்ணுவரோ
மனதைத்தேற்றியுமிருக்க வகையதனைத்தேடுவீரே.

(வசனம்) மேலும், எனதுதந்தையேதாயே தபசிகளாயிருக்கப்பட்டபேர் இப்படிக்குச் சஞ்சலப்படுவது நீதியல்ல நான்எப்படிக்காகிலும் நீங்கள்வேண்டியதவத்தைச்செய்து வேண்டியபிள்ளைகளைப் பெறலாம்தந்தையே தாயே.

மிருகண்டரும்-ஞானச்சதிராளும்.

மார்க்கண்டனுக்குச்சொல்- விருத்தம்.

எப்படிமகனேயீச னிந்ததோர்வயதுதன்னை
எப்படியினியழித்து யெழுதவும்நம்மாலாமோ
எப்படியுனைவளர்த்து யேமன்றன்கைக்கொப்பித்து
எப்படிவாழ்ந்திருப்போ மெங்களாருயிரேகண்ணே.

வசனம்,

கேளாயப்பா எங்களுயிருக்குயிராய் வந்துபிறந்த மார்க்கண்ட

டா எப்படி எங்கள் மனதைத்தேற்றி யிருக்கச்சொன்னாய் உனக்கு ஈசனளித்த பதினாறு வயதையழித்து எழுதங்களாலேயாகுதா அல்லது மற்ற ஒருவராலேயாகுதா இல்லையே இனியெப்படி உன்னை வளர்த்து எமன்கையில் ஒப்பித்து மனந்துணிந்து இப்பூமியிலிருப்போமடா மார்க்கண்டா.

மார்க்கண்டன்-மிருகண்டருக்கும்- ஞானச்சதிராளுக்குஞ்
சொல்-விருத்தம்.

இனியென்ன செய்வோமம்மா யென்னிடவையாகேளீர்
இனிகயிலாசவாசரிதங்கியுத்தரஞ்சொல்வாரோ
இனிமேல்நான்சிவனைக்கண்டு யிடர்நீக்கிக்கொள்ளவேண்டும்
இனிமனந்துணிந்துவாழ்ந்து யிருந்தென்னைரட்சிப்பீரே

வசனம்.

கேளுந் தந்தையே தாயேஇனிமேல் என்னசெய்வது அந்தக் கயிலாசவாசகர் இனிஉங்களுக்கு உத்தரஞ்சொல்லப்போகிறாரா ஆகையால் நான் அந்தயீசனைக்கண்டு இடர்நீக்கிக்கொள்ள வேண்டும் உங்களாலே ஆவதென்ன இனிமனந்துணிந்து இருவரும் என்னைரட்சியும் தந்தையே தாயே.

ஞானச்சதிராள்புலம்பல்-இ-ம்-ஆனந்தபைரவி- ஆதிதாளம்.

பல்லவி.

மகனே ஐயோ மகனே எந்தன்
மகனேநானென்ன செய்வேன்

அநுபல்லவி.

மகனேயுனைவளர்த்து மறலிகையிலொப்பிக்க
வகைமோசமாகலாச்சே ஜெகமேபழிக்கலாச்சே (மகனே)

சரணங்கள்.

ஈசர்தந்தவயதி னாலே-மெத்த
யென்றுந்தெல்லாமென்னுதாசதனாலே
பாவமாய்தபஞ்செய்து பெற்றதினாலே-உனக்கு
பதினாறுஞ்சென்றிட இதனாலே
மோசம்வருமோசிவன் மொழிந்தவயதினாலே
ரோஷதூதர் துடிப்பார்கூசாமலேபிடிப்பார் (மகனே)
அருமைமகனைக்காலன் அடிப்பானே-உந்தன்
அழகும்அந்தரும்பார்த்துவிடுப்பானோ
சிறுமைப்படவேதூசந் தொடுப்பானே-உன்னை
சிறுகண்மூங்கிற்றடியா லடிப்பானோ
கருமைக்கிடாவிலேறி யெமனுமிழுப்பானோ
பெருமைப்படுகுவானோபுறமாய்விடுகுவானோ (மகனே)

காலன்கையிலொப்பித்து யிருப்பேனோ-எந்தன்
கண்மணியுனைப்பிரிந்து தரிப்பேனோ
பாலமார்க்கண்டாவுன்னை டிருப்பேனோ-யினிநான்
பாதவித்திட அயன் பரிப்பானோ
சூலங்கொண்டேபிடித்து தூக்கியேயிழுப்பானோ
கோலங்கொள்வாரோமைந்தாமேலுங்கிள்வாரோயெந்தன்.

மிருகண்டரும்-ஞானச்சதிராளும்-மார்க்கண்டனுக்குச்சொல்

தாழிசை -இ-ம்-தோளுப்பத்து.

கொஞ்சும்பஞ்சசுகமுடைத்த குஞ்சரமேகோகிலச்சுரமே
குமாருக்குமழகானகண்மணியே குறையேனைவைத்தெழுதினன்
செஞ்சடர்முடிபடைத்தவாக்கினன் செய்ததபத்திறைக்குறைவாச்சு
தோ, சென்மதீவினையோசெய்தபாவமின்னைத் தீரவில்லையோவறிகி
லோம்; வஞ்சகமாகச்சிவனுனையளித்ததுவு மாயமோஅவனுபாய
மோ, மர்ம்மமோயிதுவுங்கர்ம்மதீவினையோ வல்வினைகளோசெல்
வமே அஞ்சிடாதேயெனையாதரிக்கயினி யாரடாவுனதன்புதான்
ஐயையோமகனேதெய்வமேவிதியும் அலையுதேநெஞ்சமலையுதே.

வசனம்:

அப்பாமகனே மார்க்கண்டா கொஞ்சுங்கிளியே கோகிலமே
குமரவேலுக்கு மழகானகண்மணியே உனக்கேனைவய்து குறை
வானதவத்தைச்செய்திருந்தோமோ அல்லது அயனிடவுபாயமோ
எந்தமர்ம்மமோ கர்ம்மதீவினையோ அடாசெல்வமே உனக்குப்பி
ன்பு எங்களுக்கு ஆதரவுசொல்லப்பட்டவர் ஆரிருக்கிறார்கள் எப்ப
டிதிடங்கொள்வது தெய்வமே மகனைப்பார்க்கப்பார்க்க நெஞ்சங்
கலங்குதே தெய்வமே.

மிருகண்டரும்-ஞானச்சதிராளும்-புலம்பல்.

ஆனந்தக்களிப்பு.

மகனேயுனைவளர்த்ததேனோ-அந்த
மறலிகையிலொப்பிக்க வகைதேடலானோம் (மகனே)
சுகமாயிருந்திடக்காணோம்-காலன்
துள்ளிவந்துவுன்னைத் துடிக்கக்கொல்வானே (மகனே)
பண்ணாததடத்தைச்செய்தோமோ-இந்தப்
பாரிலுள்ளவரெல்லாம் பழிக்கவானோமே (மகனே)
கண்மணியுனைவளர்த்துநாமே-அந்தக்
காலர்க்கிரைகொடுக்கக்காத்திருந்தோமே (மகனே)
சிறுபிள்ளையெனிருப்பானோ-விட்டுத்
திரும்புவானோகாலன் திசைக்கிழுப்பானோ (மகனே)

அறிவானகல்விகற்றேனே-வரும்
அந்தகன்பாசங்கொண்டடித்திழுப்பானே (மகனே)
பெற்றும்வளர்த்தும் வீணாச்சே-ஊர்
பெண்களெனைப்பழித்துப் பேசவுமாச்சே(மகனே)
கர்த்தனைத்துதித்தும்வீணாச்சே-என்
கண்ணேயிதுவென்ன காரணமாச்சே (மகனே)

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்- விருத்தம்-இ-ம்-கண்டா.
மகிணனேகேளாயிந்த மகனுக்காயடவிதன்னில்
வெகுகாலந்தபமிருந்தும் வீணாச்சேயினிமேல்நம்மால்
வகைதேடவேணுமென்றால் வளருமோஆயுசிந்த
செகமெலாம்நகைக்கலாச்சே செல்வனுக்கென்னசெய்வேன்

வசனம்:

கேளும் பிராணநாதா இந்தப்பாலகன் வேணுமென்றுவெகு பாடுபட்டு தவஞ்செய்தோம் செய்தும்பலனில்லாமற்போயிற்றுஇ னிஆயிசுவளரப்போகுதா நமக்குத்தெரியாது இதற்கென்னபுத்தி சொல்லும் என்பிராணநாதா:

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல் -விருத்தம்-இ-ம் கண்டா.
மனைவியேகேளாயிந்த மகனைநீநினைத்துக்கொண்டு
உனதாசையாலேமெத்த வருத்தமாய்ப்புலம்புகின்றாய்
இனிமேலும்விசாரமுற்று யிருந்ததாலாவதென்ன ணே,
சனிகோல மீதென்றெண்ணித் தயிர்யமுற்றிருப்பாய்பெண்

வசனம்.

கேளாய்பெண்ணே நமதுகுமாரன்வயது குறைவென்றுநாம் புலம்பினதினாலாவதென்ன அப்படியேபாலனுக்கு வயதுசரியாகி காலன்வந்துபிடிக்கும்போது வரமளித்த ஈஸ்வரர் எங்கேபோனார் நாம்தாமெங்கேபோரோம்உள்ளபடிநடக்குது தடைக்குறைவாராது நீதயிரியமாயிரும்பெண்ணே.

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல் - விருத்தம்-இ-ம். முகாரி.
இருந்திடாயென்றுசொன்ன யிருடிமாமுனிவர்கோவே
தரித்திடுமோவென்றிரோகஞ் சங்கரர்தன்னைநோக்கி
வருத்தியேபெற்றெடுத்த மதியுள்ளபாலன்றன்னை
சிறந்தபின்னிருப்பதாலுஞ் சீவனையொழிக்கலாமே

வசனம்.

கேளும் பிராணநாதா என்னையெப்படி மனந்துணிந்திருக்க ச்சொன்னீர் நாமோவெகுகாலந் தவமிருந்து பெற்றபிள்ளையாச்சு தே இந்தப்பிள்ளைக்குப்பிறகு நாமிருப்பதா சீவனையுமொழி ப்பதே உத்தமம்பிராணநாதா.

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-விருத்தம்- இ-ம்-முகாரி

ஒழித்திடுவேனென்றேதி முறுதிமாமயிலேகேளாய்
அழித்துபின்னெழுதுவாரோ ஆயுசுமகனுக்கிப்போ
பழித்துரையில்லாவார்த்தை-வழங்கினுலகினுள்ளோர்
பழித்திடாரோநீயிந்தப்பட்சத்தைவைக்கவேண்டாம்.

(வசனம்) வாராய்பெண்ணே ஞானச்சதிரே நாம்தானே தவத்தைச்செய்து பாலகனைப்பெற்றம்பாதும் நாம்பெரியோர்களாமகனுக்கு விதிகொடுத்திருக்கிற வயதை அழித்தெழுத ஒருவராலேயாகுதா, உலகினில் அடாதவார்த்தைதனைவழங்கினால் உலகம்பழிக்காதா, இனிமேல் இந்தநயஞ்செய்யமாட்டோமா இப்பேர்க்கொற்றபிள்ளையைப் பெறுவேதம்போமேனுமா, நீ இப்போது சொன்னபுத்தியை நெஞ்சில்வைக்கவேண்டாம் பெண்ணே.

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்-கொச்சகம்.

வைக்கவேண்டாமெனவே மதியுரைக்குமாமுனியே
ஒக்காதவார்த்தைசொன்னால் லொக்குதாயினிநமக்கு
இக்குதாஇந்தச் செல்வனுக்குப்பிற்காலம்
இக்குறைசொல்வார்காணே னெனக்கதனைச்சொல்வீரே.

(வசனம்) கேளும் பிராணவல்லபா இப்படிக்கு ஒவ்வாதவார்த்தைசொன்னால் ஒவ்வுதா இந்தப்பிள்ளைக்குப்பிறகு நமக்காதா விருக்குதா என்னவிதமா யென்னைமனந் துணிந்திருக்கச்சொன்னீர் பிராணநாதா.

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-கொச்சகம்.

சொல்லுவேன்கேளுஞானச் சுந்தரமாதேநம்மால்
வல்லமைபேசவுண்டோ மழுவணிந்தோன்செயலினுலே
இல்லையென்றுலிருவோரு மீசனைத்துதித்ததனால்
எல்லையிலெப்போதுஞ்சுத னிருக்கவருள்செய்வாரோ.

(வசனம்) கேளாய்மதியுள்ளமாதே வல்லமையாய்ப் பேசுவதற்கு நம்மாலேயாகுதா மைந்தனையளித்த சுவாமியின் செயற்படிநடக்குமென்று நாமும் சும்மாயிருக்கலாகாது துதிப்பவும்விசாரத்தைவிட்டு சிவத்தியானத்திலிருந்தால் மகன் எப்போதுமிருக்க அருளிச்செய்குவாரென்று நினைக்கிறேன் பெண்ணே ஞானச்சதிரே,

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்-கொச்சகம்.

செய்குவாரொன்றுரைத்த செயமிருகண்டரேகேளும்
வையகமெலாமதிக்க மைந்தன்மண்மீதிருப்பதற்கு

பொய்கையினிற்குளித்துப் பேர்புகழீசனைநோக்கி
கையைக்குவித்துநின்றால் காக்கவருள்செய்வாரே.

(வ-ம்) கேளும்பிராணநாதாகீர் சொன்னது மெய்யேமேலும்நா மிருவரும் பொய்கையில்நீராடிகைகளைக்குவித்துநின்றால் ஈசன் மகனைக்காப்பாரென்று நானும்நினைத்தேன் பிராணநாதா.

மார்க்கண்டன்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

அன்னையேயென்னைப்பெற்ற வையாவேநீங்களிப்போ
சொன்னசொல்லுறுதியாகத் தோற்றுதுயெத்தனுக்கு
இத்நேரமப்படிக்கே யிருந்திட்டாலேமன்வந்து
என்செய்வான்சிவனிருந்து யெந்தனைக்காத்திடாரோ.

(வசனம்) கேளும் எனதுதந்தையேதாயே இப்போது நீங்களிருவரும்பேசிக்கொண்டது சரியேவிசாரப்படுவதினலொன்றுமாவதில்லை இது எனக்கும் நல்லயோசனையாயிருக்கின்றது அப்படிக்கு நீங்கள் சிவஸ்துதி செய்துக்கொண் டிருந்தால் எமன்வந்து என்னை என்னசெய்யமாட்டுவான் அப்போதைக்குத் திருக்கடையூராரென்னைக்காப்பாரென்று நினைக்கிறேன் என்னையாவே.

பொது-கவி.

மிருகண்டையருந்தேவியுமாய் விளங்குமுனிமார்க்கண்டருமாய்
அறிவுகொண்டுபேசுங்கா லையர்நாரதமுனிவாரார்.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோ தெப்படியென்றால் இப்படியாக மிருகண்டரும் ஞானச்சதிராளும் மார்க்கண்டனுமாகப் பேசிக்கொண் டிருக்குங்காலையில் அவர்களைக்காணும்படியாக நாரதமுனிவர்வருகிறவிதங்காண்க.

நாரதர்வருகிற-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

தடமேபுரிநாரதமாமுனிவந்தார்-பரனருளுளபல
தபமேபுரிநாரதமாமுனிவந்தார்

அநுபல்லவி.

சுபலலிதமுடைய தூயமிருகண்டையர்
தோகையாள்புலம்ப லாகையால்மெள்ள   (தபமே)

சரணங்கள்.

சுந்தரவரிப்புலித் தோலதுதளத   ளென்ன
சோதியுடையதொங்கல் மேலதுபளப   ளென்ன
சந்திரகாந்தியுள்ள சடைகளுமொளமொ   ளென்ன
வெள்ளிப்பாதக் குறடெங்கும்வீதிட்டுத்   துன்னவே (தப)

விண்ணுமண்ணுலகெங்கும்ஆரடா — வென்னவே
சள்ளயத்தொருபாரஞ் சகலரு — மென்னவே (தப்)
மெய்யினிலெங்குமிகவெண்ணீ — றிலங்க
விஸ்தாரமானமுந்நூல் மார்பினிற் — றுலங்க
வையரவரிடமனந்தானது — கலங்க
நாரதர்தேகம் — குலுங்க (தப)

நாரதர்-மிருகண்டர்சீஷர்களுக்குச்சொல்-சந்தவிருத்தம்.

அப்பாமிருகண்டையர் தொண்டர்களே
அப்பாநீங்களாசிரமம்போய்
அப்பாமுனிநாரதர்வந்தாரென்
றப்பாசொல்விரதிவேகமதாய்

சீஷர்-மிருகண்டருக்குச்சொல்-சந்தவிருத்தம்.

ஐயாமிருகண்டையா சரணம்
ஐயாமுனிநாரதரும்வந்தார்
ஐயாதேவர்க்கதிவியென்றார்
ஐயா துய்யா அறிவீரறிவீர்.

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-சந்தவிருத்தம்.

அணமேநம்பாலருமையதாக
அணமேதபநாரதர்வந்தனராம்
அணமேநாம்போயவரைக்கண்டு
அணமேவருவோமழகாய்வாராய்.

மிருகண்டர்-ஞானச்சதிரார்-இருவரும்
நாரதருக்குச்சொல்-சந்தவிருத்தம்.

சரணஞ்சோதி சொரூபாசரணம்
சரணமாதிமுதலேசரணம்
சரணமினிதாய் நந்தீர்சரணம்
சரணம்நாதா வுனையுஞ்சரணம்.

மார்க்கண்டன்-நாரதருக்குச்சொல்-கவி.

மூத்தாசரணம் சுத்தாசரணம்
வித்தாசரணம் பெற்றாய்சரணம்.

நாரதர்-மார்க்கண்டனுக்குச்சொல்-கவி.

அப்பனேயென தாயுசுங்கொண்டு
செப்பமாய்வாழ்வாய் சிரஞ்சீவிசுகிபவா.

நாரதர்-மிருகண்டருக்கும்-ஞானச்சதிராளுக்கும்சொல்-விருத்தம்

தவமிருகண்டரோஞானச் சதிரோதபத்தால்
சவுரியமுடனேவந்த தன்மயனைக்காணவந்தேன்

இவடம்நான்வந்ததற்கு மிருடிகளேநீர்மெத்த
கவலையாயிருப்பதென்ன காரணமுரைசெய்வீரே,

வசனம்.

வாருமிருகண்டரே ஞானசசதிரே நீங்கள்தபத்தைச்செய்து மகா அருமையான பிள்ளையைபெற்றீர் நானந்த பாலகனைப்பார்த்து மிடா கலாமென்று ஆசையாகஇவ்விடம்வந்தேன்நான்வந்தேனென் றிருந்தோ நீங்கள் மகாமனககவலை கொண்டிருக்கிறீர்கள் அப்படிகவலைகொண்டி ருப்பதென்ன அந்தக்கவலையைச் சொல்லுங்கள் அதற்கேற்ற காரண வழி சொல்லுகிறேன்.

மிருகண்டர்-நாரதருக்குச்சொல்-விருத்தம்.

கடிதினிலுரைக்கச்சொன்ன கடமாமுனிவர்கோவே
திடமுள்ளதபத்தைச்செய்து செல்வனைவாங்கினோம்
கடவுள்தன்கிருபையாலே காலைக்குவயதீரெட்டு
திடமிலாதாகையாலே தியங்கிறோமயங்கிறோமே,

வசனம்,

கேளும் நாரதமகாமுனிவரே எங்களுக்கு மற்றொருவிசாரமு மில் லை இந்தப் பாலகனுக்கு ஈசனளித்தவயது பதினாறுஞ் சரியாயிற்று ஆனால் வரப்பட்ட யெமனுக்கு என்னசொல்லுவது பிள்ளையைப் பிற் பாடு எப்படிகாண்பது அதனால் தியங்குகின்றோஞ் சுவாமி,

நாரதர்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்,

அழிந்தாயுசெழுதவில்லை அருந்தபதோரேபிள்ளை.
பிழைத்ததேயுன்பேர்கொண்ட பித்தனைக்காணப்போறான்
எழுத்தொன்றேசிரஞ்சீவி யென்நாளுமிருப்பான்கண்டாய்
பழிதோருக்கிடங்கொடாமற் பாலித்துவாழ்குவீரே,

வசனம்,

கேளாய் முனிவரே இந்தப்பாலகனுக்கு அற்பாயுசிரா தெழுத் தோ சிரஞ்சீவியானயெழுத்தேயிருக்கும் நானுஞ் சிரஞ்சீவிவாழ்த்தல் கொடுத்தேன் இனிமேல் கர்த்தனையுங் காணப்போகிறான் உங்களுக்கு க் கீர்த்தியுங்கொண்டுவருவான் பழிப்போருக் கிடங்கொடாம லிருங்க ள் நமக்குச்செலவுதாருங்கள்,

மிருகண்டர்-நாரதருக்குச்சொல்-விருத்தம்,

உமதுநல்லருளினாலே யுயர்பாலனிருக்கவேணும்
நமனையும்வென்றேயிந்த நகர்தனிலிருக்கவேணும்
அமரர்கள்வணங்கும்நாதா வையனேமுனிவர்கோவே
எமக்கொருபுத்திசொல்லி யெழுந்திடுவாசிரமத்தே.

வசனம்,

சுவாமி நாரதபகவானே உம்முடைய திருவருளினாலே இந்தமார் க்கண்டன் ஆசிரமத்திற்குப் போயிருக்கவேண்டும் நமனையும் வெல்ல வேண்டும் நகரிலுமிருக்கவேண்டும் இன்னம் எங்களுக்குப் புத்தியுரை த்து ஆசிரமத்திற்கு எழுந்தருளுஞ் சுவாமி,

நாரதர்-மிருகண்டருக்குச்சொல்விருத்தம்

புத்தியுமதியுமெத்த புகழையும்பெற்றுவாழும்
உத்தமமிருகண்டாகே ளுயர்வில்மார்ககண்டாகேளாய்
பத்தினிஞானமாதே பாவித்துவாழ்வீர்நீங்கள்
கர்த்தனைத்துதிப்பீரின்னோர் காலத்தில்வருகுவேமே

(வசனம்) வாராய் மிருகண்டனே அப்பாமார்க்கண்டா ஞானமாதேஇன்னம் புத்திகளத்திராதிகளும் நீடூழிகாலம் வாழ்கவாழ்க இனிநீங்க ளிருவரும் கர்த்தனைத்துதிசெய்துக்கொண்டிருங்கள் போய்வருகிறேன்

மிருகண்டர்-ஞானச்சதிராள்-மார்க்கண்டன்-இம்மூவரும்

நாரதருக்குச்சொல்-வசனம்

சரணம் சரணம் அப்படியேதேவரீர் எழுந்தருளலாஞ்சுவாமி

மிருகண்டர்-மார்க்கண்டருக்குச்சொல்-கொச்சகம்

பாலகனேயுன்வயது பதினாறுமாகிலுடன்
சூலம்படைத்தானுந் துரைராசன்மனுமெத்த
கோலஞ்செய்துதர்களைக் கொண்டுவருவானவனாச்
சாலவித்தையாற்செயிக்கச்சமத்துனக்குமுண்டோதான்

(வசனம்) அப்பாமார்க்கண்டசெல்வனே ஆகிலும் உன்னுயுள்சரியாச்சுதானால்உடனே எமதூதரை விடுத்துஉன்னைப்பிடித்துவரச்சொல்வானே அப்போலதற்கு அவர்களைச்செயிக்கவும் எமனைவெல்லவும் உனக்குச்சமர்த்துண்டாசாலவித்தையுண்டாநீசெயம்பெற்றிருப்பாயா சொல்லு மப்பா மார்க்கண்டா.

மார்க்கண்டன்-மிருகண்டருக்குச்சொல்-கொச்சகம்

இதனைப்பெரிதாயெண்ணி யேங்குவரோவையாவே
விதனமதைத்தீர்ப்பேனுன் மேவிவில்வமலரொடுத்து
எதுவிதத்தாலுமந்தமீசனைக்கண்டடிபணிந்து
அதனவிதஞ்செய்யவரு மந்தகனைவெல்வேனே

(வசனம்) கேளுமெனது தந்தையேதாயே இதற்குநீங்களபயப்படுவதுநீங்களாசீர்மத்திற்றுனேயிருந்துசிவத்தியானஞ்செய்யும்நான்போய் ஆலயந்தோறும்சுத்திகந்தவனம்புகுந்துவிசித்ரமானமலர்களெடுத்துஅர்ச்சனைபுரிந்துஈசனைக்கண்டுஎன்னைத்தொடவரப்பட்டஎமனைவெல்லவரம்பெற்றுவருகிறேநீங்கள்சந்தோஷமாய்எனக்குச் செலவுகொடுத்தனுப்புமையாவே

மிருகண்டர்-மார்க்கண்டருக்குச்சொல்-விருத்தம்.

பண்ணினதவத்தில்வந்த பாலன்மார்க்கண்டாயிந்த
அண்ணலைக்காணவுன்னா லாகுமென்றல்லோசொன்னாய

எண்ணினும்பதினாறாக யிருக்கவேவயதுண்டாகக்
கண்ணனைக்கண்டேயந்த காலனைவென்றுவாராய

(வசனம்) கேளாயப்பாமார்க்கண்டா அப்படியேசி ஆலயந்தோறும் [illegible]த்தி எப்படியாகிலும் அண்ணலைக்கண்டு என்றும்பதினாறுகயிருக்க வயது பெற்று, எமனைவென்று பூமியிலிருக்க விண்ணுமண்ணுமதிக்கத்தக்கதாக வரம்பெற்று வருவாயப்பா

மார்க்கண்டன்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்

ஆதிநம்விளங்கயின்ற ஐயனேசரணம்பத்து
மாதமுஞ்சுமந்துபெற்ற மாதாவேசரணமம்மா
காதகமனைவெல்லக் கானகந்தியந்துபூதி
நாதனைக்கண்டுவாரோ வலமுடனிருந்திடீரோ

(வ-ம்) மகா அருமையானதட்த்தைச்செய்து என்னைப்[illegible]ற்றதந்தையே தாயே சரணஞ்சரணம் அந்தக்காதக நமனைவென்று உம்மிடமிருந்து வாழப் பூதநாதனைக்கண்டு வரம்பெற்றுவருகிறேன் நீங்க ளாசீர்மத்திலிருங்கள் தந்தையே தாயே

மார்க்கண்டன்வருகிற-தரு-இ-ம்-இயால்-ஆதிதாளம்,

பல்லவி

திகழ்மாமுனிமார்க்கண்டன் வந்தானிதோ

அநுபல்லவி.

புகழ்சேர்கடையூர் பரனைதுதிசெய்
தகையாய்ப்பணியுங் குகனேபுகழ்சேர் (திகழ்)

சரணங்கள்

மறையேபொருளேதெளிவாகியசீர் பரனையகமேபரிவாய்துதிசெய்
புரிவாய்வயதேமிகவேபெருக வரமேயருளும்பரமனைத்துதிசெய
விசுவாசம்தாய்அன்னைதந்தையுமேசசிபோற்பணியும்மிகசுந்தரமே(திகழ்)

மார்க்கண்டன்சொல்-தேவாரம்

செஞ்சடைமுடியேல்பகிரதிபுனையுந் தேவனேதிரிபுரத்தாசே
பஞ்சைமெல்லடியார் பாகனேகடையூரபரமனேபசுபதியானே
தஞ்சமேநமனுர்வந்திடாமுன்னந் தயங்கியுன்பாதத்தைநம்பி
அஞ்சலென்றடைந்தேனென்றுயர்தீர்த்து அடியனை யாண்டுகொண்[டருளே

(வசனம்) அரகரா மயிலைக்கிரிவாசா அரகரா காலகண்ட திரிநேத்திரமுடையயீசா அரகரா கங்கையைதத்ரித்த நேசா அரகரா கர்த்தனே திரிக்கடையூரீசா நான் தபத்துக்குவருகிறேன்என்தபத்துக்கு ஒரு விக்கினம்வராமல் என்னைக்காத்து இரட்சிக்கவேண்டும்கர்த்தானே அரகரா அரகரா அரகரா அரகரா.



அமுர்தகண்டீசுரரை-மார்க்கண்டேயர்-பூசைசெய்தல்

மார்க்கண்டன் - பூசைசெய்கிற - தரு-

இ-ம்- ஆனந்தபைரவி-ஆதிதாளம்

தேவர்முனிவர்சித்தர்போற்றிடும் ஸ்ரீகாசியில்வாழும்
தேவனேவிஸ்வநாதலிங்கமே ஓம்அரகரா

மூவரும்ஒருருபமானீரோ சாம்பசிவா
முதல்வனேயுனைப்பூசைசெய்கிறேன் ஓம்அரகரா

மாயன்பூசைபுரியும்பாதனே திருக்கடையூர்
ஏழையர்போற்றுந்தியாகராயரே ஓம்அரகரா

இந்திரன்பூசைபுரியும்பாதனே திருக்கடையூர்
தியாகமாய்அருணலிங்கமே ஓம்அரகரா

சரணமென்றுனைப்பூசைசெய்குவேன் சாம்பசிவா
தயவுவைத்தெனையாளவேணும்மே ஓம்அரகரா

துதிக்கவுன்னைவினைகள்தீருமே திருக்கடையூரீசா
　　ஏழையர்போற்றும் அருணலிங்கமே　　　　ஓம்அரகரா
யோகமொருவடிவானயீசனே அருணகிரியில்
　　உண்ணாமுலைபங்காளவாசனே　　　　ஓம்அரகரா
சதைக்கவென்னைக்காலன்வராமலே சாம்பசிவா
　　சங்கராவுனைப்பூசைசெய்குவேன்　　　　ஓம்அரகரா
சரணமென்றுனைப்பூசைசெய்குவேன் சாம்பசிவா
　　ரட்சித்தருளவேணுமையனே　　　　ஓம்அரகரா
பகவனேயுன்னைப்பூசைசெய்குவேன் சாம்பசிவா
　　பரிவுடனென்னையாளவேணுமே　　　　ஓம்அரகரா

மார்க்கண்டன்சொல்-விருத்தம்-இ-ம்-தேவாரம்

கையின்மான்மழுதரித்த காசிவாழ்கனலிங்கேசா
துய்யசெம்பாதம்போற்றி தொழுகிறேன்மனதிரங்கி
வெய்யகாலனைக்கடிந்து விர்த்திக்கமனதுவந்து
மையவேயாட்கொணடெந்தன் பணிவிடையேற்பாய்சுவாமி

(வ-ம்) அரகரா கையில்மான்மழுதரித்த மகேசா அடியேன் தேவரீருடைய சிவந்தபாதத்தைத்தொழுது நின்றேன் அதற்குக் கொடியகாலனைத்துரத்தி விர்த்திக்கமனதுவந்து என்னையாட்கொண்டு இரட்சியுங்கர்த்தனே அரகரா அரகரா,



மார்க்கண்டன்-சிவனைத்தோத்திரஞ்செய்கிற-கண்ணிகள்
இ-ம் டின்ஞ்சுகவ்ராளி--ஆதிதாளம்-

அரகராசிவசிவா அமூர்த்தகண்டேஸ்வரா
　　அன்புடனபலர்தேடி　　　　சூடுவேன்-சுவாமி

திரிபுராதகனவன் திருவடிகாணவே
தேடித்திரிந்துமலர் — குடுவேன்-சுவாமி
சரியுரிபோர்த்திடுங் கர்த்தனேயுமைபாகா
கருத்துடன்மலர்தேடி — குடுவேன்-சுவாமி
வரிவிழியுமையாள்நன் மணவாளாயுந்தன்
மலாடிகாணமலர் — குடுவேன்-சுவாமி
சிறுவனனுப்பிட திருவடிகாணவே
சித்தமொன்றாகிமலர் — குடுவேன்-சுவாமி
தெரியாதபேதமைசெல்வனனுப்பிட
திருவடிக்காணமலர் — குடுவேன்-சுவாமி
இருகாத்திலுமலரேந்தியுன்னிட
இணையடிகாணமலர் — குடுவேன்-சுவாமி
அரியாதபாலகனை ஆட்கொள்ளீசனே
ஆத்திமலரொடுத்து — குடுவேன்-சுவாமி

மார்க்கண்டன்சொல்-கொச்சகம்

இந்தப்பூவனம்போல்நானெந்தவனமுங்காணேன்
அந்திவண்ணனுக்கேற்ற ஆத்திமலரிருக்குதிங்கே
தந்திமுகவனைப்பெற்ற தனிபொருளிருக்குதிங்கே
எந்தனிடபாக்கியமோ யாதொன்றுமறிகிலனே

(வ-ம்) அரகரா அரகரா அரகரா அரகரா இந்தவனமே நந்தவனமே அந்த அந்திவண்ணனே வாசமாயிருக்கப்பட்டவனமோ அவருமிதோயிருக்கிறார் அவருக்குமிக அற்புதமான ஆத்திமலரும் வில்வமலரிருக்குது ஆ, ஆ, சோதிப்பிரகாசம்போல சிவாலயமும் தோற்றப்படுகின்றது இதை விட அப்பால்நடப்பதென்ன இந்தயிடமே நாம்செய்தபாக்கியமான யிடம் இனி இந்த ஆத்தி வில்வம் செண்பகம் கொன்றை பாரிசாதம் அப்பேர்க்கொத்தமலரொடுத்து பூத்தொடுத்து இந்த ஆதிமூலப்பொருளையே அர்ச்சனைபுரிவது உத்தமம்-அரகரா

மார்க்கண்டன்-மலரொடுக்கிற-தரு-இ-ம்-புன்னாகவராளி
அடதாளம்

கொன்னைமலரெல்லாம் — பறித்தேன்-இந்த
கோமனுக்காமெனச் — சூடினேன்
வண்ணமலரெல்லாம் — பறித்தேன்-இந்த
வள்ளலுக்காமெனச் — சூடினேன்

திண்ணமலரெல்லாம் பறித்தேன்-இந்த
நிமலனுக்காமெனச் சூடினேன
எண்ணமலரெல்லாம் பறித்தேன்-இந்த
வீசனுக்காமெனச் சூடினேன்
மல்லிகைமலரெல்லாம் பறித்தேன்-இந்த
மான்மழுவோனுக்குச் சூடினேன்
முல்லைமலரெல்லாம் பறிததேன்-இந்த
மூர்த்திக்கேயாமெனச் சூடினேன்
நல்லமலரெல்லாம் பறித்தேன்-இந்த
நாதனுக்காமெனச் சூடினேன



மார்க்கண்டன்சொல்-கொச்சகம்

கொண்ணமலரெடுத்துந்தன் கொண்டையினிற்சூடிநின்றே
வண்ணமலரெடுத்துவுந்தன் மலரடியிற்சூடிநின்றேன்
புண்ணையனேயுன்பாதம் போற்றிமலர்சூடிநின்றேன்
அண்ணலேயென்றடிபணிந்து ஆத்திமலர்சூடிநின்றேன்

(வசனம்) அரகராதிருக்கடையூரீசா கள்ளங்கவடறியேன் அறியாத புத்தியானே எனகண்ணுக்குத்தோற்றின மலரெடுத்துசாற்றிநின்றேன் அறியாதபாலகனை உமது பாதாரவிந்தமசேர்த்துக்கொள்ளுங்கர்த்தனே,

மார்க்கண்டன்சொல்-தரு-இ-ம்-ஜம்பை

கடையூரிலமர்ந்திருக்குங் கர்த்தனேயெனக்காக
படிமீதிலென்னுயிரை பாலிக்கவேணும்
அன்றுமிருகண்டருக்கு அருளதலையளித்ததுபோல்
இன்றெனக்குவரமளித்து யிட்டறவேணும்

.52

ஏழையடியார்களிடர் இடர்நீக்குஞ்சோதியே
தாழ்வில்லாதிடர்நீக்கித் தற்காக்கவேணு
சங்கராவுனைத்தொழுதேன் சண்டன்வந்தணுகாமல்
பொங்கமாயெனைக்காத்துப் புகழதருகவேணும்

மார்க்கண்டன்சொல்-கொச்சகம்

வாசமலரெடுத்துந்தன் மலர்ப்பாதக்கரணமிப்போ
பாசமுடன்சூடுகிறேன் பார்வதிசமேதகனே
கூசாமலேயென்னைக் கொடுபோகவாராமுன்னம்
ஈசாயெனைக்காரு மெழிக்கைலாயகரே

(வசனம்) அரகராமயேசா அமுர்கண்டீசா திரிபுரந்தகறு அடியேன் உமதுபாதலே கதியென்று நம்பினேன் என்மீதில்எமன்வந்து அணுகாமுன்னம் உமதுபாதாரவிந்தஞ் சேர்த்துக்கொள்ளுங்கர்த்தனே

பொது-விருத்தம்

இப்படிமார்க்கண்டன்று னிச்சைப்பூசைசெய்து
ஒப்புடனிருக்கும்போது வுயிர்வதைசெய்யுமேமன்
சொற்படிக்கேட்டிக்குஞ் சுந்தரக்கட்டியக்காரன்
மெப்படியெச்சரித்து மின்னல்போல்வருகின்றனே

கட்டியக்காரன்வருகிற-ஓரடி தரு-இ-ப்-சக்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி

வாசற்கட்டியக்காரனுனே-கொலு
வாசற்கட்டியக்காரனுனே

அநுபல்லவி

தேசத்திலெனக்கிணையானசேவகருண்டோ
திக்குமுக்கிட்டோட்டவேயடிப்பேனென்சொல்லிரண்டும்
ராஜராசர்கள்மெச்ச ரவுத்ராகாரங்கள்கூற
நாளும்மிகவனுமையுஜங்கஉடட்டி
கீளுஞ்சமரஞ்சிதசிங்கக்குட்டி (வாசற்)

சரணங்கள்

அடிக்கும்பெருங்காற்றுக்கு மஞ்சேன்-ஆனால்
அருங்கவிபுலவர்பால் மிஞ்சேன்
இடிக்கும்பெருமழைக்குந் அஞ்சேன்-சற்றும்
இணக்கமில்லாரைக்கண்டால் கெஞ்சேன்
துடிக்கும்மரணமுகத்தி லீவிதக்கங்கள்செய்யேன்
சொந்ததாய்தந்தைமேலும் தயவுதாட்சணியம்வையேன்
துரைகள்மகிழவெகுபணி யலங்கரிப்பேன்
துஷ்டரைமடிப்பேன் எடுப்பேன்

கட்டியம்படிப்பேன் தொடுப்பேன்
ஐதிமேவிபணியாத கனிலோபர்தமைவாரி
அடித்தடித்தனா கொடிக்குருக்ராம
மிகுத்தடிக்கடி படைக்குளொப்பென(வாசற்)

காலதூதர்வருகிற-பொதுவிருத்தம்

கோலங்கொள்தென்றிசைக்கோர் குமைவின்றிநடத்துகின்ற
நீலங்கொள்மேனிபான நெடுமுடியெமனூர்தன்
வேலையிலட்டியின்றி வெகுதுரிதமதாயச்செய்யும்
காலதூதர்கள்சபைக்குக் கடிதினில்வருகின்றாரே

கட்டியக்காரன்சொல்-வசனம்

அகோதெப்படியென்றால் எமதர்மராசன் கொலுவுக்குக் காலதூதர்கள் வருகிறவிதங்காண்க

தூதர்வருகிற-தரு-இ-ம்-கலிபாணி-ஆதிதாளம்

பல்லவி

வாததூதர்நாங்களே-எம-காலதூதர்நாங்களே

அநுபல்லவி.

நீதியுள்ளயெமதர்மராசனும்
சித்தர்துதித்திடும் பத்தர்களாகிய (வாத)

சரணங்கள்

அண்டரண்டநவகண்டமெல்லாங்கையிலடக்கித் தூக்குவோம்
அச்சமில்லாமல்நடக்குமடையனை அலறத்தாக்குவோம்
எண்டிசைபுகழுஞ்சூலத்தினுற்குத்தி
இஷ்டப்படிசெய்ய கெட்டிக்காரர்நாங்கள் (வாத)

காலத்துக்கொவ்வாதபாவிகளைக்கண்டால் கடித்துக்கொல்லுவோம்
காதகசெஞ்சம்படைத்தவனைக்கண்டால்கடுகவெல்லுவோம்
மூலமறியாதமூடர்களை
மூட்டிக்காலதூதரால்கட்டிவரச்சொல்வோம் (வாத)

துஷ்டனைக்கண்டாலிடங்கொடுக்காமலேசூலத்தினுலிடிப்போம்
துள்ளத்துள்ளக்குத்திபாசக்கயிற்றினுல்தூக்கியேயிடிப்போம்
கட்டுக்கடங்காதகாலதூதர்நாங்கள்
காவினிப்புகழ்மேமன வாசற்படிகாக்கும் (வாத)

கட்டியக்காரன்சொல்-விருத்தம்,

ஒளிவுள்ளசெனங்களேகே ளூரத்தசொற்காட்டவேண்டாம்
மொளமொளவென்றுசொல்லி மூற்றிலும்பேசவேண்டாம்

53

சனசனவெனவுமிங்கே சக்கட்டம்படிக்கவேண்டாம்
தனமுள்ளதருமர்வாரார் சந்தடிபண்ணவேண்டாம்

இதுவுங்கூறல்-விருத்தம்

அதிபதிவாரார்வாரார் அங்கங்குநிற்கவேண்டாம்
எதிர்மதியுரைத்தால்வெட்டி யிருதுண்டமாகச்செய்வார்
இதுகெதிசொன்னேன்சொன்னேனிழுக்கடித் துதைப்பார்தூதர்
பதியதுதேடிக்கொண்டு பதலமாயிருந்திடீரே

இதுவுங்கூறல்-விருத்தம்

கூத்தினைப்பழித்தபேரை கொடுவங்குகழுவில்மாட்டிச்
சாத்துவோம்பாறையாலே தடையில்லைபயந்துநின்று
பார்த்துசந்தோஷங்கொண்டு பதியினுக்கேசெல்லுங்கள்
காற்றசைமன்னரோடும் சமனிதோவருகின்றாரே

இதுவுங்கூறல்-விருத்தம்,

சமனிதோவாரார்வாரார் நகைத்திடாதேயிருங்கள்
சமையமீதென்றுதூதர் தள்ளுவார்நரகந்தன்னில்
அமையுமோவுங்களுக்கு அவிநிகள்வருமேதேனோ
செமையதாயிருந்துபாரும் தென்றிசைக்கதிபர்வாரார்

கட்டியக்காரன்-வசனம்

அகோதெப்படியென்றால் ராசாதிராஜனான எமதர்மராஜன்சிங்காரக்கொலுவிற்கு வருகிறவிதங்காண்க

எமதர்மராஜன்-கொலுவுக்குவருகிற

பதம்-இ-ம-மத்தியமாவதி-திரிபுடைதாளம்

பல்லவி

ராஜபோஜவிசுவாசன் வந்தானே
எமதர்மராஜன் வந்தானே

அநுபல்லவி.

நேசமாகிய ராசராசரும்
செருக்கிவருகவே காங்கள்கூப்பியே
ரோஷதூதர்கள் அடிஅடிக்கவே
விநோதமுடன்கொலு வீற்றிருக்கவே(ராஜ)

சரணங்கள்

சிரசில்நவரத்ந மகுடமின்னவே
திபம்போற்புஜ கீர்த்திமின்னவே
தரியலர்கள்கெடு கிடென்னவே
தாணியமைச்சர்கள் சமர்த்தசொன்னவே(ராஜ)
மகுடமுடியோடு மகுடமடிபட
வலதுபுஜத்தொடு புஜங்களிடிபட
டிசை

விருதுகொடிகளு மோங்கியபடிபட்ட
மேன்மையாகக்கொலு வீற்றிருந்திட (ராச)
வேதவேதியர் வேதம்புரிகவே
வீரர்கட்டியக் கூறிவருகவே
நீதியாய்தாமம் மேலும்பெருகவே
நெடியகொலுவினி விருந்துபார்க்கவே (ராஜ)

கட்டியர்கள்-கட்டியங்கூறல்

ராஜாதிராஜனே ராசமார்த்தாண்டனே
நவேனதென்றிசையில்வாழ்
ராஜகெம்பீரனே பாசமுங்கைக்கொண்டு
ராச்சியத்துரையெல்லாம்
கூராமலேபிடித்தவரவரவர்கள்செயபால
குற்றத்தைநிறைப்படிக்குக்
குறைவரச்செங்கோல்நிறைப்படிசெலுத்தியே
கோஷ்டமெல்லாமடக்கும்
காசாம்புவர்ணனே கையினிற்சூலனே
கண்டனைக்கொலுவீரனே
கருங்கடமீதேறுமறலியேயவரவர்கள்
கர்மத்துக்கதிகாரனே
கேசாதிகுட்டியேயச்சதப்பட்டணக்
கீர்த்தியுடனேயாண்டிடும்
கெடிபெற்றபாசனே முடியுற்றகண்ணனே
கெம்பிரமார்த்தாண்டனே

எமதர்மராஜன்-கொலுவிருந்துகடவுளைத்துதித்தல்

விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி,

தருமமேதருமமிந்தத் தாரணிதழைக்கவேணும்
தருமமும்மாரிபெய்து சதாகாலம்வாழ்கவேணும்
தருமமாமெனதுசெங்கோல் தாழ்வில்லாதிருக்கவேணும்
தருமமேபெருகவேணுஞ் சங்கராபோற்றிபோற்றி

எமதர்மராசன்-லோகவிசாரணை

பிரணிபுவிமாபுரக்கொலுவதனிலெல்லோருஞ்சேர்ந்திருக்கின்றார்களா

தூதர்சொல்லல்

திரமுள்ளசண்டப்ரசண்டனேயெல்லோருந் திகழ்சபைதனில்நிறைந்தார்

இராஜன்கேட்கல்

ஒருகுபாமாதாகாமுகத்துரோகருக்கெமதண்டனைநடக்குதா

தூதர்சொல்லல்

அப்போதுமெப்படியப்படியேதண்டனையியலாகநடக்குதையா

இராஜன்கேட்கல்

புவனிதனிலுள்ளோர்கள்புண்யமதையெப்போதும்அகமகிழ செய்தார்க[ளா]

தூதர்சொல்லல்

ஆமதற்கொருகுறைவுமில்லாமற்சிலதுபேர் அப்படியேசெய்கிறார்கள்

இராஜன்கேட்கல்

பவமதுபுரிந்தபேர்பாழுநரகக்குழியில் பாதவித்திருக்கிறார்களா

தூதர்சொல்லல்

பணிந்துசொல்வேன்கேளுமறலியேயந்தவிநம்பதிகுலைந்தலைகிறார்கள்

இராஜன்சொல்லல்

பஞ்சமாபாதகர்களக்கினிஸ்தம்பத்தைப்பற்றித்தழுவுகின்றார்களா

தூதர்சொல்லல்

பாவமும் [illegible]ண்ணியமுமறிந்துபின்ஸ்தபத்தைப்பற்றியவர்தழுவுகிறார்கள்

இராஜன்கேட்கல்

வஞ்சகஞ்செய்தவனைக்கின்கிலியர்கரும்பாம்பின்வாய்க்கிரைகொடுக்கிறா[ர]

தூதர்சொல்லல்

வரிசைபெறுமந்தகாகின்கிலியர்கரும்பாம்பின்வாய்க்கிரைகொடுக்கிறார்கள்

இராஜன்கேட்கல்

சூதுசெய்பாதகனைமந்திரித்தூதர்கள் சூ[illegible]க்கொண்டிடிக்கிறா[ரா]

தூதர்சொல்லல்

சொல்லொணுப்புகழ்பெற்றகாலனே அந்தடிகருண்டுவிழஅடிக்கிறார்கள்

இராஜன்கேட்கல்

நீதிதவிர்கொலையாளர்தங்களைச்செக்கிலிட்டிறுத்தியேவதைக்கிறாரா

தூதர்சொல்லல்

நிலைவழுவாதயெமதர்மனேயவர்களைநெடுநாளாய்ச்சிதைக்கிறார்கள்

இராஜன்கேட்கல்

இல்லறம்சமதாக்கினையிலகப்பட்டபாவிகளிருக்கிறாரோயில்லையோ

தூதர்சொல்லல்

இ[illegible]பதான்கொ[illegible]பெற்றபொல்லாததோஷிகள்தோயிருவர்கிறார்கள்

இராசன்கேட்கல்

[illegible]யங்களைச்செய்தபேரிருவர்களுமெனக்கறியவுரைத்திடுகுவீர்

தூதர்சொல்லல்

இறைவனேயிவன்குருத்துரோகியிவன்றயானை யிகழ்ச்சிபேசினவனையா

இராஜன்-தூதருக்குச்சொல்-விருத்தம்

குருவுக்குத்துரோகஞ்செய்த கொடியபாதகனைவாட்டி
நாகத்திற்றள்ளுயிக்க ஈனையென்முன்வையாதே

வீரியமாய்ப்பிள்ளைவேண்டி பெற்றுனைவைத்தோன்றன்னை
மூரியனையக்கினிதனனில் மோதுவீர்மோதுவீரே

(வசனம்) ஆடா அடாயெமகாதகிங்கிலியரே அடாகாம் இதுவனைக்
கும் எமதெண்டனைபண்ணிவந்தோம் இக்காள்வனைக்கும் குருத்துரோகி
வந்தானென்கிற சொல்லில்லை ஆகையால் குருவுக்குத் துரோகம்பண்ணி
குருவைப்பழித்த படுபாவியைக்கொண்டுபோயபொல்லாத வைதவனத்
நரகத்தில் தள்ளிப்போடுங்கள் ஆகா-ஆகா-ஆகா-மகாபிரியமாயப்பெத்
து வளர்த்ததாயைவைத்திந்தத்தோஷியைக்கொண்டுபோய் அக்கினிஸ்தம்
பத்திலே மோதிவாருங்கள் அந்தமூநியனை என்முன்னில்வைக்க வேண்
டாம்கொண்டுபோங்கள் காலதூதர்களே

கிங்கிலியர்சொல்-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்

குருவைப்பழித்த கொடியபாதகனறன்றனைக்
குதித்தள்ளடாதள்ளு-கிங்கிலியா இப்போ
தத்திபெத்தெத்தென்கிறானை-கிங்கிலியா
ராசனுக்காரப்படி நரகத்தினில்தள்ளடா
வெந்தானகூனுகிங்கிலியா
கொடியபாதகஞ்செயது குறறத்திலகப்பட்ட
கூகையைச்சூலங்கொண்டிடியடா இந்தச்
சோகையைத்தடியால[illegible]யடிடா கல்ல
தாகட்டுங்கருந்தேளை யேவிட்டுக்கடித்தபின்
ஆகாநரகத்தில் தள்ளடா
பெற்றதாய்தந்தையைப்பிரங்கழியாப்பேசும்
பேயனை அக்கினிஸ்தம்பத்தில ராசன்
வாயலுரைத்திட்டவோமத்தில்
உபயமாகப்பாம்பின் வாயிற்கடிக்கவிட்டு
நீயும்அக்கினிதன்னில் மோதடா
வாயழியாயப்பேசும மாபாவங்கண்டோனை
வதைக்குஞ்சூலங்கொண டிடியடா இவனைக்
சதைக்கும்வளைதடியா லடியடா இவனும்
உதையுங்குத்துமாக உதைமேலுதையுதைத்து
பருத்தஅக்கினிதன்னின் மோதடா
கொலுவினிலிருக்குமன்னா குருவுக்குத்துரோகஞ்செய்த
கலபிகுதோஷிதனை நரகத்திற்றளிவிட்டோம்

கிங்கிலியா-இராசனுக்குச்சொல்-விருத்தம்,

நிலையுள்ளதாகயனைவத நிஷ்டூரப்பாவிதன்னை
கொலைபுரியக்கினிதனனிற்கொண்டுபோய்மோதிவந்தோம்

(வ-ம்) சரணஞ்சரணம்ராசபரமேஸ்வரா குருவுக்குத்துரோகஞ்செய்த

குருவைப்பழித்த படுபாவியைக்கொண்டுபோய் பொல்லாத வதைவதை
த்து நரகத்தில் தள்ளிவிட்டோம் தாமென்று கெருவங்கொண்டு காவை
வைத தோஷியைக்கொண்டுபோய் பொல்லாதசித்திரவதைசெய்து அக்கி
னிஸ்தம்பத்திலே மோதிவந்தோம்மகாராசனே

இராசன்-தூதருக்குச்சொல்-விருத்தம்

ஆரடா தூதரேகேடடங்காதபாவியான
போடாபாசத்தாலே பிடித்திங்கேகொண்டுவந்தீரா
கூடாரயெந்தன்முன்னே கொடுவந்துவிட்டாயிப்போ
பாரடாவெனது செங்கோற்படி முறைசெலுத்துவேனே

(வ-ம்) ஆரடா அடா காலதூதர்களே இன்னம் எந்தெந்தப் பாவிகளைக்
கொண்டுவந்துவைத்திருக்கிறீர்களோ அவர்களையென்முனபாகக்கொண்
டுவந்துவிடுங்கள் எனது செங்கோற்படிசெலுத்துகிறேன் காலதூதர்களே,

இங்கிலியர்-இராசனுக்குச்சொல்-விருத்தம்

இடமுள்ளசமனேயிந்தத்திருடனைப்பாரிவனுமுன்
வடிவுள்ளபிராமணனறன்மனைவியைக்கைப்பிடித்தோன்
நடுவனேயிவனைப்பார்நீர்நானென்றுகெருவங்கொண்டோன்
மடிமோசஞ்செயதோன்மெத்தமாபாவியிவன்றானையா

(வ-ம்) கேளும் எமதர்மராசனே இவனே பிராமணஸ்திரீயைக்கைப்
பிடித்தவன் இவனே உண்டவீட்டில் ரெண்டகநினைத்தலங்கெருவங்கொ
ண்டவன் காதகநெஞ்சைத்தைப்படைத்தவன் இவன்மார்பிலெங்கும் ரோ
மத்தைப்பார்த்தீர சுவாமி,

இராஜன்-தூதருக்குச்சொல்-விருத்தம்

தேசிகப்பெண்தோஷத்தில்சிக்கினபாவிதனை
ஊசியில்நிறுத்தித்தேனையுடம்பெலாம்விடுத்துக்கோல்வீர்
கேசரியாகாமென்றுகெருவத்தையடைந்தோன்றன்னை
வாசியிற்செதுக்கிப்பாம்பின் வாய்க்கிரைகொடுத்திடீரோ

(வசனம்) ஆரடா அடா எமகாதஇங்கிலியரோ அடா இந்தப்பிராமணதோ
ஷத்திலகப்பட்டவனைத் தள்ளிக்கொண்டுபோய ஊசிமுனையில்நிறுத்தி க
ருந்தேளைக்கடிக்கவிடுவதைசெய்யுங்கள்மேலும் ஒருவரையுமறியாதபடிப்
பெட்டிமகனைக்கொண்டுபோய் தலையில்தளளிவாசிகொண்டுசெதுக்கிகா
க்கைக்கிரையிட்டு பினனும்லதைசெய்து பாம்பின்வாய்க்கிரைகொடுத்து
வாருங்கள் கொண்டுபோங்கள் காலதூதர்களே

தூதர்சொல்-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

இறைவனுத்தாரப்படியிவன்றனைப்பிடியடா இல்லியரா-இவனை
இருக்கடாவுருக்கடா பெருக்காமல் கருக்கடாவில்லியா

மறையவன்பழிக்காக வதைசெய்துவிடுவோம் இல்லியா-இவனை
மடக்கடா அடக்கடாபிடிக்குள்ளேயொடுக்கடாவில்லியா
மோசமதாக இவன் முதுகினில்மாரடா இல்லியா-இவன்
முளிக்கிறுன்விளிக்கிறுனெளிக்கவேவளைக்கிறுன்வில்லியா
ஊசிமுனையிற்குத்திதேலைவிடடா அடா இல்லியா-தோலை
உரியடாவிரியடாபிரியமாயுரியடா வில்லியா
ஆவனிமன்னவன்சொன்ன ஆக்கினைப்படியடா இல்லியா-இவனை
அடியடாகடியடாமடையனைப்பிடியடா வில்லியா
எவனும்மெக்கிடில்லையென்றுசொல்லிநகைக்கிறுன் இல்லியா-இவனை
இடியடாபொடிபடகொடிவழிகெடவடா வில்லியா
ராசகாலனைத்தள்ளிநெருக்கடாநொறுக்கடா இல்லியா-எட்டி
நடக்கிறுன்றுடுக்குறுன் விடுக்காமற்பிடியடா வில்லியா
வாசியாலேயிவனை வரிசையாய்ச்செதுக்கடா இல்லியா-பாம்பின்
வாய்க்கிரையாகவேப்போபோக்கியோயெறியடா வில்லியா

இல்லியர்-இராசனுக்குச்சொல்-விருத்தம்

சண்டனேவேதியர்க்குச்சர்பபனைசெய்தோன்றன்னை
கொண்டுபோயூசிதன்னிற்குத்தியேதேலைவிட்டோம்
மீண்டனுய்கெருவங்கொண்டவீனனைவாசிகொண்டு
துண்டஞ்செய்பாம்பின்வாய்க்குத்தொகுத்திரைகொடுத்துவந்தோம்

(வசனம்) சரணஞ்சரணம் இராசபரமேஸ்வராவேதஸ்திரீ பாதகத்திலகப்பட்டவனைக்கொண்டுபோய் ஊசியிற்குத்தி வதைத்தோம் நாவென்று கெருவங்கொண்ட மூடனைக்கொண்டுபோய்வாசியிற்செதுக்கிப்பாம்பின் வாய்க்கிரைகொடுத்துவந்தோம் சுவாமி

இராசன்-தூதருக்குச்சொல்-கவி

வர்ணப்பல்லொளிதூதர்களே வந்தபாவிகள்தான்போக
இன்னம்பாவிகள்தானுண்டோ மெய்ப்புகழியம்புமெந்தனுக்கே

தூதர்சொல்-கவி

தருமமென்குமுறைசெலுத்துஞ் சண்டாளபாவிகள்தான்போக
கருமவினைக்குளகப்பட்டகபடர்தானுமிலைமன்னு

மற்றொருதூதன்-இராசனுக்குச்சொல்கவி

முன்னோர்வணங்குமன்னவனே மகாபாதகஞ்செய்தவர்கள்
இன்னமுலகிலிலையையா இறைவாதரணமன்னவனே

இராசன்-தூதருக்குச்சொல்-பாணி

ஆடாகரலதூதர்களே அதிசீக்கிரமாய்ச்சென்று
சீருடனமதுகணக்கெழுதுஞ் சித்ரபுத்திரனையழைப்பீர்

தூதர்சித்திராபுத்திரனுக்குச்சொல்-பாணி

பொருத்தப்பகுத்துக்கணக்கெழுதும் பாக்கியமுள்ளகருணிகனே
வகுத்தமனுமுனையழைத்தார் வருவீர்கொடியில்வருவீரே

சித்ராபுத்திரன்-தூதருக்குச்சொல்-பாணி

நம்மையாளுமெமதர்ம ராசனழைத்தபோதேநான்
செம்மையாகவேவருவேன் சேர்ந்துவாரீர்தூதர்களே

சித்ராபுத்திரன்வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம் மிசுரதாளம்,

பல்லவி

ஊருக்குநானேகணக்கப் பிள்ளை-மற்றப்
பேரெல்லாம்அணிப்பிள்ளைகீரிப் பிள்ளை

அநுபல்லவி.

தேருக்குளிருக்கின்ற சித்ரமெல்லாமெந்தன்
சித்தத்தில்நிற்பிக்குஞ் சித்ராபுத்ரனுனே(ஊருக்கு)

சரணங்கள்

கட்டோலையைக்கட்டி விரப்பிலேபாய்ச்சுவேன்
கண்டபடியெல்லாம் கணக்கைப்பிரட்டுவேன்
சட்டமாயிறப்பவர் பிறப்பவர்தங்களைச்
சாதிக்கவல்லவன் சோதிக்கவல்லவன்(ஊருக்)

கையெழுத்தாணியை மெய்யாய்க்கருட்டுவேன்
கணக்காகச்சொல்லுவோர் கருத்தைப்பிரட்டுவேன்
வையகந்தனிலெங்கும வளர்நதிகளுஞ்செந்நெல்கள்
மாறிவரும்போது கூடிந்துகைதப்பேன் (ஊருக்)

வந்ததொகையிதென்று வழிதனைச்சொல்லமாட்டேன்
வாய்பேச்சைப்பிடுங்கி வழக்கில்விட்டுவிடுவேன்
தந்த்ரயிந்த்ரசால சமர்த்தெல்லாஞ்செய்திடுவேன்
சாகும்போாயுசு தன்னையுமாற்றிடுவேன்(ஊருக்)

சித்ராபுத்திரன்-இராசனுக்குச்சொல்-விருத்தம

நாவிலமென்றுங்கீர்த்தி நலமுடன்பெற்றலோலா
தானசம்மதத்திற்கீர்த்திசம்பத்தாய்வாழ்விசாலா
சேனையோடிருந்துகீர்த்தி செங்கோலும்படைத்தலீலா
ஏனையாவென்னையழைத்தசேதியியம்புந்தென்றிசையிற்காலா

(வசனம்) சரணஞ்சரணமையா எமதர்மராசனே என்னையழைப்பித்
தகாரியம் அருளிச்செய்யுமையாசுவாமி

இராசன்-கணக்கப்பிள்ளைக்குச்சொல்-விருத்தம்

வானுள்ளோர்கணக்குமிந்த வையகத்தோர்கணக்கும்
கானமிந்திடவேவேணும் கன்றிசேர்கடையூர்தன்னில்
ஞானமார்க்கண்டனுக்கு நாட்சென்றகணக்குமிப்போ
மானியாய்ப்பார்த்துரைப்பாய் மதியுள்ளகணக்கனே.

(வசனம்) கேளும் கருணீகவமிஷாதிபதியான சித்ராபுத்ரனே இந்தவா
னுள்ளோர்கணக்கும் அந்தவைகத்தோர்கணக்கும் இன்ன மற்றுமுள்ள
பேருடையகணக்கும் திருக்கடையூரிலிருக்கும் மிருகண்டருடைய குமா
ரனான மார்க்கண்டனுக்கு வயது சரியானகணக்குமானறியவேணும் ஆ
கையால் சீக்கிரமத்துக்கு கணக்கையெடுத்துப்பார்த்துச் சொல்லுஞ் சித்
ராபுத்ரனே

சித்ராபுத்ரன்-இராஜனுக்குச்சொல்-கவி

கண்டிடதமுடனே கணக்கையும்பார்த்து
சண்டனேசொல்வேன் சமர்த்தைப்பாரும்

சித்ராபுத்திரன்சொல்-வசனம்

அடா அடாசுடுமுஞ்சி கணக்கா கணக்குக்கட்டையெடுத்துக்கொ
ண்டுவாரும் பிள்ளாய் (அப்படியே எடுத்துவந்தேனையா)

சித்திராபுத்ரன்-கணக்குப்பார்க்கிற-வசனம்

பார் பார்-பள்ளாத்தார்கணக்கு-இது-ஈர்-ஈர்-இண்டிவனத்தார் கண
க்கு-இது-கூ-கூர்-குடிசைபாளயத்தார்கணக்கு-இது-ஏர்-ஏர்- எழும்பூர் த
டியன்கணக்கு-இது-ஓர்-ஓர்-ஒட்டர்கணக்கு-இது-மார்-மார்-மறவர் கணக்
கு-இது-வீர்-வீர்-வேசிகள்கணக்கு-இது-கோர்-கோர் - குயவன்கணக்கு-
இது-சீர்-சீர்-சீர்-ஜெயமார்க்கண்டன் கணக்கு இது சுவாமி

சித்திராபுத்ரன்-இராஜனுக்குச்சொல்-விருத்தம்

காலனேவாராயிந்த கணக்கையும்பாராயந்த
பாலன்மார்க்கண்டனுக்குப் பதினாறுவயதுமாச்சு
கோலமாநீயுபூசி குறுந்தடிபிடித்துநிற்கும்
சாலதூதனைவிடுத்துக் கட்டியேவரச்செய்வீரே

(வசனம்) கேளுமையா எமதர்மராசனே இதுவரையிலும் பார்த்தகணக்
கில் யாருமகப்படவில்லை திருக்கடையூரிலிருக்கும் மிருகண்டருடைய கு
மாரனான மார்க்கண்டன் அகப்பட்டான் நமது காலதூதனை விடுத்துகட்
டிக்கொண்டுவரச்சொல்லும் மற்றகணக்கு நாளைக்குப்பார்த்துச் சொல்லு
கிறேன மகாராசனே

இராசன்-தூதருக்குச்சொல்-விருத்தம்
தூதரேகேளீர் சோலைசூழ்கடையூர்தன்னில்
நீதன்மார்க்கண்டன்ருனும் சிமலனைப்பூசைசெய்வான்
சோதனைப்பார்த்துநீங்கள் துணிந்தவன் றன்னைக்கட்டி
காதலாய்சமதுமுன்னே கடுகெனக்கொண்டுவாரீர்

(வசனம்) ஆரடா அடா காலதூதர்களே (சுவாமி) திருக்கடையூரிலிருக்கும்மிருகண்டருடைய குமாரனுன்மார்க்கண்டன் ஆரணியத்தில் சிவாலயத்தினருகே சிவபூசைசெய்துக்கொண்டிருக்கிறுன் அவன்பூசைக்கு அஞ்சுகிநீங்கள் பயப்படாமல்பாசத்தினுலே கட்டிசூலத்தினுலே குத்திக்கொண்டு நமதுயமபுரத்துக்கொண்டுவாருங்கள்காலதூதர்களே

தூதர்-இராஜனுக்குச்சொல்-கவி
அப்படியேபோய் எப்படியாகிலும்
கைப்பிடியாகக்கொண்டிப்பவேவாரோம்

தூதர்சொல்-தரு
ராசனுத்தாரப்படி ரோஷமுடனடந்து வாடா
அடா தூதா-ஏண்டா-பூதா
நாமெல்லோருங்குதித்து நடப்போம்
நாசகாலத்தூதனே தூசியெழும்பிடவே வாடா
அட்டாகாடா-ஏண்டா-மூடா
காடுங்கிடுகிடென்ன நடப்போம்
வாசிப்பல்லறநாகநீசேசச்சில்லாக் கோலேந்திவாடா
அடாகுள்ளா-ஏண்டா-கள்ளா
வாழுமார்க்கண்டனிட நடப்போம்
பாசக்கயிறெடுத்து வீசிப்பிடிப்போமெள்ள வாடா
அடடாகாக்கா-ஏண்டா-மூக்கா
பருத்தமீசைமுறுக்கி நடப்போம்

தூதர்சொல்-விருத்தம்
மதக்களாய்ப்போறவண்ண மார்களேசூட்சியென்ன
பதமுனிநமைக்கண்டிட்டாற் பதுங்கியேகொள்வான்மேலும்
ஒதுக்கியேலகுவெடுத்து வுரத்தசொற்காட்டாமற்றுன்
பதுங்கியேபோனேமானுற் பாலனைப்பிடிக்கலாமே

(வசனம்) வாருங்கள்ண்ணமாரே நாமிப்படிக்குச்சந்தடியாய்ப்போனேமானுல் அந்தமார்க்கண்டன் எங்கேயாகிலுமிருந்து நம்மைப்பார்த்துப் பதுங்கிக்கொள்ளுவான்பிறகு அகப்படமாட்டான் ஆகையால் சந்தடிபண்ணுமல் நாலுபக்கமும்பதுங்கிடவுங்களண்ணமாரே

மார்க்கண்டன்சொல்-வசனம்

ஆகரா ஆகரா ஆகரா ஆகரா திருக்கடையூரீசா திரிபுரதகனு சி வகுருநாதா அடியேனைத் தூதர்வந்தனுகாமுன்னம் உமதுபாதாரவிந்தஞ் சேரவேணுங்கர்த்தனே

மார்க்கண்டன்-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்,

திருக்கடையூரானே-சந்திர-சேகரனேசுந்திவாகனனே
உருக்கமதுடையோனே-எனக்காக-உல்லாசனேவெகுவில்லாசனே
அமூர்த்தகண்டீஸ்வரனே-அன்பனா-ஆண்டவனேசபைதாண்டவனே
அமரர்கள்துதிப்போனே-ஏழைமுன்-வருவோனேவரந்தருவோனே
தினமுற்றுவாரானே-காலனுந்-தேடுவானேயெனைநாடுவானே
உளோகிதம்பியேனே-எனக்காக-உத்தமனேகிருபைவைத்தவனே
எனக்கொண்டுபோவானே-நமனினி-யீஸ்வரனே-மயேஸ்வரனே
கனமதுகொள்வோனே-யினியெனைக்-காப்போனேபாதஞ் சேர்ப்போனே

தூதர்சொல்-விருத்தம்

சீராளஅண்ணமாரே சிவபூசையோசைகேளீர்
சோரகவந்துநின்று கிலக்கவேயாலோசித்து
நேரயமாகயிந்தப் புதரினில்நுழைந்துபார்த்து
பாராளுந்தருமர்சொன்ன பாலனைப்பிடிக்கலாமே

(வ-ம்) வாருங்களண்ணமாரே சேருங்கள் ஒன்றாய்ச்சேருங்கள் சிவ பூசையின் ஓசை அடிபடுகுது கேளுங்கள் சோரகஇந்தப்புதரில் நுழைந் து பாருங்கள் அகப்படுவான் அண்ணமாரே

தூதர்சொல்-விருத்தம்,

கோடாலிப்பல்லாவாடா கொள்ளிக்கண்தூதாவாடா
ஆடாதகூத்தையாடு மழடிகூன்முதுகாவாடா
மோடாணமூக்காவாடா மூட்டிக்கால்பூதாவாடா
வாடாதவலுமைபெற்ற மார்க்கண்டனிவனேபாராய்

(வ-ம்) கோடாலிபல்லா கொள்ளிக்கண்தூதா கூன்முதுகாகுருங்கா ல்தூதா கோட்டுவாயா மூடிக்கண்ணு நமது மகாராசன்சொன்ன மார்க்கண் டன் இவன் தானுபாருங்கள்(அவன்போலத்தோற்றப்படுகின்றது)ஒன்றாய் பாருங்கள் ஒன்றாய்ச்சேருங்கள்

தூதர்சொல்-விருத்தம்

தென்றிசைக்கதிபன்சொன்ன சிவாலயமிருக்குதிங்கே
அன்புடன்பூசைவேளை யானுக்குச்சொல்லுதிங்கே
இன்னம்வேறில்லைமைந்த னிவனேமார்க்கண்டன்கண்டாய்
மன்னவனழைத்தானென்று வாக்கினாலழைத்திடடோ

(வசனம்) கேளுங்களண்ணமார்களே மகாராசன்சொன்ன மார்க்கண் டனிவன்றானே பாருங்கள் சிவாலயமுமிருக்குது சிவபூசையும்நடக்குது

இவனுஞ்சிறுபிள்ளையாயிருக்கிறான் சமுசயமில்லைமார்க்கண்டன் இவன்
தான் அழைத்துப்பாருங்கள் அண்ணமார்களே

தூதர்-மார்க்கண்டருக்குச்சொல்-விருத்தம்

ஈசனைப்பூசைசெய்வ திருக்கட்டுமுனிமார்க்கண்டா
ராசபூபதியோனான நமனுமேயுன்னைக்கண்டால்
நேசமாய்த்திடமாகத்துநிமிஷத்திலழைத்துக்கொண்டு
பாசமாய்வரவேசொன்னார் பாலனேவருகுவாயே

(வ-ம்) வாருமப்பா- மார்க்கண்டா நீ சிவபூசைசெய்வ திருக்கட்டும்எ
ங்களெமதர்மராசன் உன்னைப்பிரியத்தோடழைத்துவரச்சொன்னார் கேட்
டுவருவாய் வாருமப்பா

மார்க்கண்டன்-சிவனுக்குச்சொல்-கவி

வந்தழைத்தாரெமதூதர் வானோர்பிரானெந்தன்
சிந்தையிலெண்ணமிப்போ செய்ததொருகுற்றமெல்லாம்
மூர்த்தியேமனம்பொறுத்து முத்திதரும்பொற்பாதனே
எந்தனைக்காத்தருளும் ஈஸ்வரமயேஸ்வரனே

(வசனம்) ஆகராமகாதேவா எமதூதர்வந்து பாசகுலங்கட்டியழை
க்கிறார்கள் என்னைப்பிடியாமுன்னமே உமது பாதாரவிந்தஞ் சேர்த்துக்
கொள்ளுங்கர்த்தனே

சிவன்-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்

அஞ்சாதேயஞ்சாதே யானைமுகனறியச்சொனனேன்
மிஞ்சிடாரெமதூதர் மிகவுனைச்சேரார்கண்டாய்
நெஞ்சினில்நமைத்துதித்து நின்றுநீபூசைசெய்தால்
பஞ்சதுபோற்பறப்பன் பாலனேநீயஞ்சாதே

(வசனம்) வாராயப்பா மார்க்கண்டசெல்வமே வந்திருக்கிறதூதாகள் உ
ன்கிட்டவந்து அண்டுவார்களா அண்டமாட்டார்கள் இதோ நான் யானை
முகனறியச்சொன்னேன் உன்னைக்காட்டிக்கொடுப்பதில்லை நீ சுகமாய் பூ
சையிலிருவந்ததூதனை போகச்சொல்லுவாயப்பா

மார்க்கண்டன்-தூதருக்குச்சொல்-விருத்தம்,

தப்பிதமில்லையேம தருமருமழைத்தசேதி
எப்படிவருவேனிப்போ யெந்தனையாட்கொண்டாலும்
அப்பணிசடையோனுக்கு மாதிகாலத்துப்பூசை
செப்பமாய்நடக்குதென்று சேதியாய்ச்சொல்லுவீரே

(வசனம்) கேளுங்கள் காலதூதர்களே உங்கள்மகாரஜ னழைத்துவரச்
சொன்னதுசரியே இந்நேரஞ்சிவனுக்குப் பூசைவேலையான படியினாலே
எப்படிவருவேன் வரக்கூடாதென்று போய்சொல்லுங்கல்தூதர்களே,

மார்க்கண்டனுக்கும் - தூதருக்கும் - தர்க்கம்
தரு-இ-ம-கௌளிபந்து-ஆதிதாளம்
தூதர்சொல்லல்

சொல்லிடவோயித்தனைத் தூரமதுவந்தது
தூதரும்நாங்களடா மார்க்கண்டா
மார்க்கண்டன்சொல்லல்

தூதராருலெ னடா நாதர்பூசைசெய்யவிடச்
சொன்னவனாரடா தூதர்களே
தூதர்சொல்லல்

வல்லமைபேசவா வந்ததுகெட்டியா
வாரதேயில்லையோடா மார்க்கண்டா
மார்க்கண்டன்சொல்லல்

வாரதேயில்லையென்று மன்னனீனுடுனாயுங்கள்
மட்டில்லாவார்த்தையேன் தூதர்களே
தூதர்சொல்லல்

உலகினிலிப்படி யுத்தரவுஞ்சொன்னபேர்
ஒருவருங்காணகிலேன் மார்க்கண்டா
மார்க்கண்டன்சொல்லல்

ஒருவர்சொல்லெனடா உற்றதைச்சொல்லினேன்
உங்களாலாவதென்ன தூதர்களே
தூதர்சொல்லல்

கொல்லவுங்காங்களே யுனைக்குத்தவுங்காங்களே
கொண்டுபோய்விடுவோமடா மார்க்கண்டா
மார்க்கண்டன்-சொல்லல்

கொண்டுபோய்விடுவதும் பெண்டுகள்பேச்சடா
குற்றமதிற்சிக்குவீர் தூதர்களே

தூதர்-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்

குற்றமாவதுதானென்ன குணங்கெட்டுப்பேசவேண்டாம்
இத்தனையாணுவங்கொண் டிருப்பதுநன்மையில்லை
பித்தனேபிடித்துவுன்னைப் பின்கட்டாய்கட்டியிப்போ
குத்துவோஞ்சூலத்தாலேகுணமுடன்வருகுவாயே

(வசனம்) அடாவாடா மார்க்கண்டா நீ ஈசனைச்சேர்ந்திருக்கிறோமென்கிற கெருவத்தினாலே இப்போர்க்கொத்த ஆங்காரம்படைத்து மதோன் மத்தனைப்பேசுகிற உன்னுணுவத்தையடக்கி எங்கள்பாசக் கயிற்றினாலே கட்டி சூலத்தினாலேகுத்தி எங்கள் எமபுரத்துக்குக்கொண்டுபோவோம்பாருடா மார்க்கண்டா

மார்க்கண்டன்-தூதருக்குச்சொல்-விருத்தம்

வாரதேயில்லையென்னை மடக்கியேகுத்திக்கெட்டீர்
வாரதேயில்லையந்த மறலிதான்கெட்டான்போடா

வாரதேயில்லைநீங்கள் மடிவதுசித்தங்கண்டாய்
வாரதேயில்லையென்று மன்னனுக்குரைசெய்வீரே

(வசனம்) கேளுங்கள் காலதூதர்களே. பூனைக்குப்புலியஞ்சுமா பொருளுக்குப் பூஷணமஞ்சுமா அதுபோல நீங்களென்னைப்பிடித்துக்கெட்டீர்கள் உங்களையனுப்பினனே அந்தஎமன் அவனுங்கூடகெட்டான் கண்டாய் நீங்கள்மாத்திரம் தப்பிப்பிழைத்தோடிப்போங்கள் காலதூதர்களே

தூதர்சொல்தரு-இ-ம் ஆகிரி-ஆதிதாளம்-

பாரடாகைபாசமதுபாராமலே-பூசைசெய்தால்
பார்த்தவர்க்கழகுமல்லடாபார்ப்பாரப்பையா உன்னைப்
பாசத்தாலேகட்டியேகுவோம்

மார்க்கண்டன்சொல்-தரு

ஐயனேநானென் செய்குவேன்.தடையூசா
ஐயனேநானென்னசெய்குவேன்
வைடமகேழுந்துய்யமானர்மெய்யுதேகமகாலதூதர்கள்
எய்யுதேனிதோபாசமென்கிறார்தையலாளபிராமிநேசனே (ஐய)

தூதர்சொல்-தரு

எங்கள்பின்னே வந்தாலாச்சு
யில்லவிட்டால் காலமாச்சு
இப்படிக்குன்மனதிலெண்ணடாபார்ப்பாரப்பையா
கொப்பனாயிற்காச்சிகொட்டுவோம்

மார்க்கண்டன்சொல்-தரு

தக்ஷணந்தனிலே வந்தானே-சிவனேயினி
யிக்ஷணமேகொண்டு . போவானே
பட்சிகருடனைத்தூக்கியோடிய மட்சம்போல்பதைக்குதையோ
பட்சம்வைத்தெனையாளுமென் னுயிரட்சிபுமிந்தவேளையில்(ஐய)

தூதர்சொல்-தரு

எத்தனைநேரங்க ளாச்சு
யினிபொறுப்பதில்லையுந்தன
புதகிதனிலெண்ணிக்கொள்ளடா-பார்ப்பாரப்பையா
குத்தியுயிர்கொண்டுபோகுவோம்

மார்க்கண்டன்சொல்-தரு

இனிபொறுப்பதில்லையென்கிறான் சிவனேயினி
யிறுக்கக்கட்டிகொல்வேனென்கிறான்
தனியனாயிருந்தென்னசெய்குவேன் தையல விடமாகவே
யினியாகிலும்வருவீரோ யிக்கடமைமாகர்தன்னிலே (ஐய)

தூதர்சொல் தரு

ஈசரளித்திட்டவய
திரொட்டுஞ்சரியேயாகில்
ஈசாலேயென்னசெயவது பார்ப்பாரப்பையா
யுங்ளோகுலத்தாலேகுத்தியெய்துவோம்

மார்க்கண்டன்சொல்-தரு

நாளுதிக்கும்வந்துநிற்கிறார் சிவனேயினி
காலனும்வருவானென்கிறார்
காலோண்டசையுதேயிக் காரணத்திற்கென்னசெய்வேன்
ஆலமுண்டயீசனேயினி அந்தகன்வந்தாலுமென்ன (ஐய)

தூதர்சொல்இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

இப்படியானுவங்கொண்டவன்றன்னைநீ
எட்டிச்சிகையைமெள்ள பிடியடா-அடா
அப்படிநீவாடாகில்லியா-இவனை
வசங்கவொட்டாமலே பிடியடா
சொற்படிகேளாத மூடனேயுந்தன்
குலத்தினறகுத்திப் பிடியடா-அடா
எப்படியாகிலும் பாசத்தாலேகட்டி
யிருப்புத்தடியாலே யடியடா-அடா
தற்பரன்பூசைநமக்கிப்போதாவதென்ன
தன்னிக்கயிற்றாலே கட்டடா
அப்பணிசடையோன்பூசையிப்போதென்ன
அடிக்கடிகிட்டிநீ பிடியடா
குப்புறமண்ணிற் கவ்விவிழக்குத்தி
கொண்டுபோவோந்தாடையி லடியடா
கொப்பெனவக்கினி வீசுதங்கேதடா
யிங்கேகில்லடாகில்லியா அடா(இப்படி)

தூதர்கள்சொல்-விருத்தம்

அடித்திடவேண்டாம்வேண்டாமண்ணமார்களேநீர்கேளீர்
பிடித்துமேபோவோமென்றாற் பிஞ்ஞகன்றயவதாலே
அடித்துமேதனல்களோங்கிச்சுற்றிலும்வீசுதிப்போ
வடித்துமேடீத்துவோடி ராசனுக்குரைக்கலாமே

(வ-ம்)கேளுங்களண்ணமார்களே இந்தமார்க்கண்டனையாராகிலுமினிதொடப்போறீர்கள் சிவபூசைவேளையானதினாலும் சிவனுடைய தயவினாலும் எக்குமக்கினியாக வீசுகிறதேப்படுகின்றது இனிநம்மாலேயாகாது நமதர்ராசருக்கேபோய்ச்சொல்லுவோம் வாரும்அண்ணமார்களே,

60

தூதர்-இராஜனுக்குச்சொல்-கவி

சரணமன்றுவென்றுதான் தயவாகப்போவென்றேதான்
சரணம்பிழைத்துவந்துதான் சண்டாவுமக்கண்டதுதானே

இராசன்-தூதருக்குச்சொல்-கவி

கண்டிதமுடையதூதர்களே கடுகெனநீங்களோடவந்து
சண்டனைக்கண்ட துதயவென்று சாற்றுகிஷ்டரேமென்னவோடா

தூதர்-இராஜனுக்குச்சொல்-விருத்தம்

குதித்துமேயடிப்போமென்றுற் கொன்றைகுடியனைத்தாக்கும்
மதத்துடன்பிடிக்கப்போனோ மகாபூசைவேலையாலே
கொதித்துமேதணல்போலெங்கும் குமிலெனவீசலாலே
விதித்தவன்விதிபலத்தால் மேவியேபிழைத்துவந்தோம்

(வ-ம்) கேளுந்தர்ம்மராசனேமுன்னம் நாங்களழைத்ததற்கு வருகிற தில்லையென்று உம்மையும் எங்களையும்வைதான்பிறகு பாசக்கயிறுகொண்டு வீசிப்பிடிக்கப்போனோம் ஆலயத்தைச்சுற்றி அக்கினிபொறிபறக்குது எங்களாலே ஆகாமல்வந்துவிட்டோமையா

இராசன்-தூதருக்குச்சொல்-விருத்தம்

அப்படியாவாய்ப்பேச் சறியாதவைபயனுக்கு
இப்படிகெருவந்தந்த யீசனையறிகிறேனுன
எப்படிஇதைத்தடுப்பா னென்னிடக்கிடாவைக்கொண்டு
ஈற்படியாகவாரீர் நானேபோயறிகுவேனே

(வசனம்) ஆடாஅடா காலதூதரோ வாய்ப்பேச்சுகன்றாய்ப்பேசத் தெரியாதவைப்பயனுக்கு இப்படிகெறுவந்தந்தானோஅந்தயீசனைநானேபோ யறிகிறேன் நமதுகிடாவையலங்கரித்துக்கொண்டு வாருங்கள்காலதூதர்களே,

தூதர்-இராசனுக்குச்சொல்-பாணி

கோபாக்கினியைத்தான்படைத்து கொண்டுவாகிடாயென்றமட்டில்
மாயாக்கியமென்றேமகிழ்ந்தோம் மன்னுகிடாவைக்கொண்டுவாரோம்

எருமைக்கிடாவருகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி

தாவும்புலிபதுபோல்எருமைக்கிடாவும் வருகுதப்பா

அநுபல்லவி.

அாருமெழும்பிட துள்ளித்துள்ளியேயிதோ (தாவும்)

சரணங்கள்

வனத்திரளுமொடுக்கத் தரணியுள்ள
சேனைப்பதியுமடக்கத்
வானத்திருக்குள் மியாவுந்தோரும்தியங்க
வாடைக்கொதிகொதிக்காடிக் குதிகுதித்து (தாவும்)

உவந்தச்சென்னியைப்பிரட்டி மிரட்டிக்கட்டி
செவந்தகண்ணை யுருட்டி
கவிந்தமலர்முகத்தோ டுவந்தமதியுங்கொண்டு
கண்கள்திரந்திட செகமெல்லுமகிழ்ந்திட (தாவும்)
மோகத்திலே குழம்பி கரும்பிடா
மேகத்திலெழும்பி
லோகத்திலுயிர்வதை யோகத்தினுற்செய்து
கொடிக்குங்காலனுர்பக்கல்முடுக்காகவேயிதோ (தாவும்)

தூதர்-இராஜருக்குச்சொல்-பாணி

அலங்காரஞ்செய்தேமெள்ள
அழைத்துவந்தோங்கிடாவதனை
கலங்காமனுருகித்தேறும்
கடிதிற்போயவருமோமே

இராசன்சொல்-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்

வாடாவூடாதூதர்களேயந்தமார்க்கண்டனிடபலமறிவேனே
தாடாண்மைகளைப் படைத்தானேயாகில்
சதைப்பேனவனைநான் சிதைப்பேனேயடா (வாடா)
விதியோ அவனுக்குச்சதியாயிருந்திட
விடுப்பேன்மேல்துஜங்கொடுப்பேனே-அடா
கெதிவாரதையவனறியாதேகேடு
கெட்டானேஅவனை விட்டானே-அடா (வாடா)
சிவனுகிலுமின்னும் எவனுகிலும்நம்மைச்
செயிப்பானேஅவனை தயிப்பானே-அடா
தவமேபெரிதாகிலு மாகிலுமென்சொல்
தடுப்பானேஅவனைவிடுப்பானே-அடா (வாடா)
எனதாக்கினையைத் தடுப்பாருமங்கே
யிருப்பானேசொல் பிரிப்பானே-அடா
இனிதாகவேவந்தால் சரியேயில்லாவிட்டால்
இடிப்பேன்தாடையடிப்பேன்-அடா (வாடா)

இராஜன்-தூதருக்குச்சொல்விருத்தம்

என்னடாகிடாவையிப்போ வென்றும்மடித்தபோது
பின்னிட்டேபோகுதந்தப்பித்தன்பால்நடக்கவில்லை
இனவொருகிடாவையிப்போயிழுத்தோடிவருகுவீரோ
பின்னையுமிதையேவாட்டிப்பித்தன்பால்நடக்கலாமே

(வசனம்) ஆடாஅடா காலதூதர்களே என்னடாயிந்தக்கிடாவை அடி மேல் அடி அடித்தபோதும் இன்றைக்குப் பின்னிட்டேனிற்குது முனி

ட்டோடவில்லை நல்லது நீங்களோடி இன்னம்ஒருகிடாவைக்கொண்டு வருகிறீர்களோ அல்லதிதைதத்தானே நடத்துகிறீர்களோ சொல்லுங்கள் காலதுதர்களே

தூதர்கள்-இராசனுக்குச்சொல்-விருத்தம்

எங்குபார்த்தாலும்அங்கே யெண்ணறுதசிவாலிங்கங்கள்
எங்கிலுந்தானெருங்கி யிருப்பதாலெங்கள்கோவே
எங்கிலுங்கிடாவோ துங்கி யெகிறியேநடக்குமிப்போ
எங்களுக்கேநடக்கப்பிடிவுண்டுவருகின்றோமே

(வ-ம்)கேளும்மகாராசனே உம்மிட ஆக்கினைக்கும் கோபத்துக்கும்பயப்பட்டு அந்தக்கிடாவும்நாங்களும்வருது எங்கும்கால்வைக்கஇடமில்லாமல் சிவாலிங்கங்க ளெருங்கியிருக்கின்றது கிடாவையடித்ததினுலாபமென்னநாங்கள்வருகிறதற்கேபயந்துவருகிறோம்மென்னத்தானேநடத்துமகாராசனே

மார்க்கண்டன்சொல்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி

வாரானேகாலன்-வாரானே சுவாமிவாரானேகாலன்

அநுபல்லவி.

கோபவேகங்கள் நெருப்புப்பொறிபறக்க (வாரா)

சரணங்கள்

மேல்கீழ்மேலாகவேயிப்போ
விண்ணும்மண்ணுமதிரக்கண்ண கடையூரீசா(வாரா)
என்னாடியேமனித்துதர்களோடு
பிடிபோற்கதும்பியேவிடையுங் கடையூரீசா(வாரா)
அஞ்சாக்கொலைசெய்ய அலறிக்குதிகுதித்து
அவனேவருகிறான்சிவனே கடையூரீசா(வாரா)
துடித்தான்சவுக்கினுலடித்தான்கருங்கிடாவை
விடுத்தானிதோவந்து அடுத்தானே கடையூரீசா(வாரா)

மார்க்கண்டன்-தேவாரம்

தூதரும்போனபின்பு துரிதமாய்க்கிடாவிலேறி
வேதனைசெய்யவேண்டி வெதும்பியேகதும்பிக்கொண்டு
நாதனேகடையூரானே யமனிதோவருகின்றானே
மாதொருபாகாயிந்த மைந்தனைக்காத்திடீரோ

(வசனம்) அரகரா கடையூரீசா ஆலகாலவிஷத்தையுண்டஐயனே ஆதிசோதிமுன்வந்த தூதர்போகஇன்னம் என்னைவேதனைசெய்ய எமன்கருங்கிடாமீதேறி மகாவுக்கிரமாகவருகிறான் அவனைப்பார்க்கஎன்னுள்ளம்நடுங்குது காத்தனே

சிவன்-மார்க்கண்டருக்குச்சொல்-தரு-ஜம்மை

பாலனேமார்க்கண்டா பயமுறுதேமனதில்
காலனெனவேசற்றுங் கவலைவையாதே
எமனுகிலுமின்னம் இமையவர்களானாலும்
மறலிவுனைவிழிதிறந்துப் பார்க்கவசமாமோ
பதுமலர்தொடுக்குமதின் பட்டபாடறிந்திருந்தும்
அதனவிதஞ்செய்யேமனடுப்பானோமைந்தா
குண்டோதரன்முதல் கோடிகணமிருக்கவுன்னை
அணடுவானோவெமனும் அருகில்வருவானோ
அழகுடையபாலகனே அஞ்சவேண்டாமெமனை
மழுவுக்கிரையாக்கிடுவேன மனதுதெளிந்திருப்பாய்
ஆனைமாமுகனுனை அபயமிருநதுனனைவினி
தானெதிர்த்தயேமனுடன் சரிவாதுபுரிவாய (டால)

சிவன்-மார்க்கண்டனுக்குச்சொல்-கொச்சகம்

சண்டன்வரானெனவே சற்றும்பயப்படவேண்டாம்
பண்டுமுப்புரங்கள்பட்ட பாடறிகுவானமனும்
அண்டிவந்தானேயாகி லவனுடனேநீயெதிர்த்து
மண்டலமதிக்கச்செய்வாய் வஞ்சனைநான்செய்யேனே

(வசனம்) கேளுமப்பாமார்க்கண்டா நீ யேமன்வருகிறானென்றுபயம் சற்றுகிலும் வைக்கவேண்டாம் இதோநான் ஆனைமுகனதிபச் சொல்லுகிறேன் உன்னை எமன்கையில்காட்டிக் கொடுப்பதில்லை முன்னமுப்புரம் பட்டபாடு அவன்நன்றுயறிந்திருப்பான் நீயவனுடனே யெதிர்த்துப் பேசி மண்டலமதிக்கச் செய்யுமப்பாமார்க்கண்டா

இராசன்-தூதருக்குச்சொல்-விருத்தம்,

கண்டிததூதரோமார்க் கண்டன்றானெங்கேயெங்கே
மிண்டனுமவனைக்காட்டு மீசனைத்துரத்திவிட்டு
அண்டாதபாசத்தாலே யவன்றனையிறுக்கிக்கட்டிக்
கொண்டுபோய்க்கழுவில்மாட்டிக் கொலைவதைசெய்குவேனே

(வசனம்) ஆடா அடாகாலதூதரே அந்தமார்க்கண்டன்றானெங்கேயெங்கே யென்கண்ணிற்காட்டுங்கள் அவனையும் அவனுக்குத் துணையாக வருகிறவனையும் கட்டிக்கொண்டுபோய் கொலைவதைசெய்கிறேன் காட்டுங்கள காலதூதர்களே,

தூதர்-இராசனுக்குச்சொல்-விருத்தம்

அதிபதிமுடையகோவே யாருக்கும்பயப்படாமல்
மதாமதங்கொண்டுமெத்த மவுனமாய்மொனமொனென்று
கெதாகெதியாகப்போற கேடுகள்தெரிந்திடாமல்
இதோசிவபூசைதன்னி லிருக்கின்றான்பாருமையா

(வசனம்) வாராய் த[illegible]மராசனே நீர்வருகிறதைப்பார்த்தும் பயப்படாம ல் மதோன்மத்தனாய் மோணமொனென்றுபேசிக்கொண்டு தனக்கு வரு கிறகெதி அறியாமல் [illegible]தோஆலயத்திற்குப் பூசைசெய்துக்கொண்டிருக் கிறான் பாருமையா ம[illegible]ராசனே

இராசன் மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்

பார்ப்பாரப்பய[illegible]தான் பயமதுசற்றில்லாமல்
தோர்ப்பாடிதனை[illegible]செய்து தூதனைமிரட்டிவிட்டாய்
கார்ப்பேனென்று[illegible]க்குச்சொன்னக் கடையூரான்றனைக்கூட்
பூப்போலேகட்டியெந்தன் புரங்கொண்டுபோவேன்பாராய்

(வசனம்) அடாவாடா பார்ப்பாரப்பயலே யெனது தூதர்வந் தழைத்தா ல்வராமல் துரத்திவிட்டாயல்லவா சபாசடா அந்த இரணியன் இடும்பா சூரன் [illegible]இந்திரசித்து ராவணன் கும்பகர்னன் இப்பேர்க்கொத்தயேரெல்லா ம் எனதுகயிற்றிற் கட்டுப்பட்டிருக்க நீ கட்டுப்படுகிறதுபெரிதா பேசா மல்வருவையோ வாராயோசொல்லடா மார்க்கண்டா

மார்க்கண்டனுக்கும் இராசனுக்கும்-தர்க்கம்-ஜம்பை

மார்க்கண்டன்-சொல்லல்

பாசகுலங்கொண்டு பயமுறுத்தவேண்டாம்நீ
யீசரடியார்கள்தன்னை யென்செய்யலாகும்

இராஜன்சொல்லல்

ஈசரடியாராகி லெனகென்னவேனுடனே
பேசவருவார்களோ பேய்ப்பயலேபோடா

மார்க்கண்டன்சொல்லல்

பொருப்புச்சிலையான்பாதம் போற்றுமடியார்கள்தன்னை
விருப்புடையயெவராலும் விழி[illegible]நோக்கலாமோ

இராஜன்சொல்லல்

விருப்புடையெவராலும் விழிநோக்காவொன்ப[illegible]
சரிப்படுத்துவேனெந்தன் சமர்த்தைப்பாரடாநீ

மார்க்கண்டன்சொல்லல்

இருப்புத்தூண்தனைக்கரையான் எரிக்குமோவீண்பேச்சேன்
நெருப்பிலேஈமொய்க்க நேடுரிமோபோடா

இராஜன்சொல்லல்

நெருப்புநாமென்றுந்தன நெஞ்சிலெண்[illegible]ியேயந்த
குறிப்புசொல்லவந்தாயோ குட்டிச்சுவ[illegible]நீ

மார்க்கண்டன்சொல்லல்

கருப்புச்சிலைதொடுக்குமந்த காமனெரிபடவிழித்த
விருப்பமுள்ளபரமசிவன் வீரமறியாயோ

இராஜன்சொல்லல்

விருப்பமுள்ளசிவன்பலதவை வெண்ணிநீபேசாதே
முறிப்பேனுனைப்பிடித்து முறிப்பதுவுமெய்யே

மார்க்கண்டனுக்கும்-இராசனுக்கும்-தர்க்கம்-ஜம்னம,

மார்க்கண்டன்-இராசனுக்குச்சொல்-விருத்தம்

கனக்கவேமுறிப்பேனென்ற காட்டுச்சொல்விடடாநீதான்
மனக்குள்வாழ்பூனைதன்னை மடக்கவுன்னாலாகாதே
எனக்குநீமசகமாமென் றெண்ணினேனுநாளாமேவேண்டாம்
உனக்குநான்பயந்துபேச ஒவ்வாதுநடந்திடாயே

(வசனம்) அடாவாடா சண்டாநீமுறட்டுத்தனமாய் என்னை முறிப்பே னென்கிறசொல்லிருக்கட்டும்எனக்குநீ ஒருகொசுவாய்கண்டாய உனக் குநான்பயப்படமாட்டேன் நீ இதுவனைக்கும்பூனைக்குட்டியைப்பிடித்ததிலை யா போபோ சும்மாநடந்திடுகாலா

இராசனுக்கும்-மார்க்கண்டனுக்கும்-தர்க்கம்-தரு

இ-ம-காதாரயக்கிரியை-மிசுரதாளம்

இராசனசொல்-தரு

நடத்திடென்றசொல்லு மேற்குமோ-இந்த
நாடவிகைமுன்னைக் காக்குமோ
தொடர்ந்தவார்த்தைப்பேசித் துள்ளிமுந்திடாதே
தூக்கித்தாக்கியுன்னை நோக்கிடுவேன்(நடந்து)

மார்க்கண்டன்சொல்லல்

காதலிக்கத்தைப்போ லாகைபோ-அடா
கமனேயெனக்குநீ டர்லவயோ
அர்தகத்தையென்முன் காட்டிடாதேபோபோ
காலாகுலாநோக்கு வேலைகாணில்லையோ (காதலி)

இராசன்சொல்லல்

நானென்றவென்பய மில்லையா-எனது
கட்டினிற்கோவார இல்லையா
விமலனுன்னையென்றும் விடுவதில்லையோடா
விசிப்பாசமேகொண் டுசனைப்பிடிப்பேன்(கமனே)

மார்க்கண்டன்சொல்லல்

காட்டுக்கொடிநீ பிழைப்பதென்-கெட்ட
நாயேபிங்கிபிங் முழிப்பதேன்
கூட்டிவந்ததூதர் கூடநீயுமிப்போ
தெக்கரித்திருக்கப் பக்குவங்கள்சொல்வேன (காட்டு)

இராசன்சொல்லல்

நாயேபேயேயென்று குலைக்காதே-இப்போ
நாம்பிழைத்தோமென்று மலைக்காதே
வாயைநான்கிழித்து வாரிக்கொண்டுபோய்
வாதைவாதைசெயய குறைவிளைவிப்பேன் (நாயே

மார்க்கண்டன்சொல்-தரு

நாம்பிறைத்தேமென்று யெண்ணியோ-அடா
நல்லயோசனையென்நீ பண்ணியோ
பாம்பணிந்தோரெந்தன் பாகமேயிருக்கப்
பார்க்குமூர்க்கனாத்தான் சேர்க்கவேகினைப்பார் (நாம்)

இராசன்சொல்-தரு

நல்லயோசனை உறவு ஞேடா-எட்டி.
நாதன்பார்க்கக் குத்துவேனடா
கொல்லியென்றுமீறும் கொடியதூதர்களே
குத்திசத்தியெங்கும பற்றி வாங்களடா (நல்ல)

மார்க்கண்டன்சொல்-தரு

நாதன்வார்க்குமட்டு மிருப்பேனே-இந்த
நாகமென்னைப் பேசத்தரிப்பேனே
வாதுசெய்யவேண்டாம் வழியைப்பாரடாசொன்னேன்
மன்னுமன்னுநீயென்முன் நில்லாதேபோபோ (நாதன்)

இராசன்-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்

நில்லாதேயென்றுசொன்ன நெஞ்சினைக்கொடுத்தவந்த
உல்லாசன்பூசைவிட்டு வொடுங்கியேவந்தலாச்சு
எல்லாருங்காணவுன்னை யிடியிடித்திழுத்துச்சென்று
பொல்லாதவதைவதைத்துப் புகழினைப்பெருகுவேனே

(வசனம்) அடாவாடா மார்க்கண்டா நமனென்கிறபயம் சற்றுமில்லாமல் இப்படிக்குஉறுதியான நெஞ்சைக்கொடுத்தவனை யறிகிறேன் பேசாமல் ஒடுங்கிவந்தாலாயிற்று இல்லாவிட்டால்இடியிடித் திழுத்துப்போய் சித்திரவதைசெய்வேன் பாரடாமார்க்கண்டா

மார்க்கண்டன்-இராசனுக்குச்சொல்-விருத்தம்

பனைமரம்போல்நீவந்து பலபலமொழியுரைத்தால
உனையொருபொருட்டாயெண்ணி யொடுங்கிநான்வருவதுண்டோ
இனியொருநிமிஷம்நீயிங்கிருந்தேயானலுன்னைச்
சனியனும்பிடித்தாற்போலே தணலிவந்திடச்செய்வேனே

(வசனம்) அடாவாடா யேமாநீ பனைமரம்போல் ஒருவனைவிழச் சாதிக்கப்பட்டவனை தெரிந்ததுதெரிந்தது நீ நல்லபனைமரம்போல்என்னெதிரே நின்றுக்கொண்டு வீண்பேச்சுபேசினல் உன்னையொருபொருட்டாயெண்ணிநான் வருவதாஎனவினையப்பித்தம்பிடித்து அலையுறுயபோபோசண்டா

இராசன்-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்

பித்தனென்றெனைச்சொல்லாநீ பித்தனைச்சேர்ந்ததாலே
பித்தமேபிடித்துநீயிப் பேர்க்கொத்தவார்த்தைதொன்னாய்

பித்தமுந்தெளியவுன்னைப், பிளந்திடுவேனிந்தப்
பித்தனைவிட்டுவாடா பேய்மதங்கொண்டவனே
(வசனம்) அடாவாடா மார்க்கண்டா நானு பித்தமபிடித்தலைகிறேன் நீ பித்தனைச் சேர்ந்திருக்கிறபடியினாலே, அந்தப்பித்தம் உன்னைப்பிடித்து நீ பித்தனைப்போலபேசுகிறாய் அந்தப்பித்தந்தெளிய அடித்தால் உனக்குப் புத்திவரும் பயந்துபேசுவாய் வீண்வேலை வைத்துக்கொள்ளாதே பேசாமல் அந்தப்பித்தனை விட்டுவாடா மார்க்கண்டா
மார்க்கண்டனுக்கும்-இராசனுக்கும்-தர்க்கம்-தரு
இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்,
மார்க்கண்டன்சொல்-தரு
மினத்தாதேமினுத்தாதே பெருக்கிடாமீதேறும்
பேச்சைவிட்டுவிடடா காலா
இராஜன்சொல்தரு
இணைத்துப்பேசுவதிந்த சிவன்வலுமையல்லவோ
க்ஷணத்திலறிவேனினி பாலா
மார்க்கண்டன்சொல்-தரு
குதித்தாலுமெதிர்த்தாலுங் குலைத்தாலும்நாயது
வேடியசிங்கமாகுமோ காலா
இராஜன்சொல்-தரு
கதைத்துப்பேசாதே மரநாயேயுனைவெல்ல
வகைதேடவேணுமோடா பாலா
மார்க்கண்டன்சொல்-தரு
ஓசந்தாலுமவளர்ந்தாலும் ஓடிமாமரந்தன்னில்
ஒளித்தாலும்யானைப் பூனையாகுமோகாலா
இராஜன்சொல்-தரு
வசந்தாயென்னடா அந்த வல்லாலதானெனக்கிடோ
வகைசெய்குவேனினி பாலா
மார்க்கண்டன்சொல்-தரு
இறந்தாலுமுயர்ந்தாலுந் திசைதிசையெங்குமோடி
சிட்டுப்பருந்தாகுமோ காலா
இராஜன்சொல்-தரு
உரந்தாயென்னடா அடா வுனையுஞ்சிவனையும்
ஒருகட்டாய்க்கட்டிவெல்லேன் பாலா
மார்க்கண்டன்சொல்-கொச்சகம்
எத்தனைநான்சொன்னாலு மென்னைவிடுவதில்லையென்று
பத்துவிதத்திலுமெத்த பராக்கிரமம்பொருந்தியேமன்

கர்த்தனேயுனைப்பாசக் கயிறுகொண்டென்னையுங்கட்டி
குத்திக்கொண்டுவா வென்று கொக்கரிக்கின்றான சிவனே

(வசனம்) அரகரா-அரகரா-அரகரா-அரகரா-திரிபுரமெரித்த யீசா அடி யேன்எமனுடனேஎங்ஙனம்வாதுபுரிவேன் என்னசொன்னபோதும் போ காமல்மேல்விழுந்துபிடிக்கவருகிறான என்னெஞ்சங்கலங்குது காத்தனே,

சிவன்-குண்டோதரனுக்குச்சொல்-கொச்சகம்

நெஞ்சங்கலங்கித்தவித்து நினைவழிந்துமதிமயங்கி
சஞ்சலமுற்றேதிகைத்துத் தத்தளிக்கிறான்பாலன்
நஞ்சிதகுண்டோதரனே எமனுடனேநீயெதிர்த்து
பஞ்சுகொட்டும்யாவனைபோற் பறக்கடிக்கச்செய்வாயே

(வசனம்)வாராயப்பா குண்டோதராநமதுபாலகனாகிய மார்க்கண்டன் எமனைப்பார்த்து தத்தளிக்கிறான் அந்தஎமனுடனேஎதிர்த்துபஞ்சுகொட் டும்பாவனைபோற் பறக்கடித்துப்பாலகனைக்காருமப்பா குண்டோதரா,

குண்டோதரன்-சிவனுக்குச்சொல்-கொச்சகம்

பாலகன்மேற்கிருபைவைத்து பட்சமுடன்பார்த்திருக்கும்
நீலகண்டரேயுமது நினைவின்படியேயானும்
காலனுடனெதிர்த்துநின்று கதித்ததெண்டினாலடித்து
ஓலமிட்டோடவும்விடுத்து வுமதுமைந்தனைக்காப்பேன்

(வசனம்) அரகரா திருக்கடையூரீசா மார்க்கண்டசகாயா உமதுநினைவி ன்படியே எமனுடனெதிர்த்து தெண்டிக்கினால்கொடுத்து மார்க்கண்டனைக் காக்கிறேன் சுவாமி,

மார்க்கண்டன்-குண்டோதரனுக்குச்சொல்விருத்தம்

காக்கிறேனெனவேயிந்தக் கடையூரினருகில்வந்து
தீர்க்கமாய்த்திறமுரைத்தசிரஞ்சீவிகுண்டோதராநீ
ஓர்க்கவேசொன்னவார்த்தை யேமனுங்கேட்டுயென்னைப்
பார்க்கிறானென்னசெய்வேன் பதமலர்சரணமையா

(வசனம்) சரணஞ்சரணம் சிரஞ்சீவியான குண்டோதரமூர்த்தியென்னை க்காக்கிறேனென்று நீர்சிவனுக்குசொன்னசொல்லிந்தயேமன்கேட்டு எ ன்னையுருட்டிப்பார்க்கிறான்கெர்ப்பங்கலங்குது என்னசெய்வேன்சுவாமி,

குண்டோதரன்-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்,

மைந்தனேமார்க்கண்டா நீமறலிக்குப்பயப்படாதே
எந்தன்பின்னாகநில்லுநீயெமனிடவலுமைதன்னை
இந்தநாழிகைக்குள்நானே யறிகிறேனுனைப்பிடிக்க
வந்தவன்பின்னிட்டோட வாட்டேன்வாட்டுவேனே

(வசனம்) கேளுமப்பா மார்க்கண்டா நீ எமனென்கிறலேசம் மனதில்
வைக்கவேண்டாம சிவபூசையிலிரு நான் எமனுடனெதிர்த்து தெண்டிக்
கிறைகொடுக்கிறேன் பயப்படாதிருமப்பாமார்க்கண்டசெல்வமோ

மார்க்கண்டன்-குண்டோதரனுக்குச்சொல்-விருத்தம

ஆலயத்தருகில்நின்று அன்புடனெனக்குரைக்கும்
பாலகுண்டோதராகேள் பயப்பட்டேஎமனைக்கண்டு
காலனைத்துரத்தியென்னைக் காத்திடேயாகில்இந்த
நீலகண்டையர்நீதா னிட்சயஞ்சரணமையா,

(வசனம்) சரணஞ்சரணம் சுவாமிக்குப் பக்தனானகுண்டோதரமூர்த்தி
யேகானே எமனுக்குமிகவும்பயந்திருக்கிறேன் நீ எமனைத்துரத்தி என்
னைக்காத்ததேயாமாகில் இந்தநீலகண்டையர் நீர் தானசுவாமி

குண்டோதரன்-இராசனுக்குச்சொல்-விருத்தம்

எவராலுமாகாதிந்த யீசனைக்கட்டுதற்கு
அவனியையாண்டத்தாலே யுங்காரமுண்டோயேமா
சிவனுக்குமன்பனான செல்வனோடெதிர்க்கலாமா
இவடத்தில்நிற்கவேண்டா மிவ்விடம்விட்டப்பாற்போடா

(வசனம்) ஆடாவடாயேமா எவராலுமாகாதே இந்தயீசனைக்கட்டுகிற
தற்கு உன்னாலேயாகுதா இவன் சிவனுக்கு அன்பனான செல்வனுச்சுதே
இவனுடனே எதிர்க்கலாகுமோ உனக்கென்ன புத்தியில்லையா இவ்விடம்
விட்டு அப்புறம்கடந்திடுமேமா

இராசன்-குண்டோதரனுக்குச்சொல்-விருத்தம்,

என்னைநீடெங்கிடென்று யியம்பற்குநீதானாரடா
உன்னைநான்கண்டுபோகவொக்குமோபள்ளாதான்
இந்நிமிஷத்திலிந்த யீசனையுமார்க்கண்டன்
தன்னையுங்காட்டாவிட்டாற் சண்டாளனல்லத்தானே

(வசனம்) பளாப்ளா அடா குண்டோதரா என்னைப்போகச்சொல்ல நீ
யார் அந்தயீசனென்றனார் எவனாலும் எனக்கென்ன உன்னைப்பார்த்தால் எ
ன் தொண்டையல்போல்காணுது நீ சொல்லலாவதேது நான்போக லாவ
தேது இதோ ஒருநிமைக்குள்ளே உன்னையும் அந்தசிவனையும் இந்தப்பய
லையும் எனது பாசத்தாற்கட்டிச் சூலத்தினாற்குத்திக்கொண்டு போகாவி
ட்டால் நான் சண்டாளனல்லடா குண்டோதரா

குண்டோதரனுக்கும்-இராசனுக்கும்-தர்க்கம்-கண்ணிகள்
இ-ம்-புர்நாகவராளி-ஆதிதாளம்

குண்டோதரன்-சொல்லல்

குத்திக்கொண்டுபோகுமெத்தக்கொழுத்தவனோ நீ
கோஷ்டமிட்டுவோடிடவே குதித்தவன்மார்குலால்

இராசன்சொல்லல்

பித்தனிடஞ்சேர்ந்திருந்த பேய்ப்பயலேபோடா-உனை
பிடித்துக்கட்டிக்கொண்டுபோவேன் பிழைத்தோடிப்போடா

குண்டோதரன்சொல்லல்

கட்டிக்கொண்டுபோவேனென்று கதையைச்சொல்லலாமோ-சுடு
காடுதேடிப்போய்விறகு கட்டவுன்னாலாமோ

இராசன்-சொல்லல்

மட்டியுடன்பேசுவது மானங்கெட்டபேச்சே-இப்போ
மற்றொன்றுமாகாதுவுன்னால் மாளச்சடலமாச்சே

குண்டோதரன்சொல்லல்

சடலமீதென்றுளறாதே சமர்த்திக்கேசொல்லாதேநீ
சண்டனென்றெனக்கென்னடா தாக்குவேன்பொல்லாது

இராசன்-சொல்லல்

பிடித்துன்னைக்கொண்டுபோய்ப்பெருங்கம்பத்திற்கட்டி-நான்
பேசுவதெல்லாமப்போது பேசுவன்பார்தட்டி

குண்டோதரன்சொல்லல்;

பேசமட்டுமுன்னைவிடுத்துப் பின்னிற்பதுவுமுண்டோ-நீ
பிரண்டோடும்படியடிக்கும்பிலத்தைப்பாரடாசண்டா

இராஜன்சொல்லல்

பாசமதைவீசியுன்னைப்பரமனையுஞ்சேராய்-அந்தப்
பாலன்மார்க்கண்டன்றனையும் பதைக்கக்கட்டினேன்பாராய்

மார்க்கண்டன்சொல்-கெண்டா

அபயமேமபயமித்த அண்டங்க[illegible]ங்கிச்சிநீ
விபரீதகாலம்போல வீசினு[illegible]னமபாசம்
சபலித்துப்போச்சுதெந்தன் சமர்த்துளபுத்தியெல்லாம்
பலமதுசெய்தாலத்தைப் பாலித்துக்காத்திடீரோ

(வசனம்) அரகரா-அரகரா-அரகரா-அரகரா-அபயம்-அபயம் - திருக்கடையூரீசா அடியேன் ஏதாகிலுங்குற்றஞ்செய்திருந்தால்பாலித்துக்காத்தருளும் ஈசனே,'

சிவன்-எமனுக்குச்சொல்-விருத்தம்

குடுகுடுவென்றுநார் கொக்கரித்[illegible]டம்வந்து
தடதடவென்றுபாலன் தானொடுக்கினதல்லாமல்
படபடவென்றுயென்னைப் பாசத்தாற்கட்டலாச்சே
கிடுகிடுவென்றுசண்டா கீழ்வுழவிதைத்தேன்கண்டாய்


யென


(வசனம்) சபாசடாஞமா னென்கிறபயமில்லாமல் இவிடம் தூதர்வந் துதிட்டவும்பாலனைநடுங்கச்செய்யவும் நீவந்துஎன்னைப்பாசத்தாலே கட் டவுமாச்சுதா சபாசடா புத்திவருகிமட்டும் இந்தப்பூமியில்தானே விழுந் து இடடாமடையா

மார்க்கண்டன்சொல்-தரு-இ-ர்-புன்னாகவராளி

போற்றிசங்காபோற்றிஅரகரா
போற்றிசிவசிவபோற்றினேன்
போற்றிமாமதிபுனைந்தவேணியா
போற்றிஅரகராபோற்றினேன்
போற்றிகடையூரில் வாழுமீசனே
போற்றிஅரகராபோற்றினேன்
போற்றிபாவவினைச்சூதினம்
போற்றிஅரகராபோற்றினேன்



சிவன்-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்

மனதிடங்கலங்கயெந்தன் மைந்தனேமார்க்கண்டாகேள்
என்திடமறிபவந்தியேமனே விரவுதைத்தேன
உனதிடமதினைத்தேற்றி யுறுதியாயினிமேலப்பா
இனிநடன்பூசைநீசெய் திருயென் றும்பதிஞருக

(வசனம்) அப்பாமதிகலக்கிகீன்ற மார்க்கண்டா உன்னுலேவந்த யேம னைவிழவுதைத்தேன் இனி உனக்கொருபயமுமில்லைதிடச்சித்தமாய் என் னும்பதினருக நம்மையேபூசைசெய்துக்கொண்டுசுகமாயிருமப்பா மார்க்க ண்டா,

பொது-விருத்தம்

ஏமன்மார்க்கண்டனுக்காக ஈசனார்பாதம்பட்டு
சோமகாசுரனைப்போல் துள்ளியேமண்ணில்விழ
சாமிநாதனைமார்க்கண்டன் சரணைப்பணிந்திருக்க
பூமிதேவதையாள்பாரம் பொறுக்காமற்புலம்புவாராள்.

கட்டியக்காரன்சொல்

அகோகேதப்படியென்றால் இப்படிக்குச்சிவபூசைசெய்யும்மார்க்கண் டனுக்காக யெமன்பூமியில் விழுந்திருக்க வெகுகாலம் இறப்பதில்லாமல் பிறப்பேமிகுதியாச்சுது அப்போது பூமிக்கு பளுவுகமந்துபூமிதேவிபுல ம்பிக்கொண்டு வருகிறவிதங்காண்க

பூமிதேவிசொல்கட்டளைக்கலிப்பா

தெய்வலோகத்தில் பாதாலலோகத்தில்
சீர்மையிருந்தமண்ணுலகத்தில்
வாதுசெய்யயேமன் கண்ணியிலையுங்காணேனும்
தேவர்மற்மமோ கர்மதீவினைகளோ
நீதிசொல்லியதென் றிசையாண்டுக்கொண்
டற்புதசந்திரவிற்பம்போல்வாழ்ந்தவன்
தேவர்க்கருள்செய்யுமீசனே
இந்ததிவினையாராலேவந்துதோன் றிற்றறிகிலேன்

(வசனம்) அரகரா என்கர்த்தனே இந்த ஏமன் ஆருக்கு என்ன குற்றஞ் செய்து இப்படிக்காணுனோன்யாதொன் றுமறிகிலேன்சுவாமி

பூமாதேவிசொல்-விருத்தம்-இ-ம்-கெண்டா

இதுயென்னவதிசயம்காணெப்பவுங்கண்டதில்லை
இத்திதிவசமோயிக்க யேமனுமண்ணில்விழ
இதனுலேபிறப்பிமிஞ்சி யிறப்பதில்லாமற்போச்சு
இதுயேதுசங்கராகாணெப்படிசுமப்பேனையா

(வசனம்) ஆ-ஆ, இதென்ன அதிசயம் இதென்னகாரணம் இப்படிக்குப்

பூமியில் எமன்விழவும் இறப்பில்லாமல் பிறப்பேமிஞ்சவும் அடியாளுக்கு ப்பாரமாகவுமாச்சு சங்கரா எப்படிச்சுமப்பது

பூமிதேவி-புலம்பல்-கண்ணிகள்-இ-ம-கண்டா-ஆதிதாளம்

என்னவிந்தையோமண்ணில் எமன்விழவந்தது
ஏதோவறிகிலேன் தெய்வமே
சங்காரவுன்செயலோ தாதாவுந்தன்செயலோ
தருமனிப்படியானான் சிவனே
பொக்கியிருந்தவென்னைப்புலம்பவோவைத்தீரா
போதுஞ்சுமையெனக்குச் சங்கரா
சண்டன்றனேயிப்படி தரையில்விழவுதைத்து
தள்ளிவிட்டவராரோ தெய்வமே
மொண்டிக்குடையோனல்லமுத்திக்குடையோனுச்சே
மூறியவடித்தாரோ சிவனே
ஆறாதுமெனக்கிப்போயடிந்ததுபாரமிப்போ
அடியாள்செய்குற்றமுண்டோ சங்கரா
ஏனேயிப்படிக்கிந்தயமனைத்தள்ளியென்னை
யேக்கமுற்றிடச்செய்தீர். சிவனே

நாரதர்வருகிற-பொது-விருத்தம்

வுலகெலாமதிசயிக்க வுமையவள் மனங்கலங்க
பலகலையுடுத்தப் பூமிப் பைங்கொடி வையமீதில்
கலகலென்றோசையிட்டுக் கதறிடுஞ்சத்தங்கேட்டு
கலமிலமதியவேண்டி நாரதர்வருகின்றாரே

கட்டியக்காரன்சொல்-வசனம்

அகோதெப்படியென்றால் இப்படியாக பூமிதேவியானவள்வையமீதில்நின்று புலம்புகின்ற சத்தத்தைக்கேட்டு வீணையில்வல்லவரான நாரதமகாமுனிவர் அவ்விடவருகிறவிதங்காண்க

நாரதர்வருகிற-தரு-இ-ம-தேசிகதோடி-ஆதிதாளம்,

பல்லவி

நாரதமாமுனிவந்தாரோ-நப-நாரதமாமுனி வந்தாரோ

அநுபல்லவி.

பாரிற்புகழும்பிரமன்பரிவுடனளித்திடும் (நாரத)

சரணங்கள்

பாதக்குறடிலங்கப் பரிவாய்ச்சடைதுலங்க
தேகதிருவிலங்கத் தேவர்கண்டுகலங்க(நாரத)

திருவீணையைப்பிடித்து இகழ்தந்திரம்படித்து
பொருமைக்காவியுடுத்து பூமிமாதைப்பிடித்து (நாரதர்)

தண்டுகரத்திற்கொண்டு சம்புமந்திரமுண்டு
உம்பரானோருந்தொண்டுவுவந்து செயதிடக்கண்டு (நாரதர்)

நாரதர்-பூமிதேவிக்குச்சொல்-விருத்தம்

வையகமீதில்வந்த மதியுள்ளபூமிமாதே
ஐயமிட்டலறியின்று வருமையாய்புலம்புகின்ற
தையலேநீயெனக்குச் சகலமுந்தெரியச்சொன்னால்
ஐயமுந்தீர்வதாக ஆலோசனைசொல்வேனே

(வசனம்) வாராய்பூமிமாதே ஒருக்காலத்திலு மில்லாமல்நீ வையகமீதில் வந்து மிகவும்வருத்தமாய்ப் புலம்புவதேது நீபுலம்பிய சத்தங்கேட்டு நானோடிவந்தேன் அப்படிப்பட்ட துயரமு னக்குவரவேண்டியதென்னஇதை யென்னுடனேசொன்னால் அந்த துயரம்நீங்கும்படியானவுபாயஞ் சொல் கிறேன் பூமாதேவி

பூமாதேவி-நாரதருக்குச்சொல்-விருத்தம்,

முனிவர்கள்வணங்கும்வேத முனியேநாரதரேகளீர்
அனியாயமாக்கயேமன் அலறியேமண்ணில்விழ
இனியாருமிறப்புமில்லா திருப்பதால்பூமிபாரம
தனியாகவெந்தனுக்குத் தவப்பதேப்ளுவதார்ச்சே

(வசனம்) கேளும்நாரதபகவானே எமனையாரோவுதைத்துப் பூமியிற்றள்ளிவிட்டார்கள் அவன் பூமியிலேவிழவே இறப்பில்லாமல் பிறப்பதிகமாயிற்று அதனாலேபூமிக்குப்பளுவேறி என்தோள்களிரண்டும் விட்டுப்போகலாயிற்று ஆகையால்நானென்னசெய்வேன் பாரம்பொறுக்க மாட்டாமல் வருந்தப்படுகிறேன் நாரதபகவானே

நாரதர்-பூமிதேவிக்குச்சொல்-விருத்தம்

நல்லதுபூமிதேவி நாதனைநினைந்துயிந்த
எல்லையில்புலம்பிநின்றா லெப்படியபயந்தானும்
சொல்லியபடிநீயந்த துளபத்தோன் றனைவணங்கி
மெல்லெனப்புலம்பிநின்றால் விபலங்குச்சொல்லிநிற்பார்

(வசனம்) கேளும்பூமிமாதே இதற்குசனைநோந்ததினால் எப்படி எமன் ஈசனுக்குப்பொல்லாத அநியாயஞ்செய்கிறான் ஆகையால் ஈசனைபேசிக்குற்றஞ்சொல்லவேண்டியதில்லை அவனைநொந்துக்கொள்ளவதிலும் பலனில்லை

இப்பவும் ஒருபாயம் அவர்மைத்துனராகியவிஷ்ணுவைவருந்தினால் அவரி சனுக்குச்சொல்லி எமனைபெழுப்பி உன்னைக்காப்பார் நான்போய் வருகி றேன் செலவுதருவாயம்மணி

பூமிதேவி-நாரதருக்குச்சொல்-வசனம்

அப்படியே போய்வாரும் நாரதமகாமுனிவரே.

பூமிதேவிசொல்-விருத்தம்

புத்தியில்மிகுந்தசீர்தன் புவிதனையாண்டிருந்த
உத்தமனானயம னுறங்கவும்நீதியுண்டோ
மத்திலுறங்கடைந்தவெண்ணெய் மாயனேயுந்தனுக்கு
குற்றமேதாகிற்செய்து கொடியபாதகனானேனே

(வ-ம்) அரிகரி வைகுந்தவாசா வெண்ணெயுண்டவாயனே மகாநீதியுட னே தென்றிசையாண்டிருந்த யெமன் உமக்கேதாகிலும் குற்றத்தைச்செ ய்து இப்படிக்கானானோமாயவனே

பூமிதேவி-புலம்பல்-கண்ணிகள்-இ-ம்-நவரோஸ்-அடதாளம்

ஐயனேவைகுந்தவாசா யாருடன்சொல்லுவேனிதை — திருமாலே
ஆருடன்சொல்லிநானினி ஆற்றுவாரோயென்றுயிர் — கரிமாலே
வையகமளந்தமாலே மாயவனேநின்செயலோ — திருமாலே
மெய்யவாஉன்செயலாகில் மர்மமாயிருந்திடாதே — கரிமாலே
பையவேயமனைக்கண்ணாற் பார்க்கவேபயமாகுதே — திருமாலே
பார்க்க[illegible]ப்பாதகத்தைவிதித்திட்ட — கரிமாலே
ஐயனேகிருபைவைத்[illegible]பரந்தீர்த்திரட்சியும் — திருமாலே
துயரந்தீர்க்குமாயனேதோற்றுவாயெந்தனுக்கிப்போ — கரிமாலே

பொது-விருத்தம்

கஞ்சனைவதைத்தவாமன் காசாம்பூமணிகாமன்
வஞ்சராவணனைமாய்த்திட்டவாழுங்கோதண்டபாணி
அஞ்சிடாபூமிதேவியலறிடுஞ்சத்தங்கேட்டு
பஞ்சவர்தனைக்காத்த பாரளந்தோரும்வாரார்

கட்டியக்காரன்சொல்-வசனம்

ஆகோதெப்படியென்றால் பூமாதேவி மகாவிஷ்ணுவைநோக்கிப்புல ம்பிக்கொண்டிருக்கும்போது வைகுந்தத்தைவிட்டுக்கோபாலகிருஷ்ணர் வருகிறவிதங்காண்க

விஷ்ணுவருகி[illegible]-தரு-இ-ம்-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்

பல்லவி

[illegible]ரியணி[illegible]கொள் — சயினீந்தஜெககர்த்தர்
அரிநாராயணர்வந்தார் — கர்த்தர்

68

அநுபல்லவி
கலையுற்றமதிவைத்த கடிலத்தார்சொலவிட்ட
கனமிகுந்த விலாசமாமொழி
மனதுவொண்டு விநோதமாகவே அலையிற்
சரணங்கள்
சலசத்திநின்ளிபெற்றதிருவத்திதிதன்பச்சை
இலர்தயநுதவிரி தரித்து-இந்த
சரிலச்சாமிட்டிழைத்த அழகுற்றபுஜகீர்த்தி
திடங்தோளிலே யணிந்து-நல்ல
தவனக்குடைகவிக் கெருடக்கொடிப்பறக்க
திவில்பம்பைமயொடுசங்க மதிகுஞ்சல்லரிதுக்கம்
சதிர்பூமியண்நலாடி மதிகடையூரானைத்தேடி அலையிற்
பூமிதேவி-விஷ்ணுவுக்குச்சொல்-கவி
அடியனைக்காக்குமையனேசரணம்
படிதனையளந்தபரந்தாமாசரணம்
வடிவுறுலட்சமிமருனுசரணம்
முடிமன்னர்வணக்குமூர்த்தியேசரணம்
விஷ்ணு-பூமிதேவிக்குச்சொல்-விருத்தம்
என்னகாரணத்தினாலே மின்னரியிப்போர்கொத்த
துன்கத்திலாழ்ந்துமிக்கத் துயரமாய்க்க[illegible]
கன்னியிற்பட்டுபட்சி கலங்கிடும்[illegible]போல
துன்னியவித்தையென்முன சொல்லுவாய்பூமிமாதே
(வசனம்) வாராய்பூமிமாதே நீயேது காரணத்தினாலே இப்போர்ப்பட்ட
துக்குற்று கன்னிக்குளகப்பட்ட பட்சியேபோல பாதவித்துக்கண்ணீர்சோர
புலம்பிபழுதிருய் சொல்லுவாய்பூமிமாதே
பூமிதேவி-விஷ்ணுவுக்குச்சொல்-விருத்தம்,
ஐயனேயென்னசெய்வே னபூசியசக்குசக்ரக்
கையனேயெமனையாரோ கலங்கிடவுதைத்துவிட்டார்
துய்யனேபூமிமீதிற் சுருண்டுமேவிழுந்தான்பாரம்
ஐயையோசுமைதாளாம லழுகிறேன்காத்திடுவோ
(வசனம்) கேளாய் சக்குசக்கரகையனே எமனையாரோ பூமியிலுதைத்
துத்தள்ளிவிட்டார் அவன் துடிதுடித்து அங்[illegible] புரண்டுகிடக்கிறதினு
ல் சுமைதாளாமல் இப்படிப்பாதவிக்கிறேன் என்னைக்காக்கவேணும் வை
குந்தவாசரே
விஷ்ணு-பூமிதேவிக்குச்சொல்-[illegible]சகம்
தவமிருகண்டர்க்குச் சுதனில்லாதத்த[illegible]
சங்கரனைநோக்கியவன் றவம்புரிந்தான்

அவரும்வந்தவயதுப்திறுருய்ப்பிள்ளை
யளித்திடவாயுளதுமுடிந்ததெனப்பிடிக்க
விபரூடனமனுஞ்சென்றுன் பாலன்றுனும்
வீசனைப்பின்பற்றிடவும்பாசம்வீச
சிவனுக்கோபித்துதைக்க யேவன்வீழ்ந்த
செய்விதுநீசெல்லவர்பால்நானும்வாரேன்

(வசனம்) கேளாய் பூமிமாதே மிருகண்டன்பிள்ளையில்லாமல் சங்கரனை நோக்கித்தவம்புரிந்து பதினறுவயதுள்ள ஒருபுத்திரனைத்தைப்பெற்றுன் அப்புத்திரனுக்கு வயதாயிற்றென்று சங்கரனைத்துதித்திருக்குஞ் சமயத்தில் எமனபுறப்பட்டு பிடிக்கச்செல்லுகையில் அந்தமார்க்கண்டன் அச்சிவன்பின்போய்க் கட்டிக்கொள்ளவே பாசம் இருவர்மீதிலும்வீசவே சிவனுக்குக்கோபம்பிறந்து எமனையுதைத்தார் அவன்பூமியில் விழுந்தான் ஆகையால்நீ அந்தச்சிவனிடம்போய்ச்சேரு நானும்வருகிறேன்பூமிமாதே. (அப்படியே செய்கிறேன்வைகுந்தபதியே)

பூமிதேவி-மார்க்கண்டனுக்குச்சொல்விருத்தம்

அப்பனேமார்க்கண்டாநீ அறிவுள்ளமைந்தனுமோ
இப்படியேமன்வீழ்ந்து இருப்பதுசரிதானோதான்
எப்படிப்பார்த்தாலு [illegible] சங்கரர்க்கு
நற்படியாகச்சொல்லி [illegible] மனை நீயெழுப்புவாயே

(வசனம்) அப்பாமார்க்கண்டசெல்வமே இப்படிக்குஎமன்வெகுநாளாய் பூமியில்விழுந்திருப்பது உனக்குச்சரிதானு இதனாலே பிறப்போயொழிய இறப்பில்லாமற்போச்சுதே நானோந்தனைரோக்குப் பொறுமைச் சுமந்துகொண்டு வருந்திப்பட்டிருப்பேன் எப்படியாகிலும் ஈசருக்குச்சொல்லி எமனையெழுப்பிவிடப்பார்க்கவேணுமப்பாமார்க்கண்டசெல்வமே,

மார்க்கண்டன்-பூமிதேவிக்குச்சொல்-விருத்தம்,

தாயேயுன்வாய்மொழிக்குத்தடையுண்டோவடியேன்மெய்யே
தாயேயிச்சண்டன்செய்திச்சியதுதெரிந்திருப்பாய்
தாயேகாணெப்படிக்குச் சங்கரர்தனக்குச்சொல்வேன்
தாயேயிப்பூ [illegible] தன் நன்னைநீவணங்குவாயே

(வசனம்) கேளுந்தாயே [illegible] ந்தயெமன்விழுந்து வெகுநாளாயிற்று நீயும் வெகுநாளாய்த்தான் [illegible] கப்படுகிறுய் இந்தயெமன் செய்திருக்கப் பட்ட [illegible] வயர்த [illegible] ன்மூந்தியெப்படிசொல்லுவேன்நீ ஈசனைமிக வு [illegible] வருந்தினுல் நானுஞ்சொல்லி யெமனையெழுப்பிவிடுகிறேனம்மா,

பூமிதேவிசொல்-கவி

நேசனேசரணம் விஸ்வாசனேசரணங்கை
லாசனேசரணம் லீசனேசரணம்

பூமிதேவி-புலம்பல்-கரு-இ-ம-நீலாம்புரி-ஆதிதாளம்

மார்க்கண்டர்க்காகவே மறலிமேற்கோபித்து
 மண்மீதில்விழச்செயதீர் — சிவனே
ஏர்க்காதுயென்னை நீ சிப்படிபார்த்து
 யேழைக்கிதங்குமெங்கன் — சிவனே
கருங்குருவிக்கன்று காட்சிகொடுத்ததுபோல்
 கர்த்தனேயெனைக்காரும் — சிவனே
பெருங்கிடாமீதேறும் பேயனிப்படிசெய்தால்
 பெண்ணுள்நானென்னசெய்வேனே — சிவனே
பெண்ணுக்கிதங்கிய பேதமைதீராமே
 பேசாதிருப்பதென்ன — சிவனே
மண்ணுக்குள்விழுந்திடு மறலினையெழுப்பியென
 வலதுபளுவைதீர்ப்பீர் — சிவனே

பூமிதேவிசொல்-விருத்தம்

பூமியைச்சுமக்கமாட்டேன் புனிதனேசரணமையா
காமனையெரித்தகண்ணு கடவுளேதயவுவைத்து
யெமனையெழுப்புமையா யீசனேகையிலைவாசா
தாமசஞ்செய்தால்பாரந்தாங்கவுமாட்டேனையா

(வசனம்) அரகரா காமனையெரித்தகண்ணு மார்க்கண்டசகாயாவென்னது [illegible]தோள்கள் இரண்டுவிட்டுப்போகுது இன்னம்தாமதஞ்செய்தால் இந்தப் பூமியைச்சுமக்க என்னாலே ஆகிறதில்லை சீக்கிரத்தில்யமனையெழுப்பியெ ன்பாரந்தீருங்கர்த்தனே

சிவன்-பூமிதேவிக்குச்சொல்-விருத்தம்

இரங்கிடும்பூமிமாதே யின்னமும்வலுமைதாரோன்
தரங்கவேகுழும்பாரிற் சண்டனேவேண்டாங்கண்டால்
வரங்களுமதிகந்தாரோன் மனஞ்சலியாதிருந்து
பெருங்கருணைகளைப்பெற்று பெருக்கமாய்வாழ்ந்திடாயே

(வசனம்) வாராய் பூமிமாதேயிந்தசண்டனே வுலகத்திலாகாது உனக்கு வேணுமென்றால் இந்தபாரஞ்சுமக்க இன்னம்வலு[illegible]யைக் கொடுத்தேன் மனஞ்சலியாதிருமம்மா பூமிமாதே

பூமிதேவி-சிவனுக்குச்சொல்-[விருத்]தம்

தோணுதபுத்தியாலே துரிதமாயோ[illegible]வந்து
வீணுகவுதையும்பட்டு வெட்கமும்கெட்டேன்தேவா

வாணுனென்றிடைடத்தை வருகாதுயினிமேற்பாரீர்
காணுதுகண்டாப்போலே காலனையெழுப்பிடீரோ

(வசனம்) சுவாமி தேவரீர்சொல்லவந்தது மெய்யே யிந்தயமனுக்காக வல்லவேள்நான்வந்தது இல்லாவிடில் நான்வந்து உம்மை வருத்தப்படுத்த வேண்டிய காரணமில்லையே இப்பவும் என்பாரம் நான் தீர்த்துக் கொள்வது சரியாயிராது அது நீதியல்ல தர்மமுமல்ல (ஒருவரைப்பற்றி [illegible]த்தி ரென்பது) சாஸ்திரம் சுவாமிக்கு இந்தசண்டனை என்னகுற்றஞ்செய்திருந்தபோதிலும் அடியாளைப்பற்றி மனம்பொறுத்து யேமனையெழுப்பி என்னைரட்சியுஞ்சுவாமி

மஹாவிஷ்ணு-சிவனுக்குச்சொல்-விருத்தம்

மான்மழுகுலங்கொண்ட [illegible]யேசனேபூமாதேவி
தானுமேநெடுநாளாகச் ச[illegible]டன்பாரத்தைத்தாங்கி
யேனழுகிருள்நமக்கு யிழிவா[illegible]கும்வனையிப்போ
காணமாயெழுப்பிநல்ல கட்[illegible]ளையிட்டனுப்புவீரோ

(வசனம்) கேளுங்கயிலாசபதி இந்தப்பூமிதேவியானவள்ளமனின்றுனைத்தாங்காமல் வருத்தப்படுகிறது ந[illegible]குப்பழியாகும் அவனையெழுப்பி அவ[illegible]க்குநல்ல புத்திசொல்லி அனுப்பி இந்தப்பூமிதேவியினுடைய பாரத்தையுந்தீ[illegible]ப்பீர் கயிலாயபதி

சிவன்-மா[illegible]ண்டனுக்குச்சொல்-விருத்தம்

அப்பனேமார்க்கண்டாகேள் அருமையாய்ப்பூமாதேவி
செப்பினமொழிகேட்டாயா செல்வனேயுந்தனுக்கு
ஒப்பிதமாயிருந்தா லுயர்வதைசெய்யுகின்ற
தப்பிதகமனெழுந்து தான்வாசசெய்குவேனே

(வசனம்) வாராயப்பா மார்க்கண்[illegible] இந்த பூமிதேவிவந்து இங்கேவந்து சொன்னசொல்லும் விஷ்ணுவானவர் சொன்னதுங்கேட்டாயா இதுவுனக்குச் சரியாயிருந்து உத்தரவுகொடுத்தால் எமனையெழுப்பி [illegible]னப்பா மார்க்கண்டா.

மார்க்கண்டன்-சிவனுக்குச்சொல்-விருத்தம்

அந்தமாமுகனைப்பெற்ற ஐயனேதேவருக்கும்
சித்த[illegible]படியோ பூமாதேவியுழேளகடிவந்து
மெத்தவுமவ[illegible]கின்றாள் மெய்யனேயேமன்செய்த
குற்றத்தை[illegible]வேண்டாங் கோணதக்காயெழுப்பிடீரோ

(வசனம்) சுவாமி அ[illegible]ரர்விட்டாலும் இந்த பூமாதேவியைப் பார்க்கவேணும் மேலும் பெண்சீவனுகையால் எமனை எழுப்பி இந்த அம்மாளுடைய பாரந்தீர்க்கவேணும் கீர்த்தனை ஆகா அகா,

சிவன்-யமனுக்குச்சொல்-கவி

கெட்டபுத்[illegible]த்தவனே கிடாவிலேறிவந்தவனே
துஷ்புத்தியைவிட்டுவிட்டு சுகமாயெழுந்துவருவாயே

எமனெழுந்து-சிவனைத்தோத்திரஞ்செய்கிற-தரு
இ-ம் புன்னாகவராளி--அடதாளம-

பல்லவி

ஆண்டுகொண்டருளே-உன்திருவடி
வேண்டிநின்றேனே

அநுபல்லவி.

தாண்டவபொரு ளாண்டவனும்நி
தோண்டவருமதி மீண்டநாயகர் (ஆண்டு)

சரணங்க[illegible]

ஆத்திசூடிய [illegible]த்தியசங்கரா
போற்றினேனெனைந் [illegible]காத்தருளுமினி(ஆண்டு)
பூகனாதனே யேதுசெயகிலென்
மீதிலருள்புரி ஆதிமூலமே(ஆண்டு)
நாகபூஷண லோகயீசனே
தோள்கையையிடப் [illegible]பாகம்வைத்தவ[illegible](ஆண்டு)

எமன்-சிவனுக்குச்சொல்-கொச்சகம்

சத்தியைச்சுமந்திருக்குஞ் சங்கரனேநானுமிப்போ
பத்தியில்லாச்செய்தகுற்றம் பொறுத்[illegible]ருளுமெய்ப்பொருளே
எத்தேசகாலமும்போ லிருந்தரசாள்வ[illegible]ற்றத
கர்த்தனேகிருபைபுரி கைலாசவாசனே

(வ-ம்) அரகராமயேசா அமு[illegible]ண்டீசா திருக்கடையூர்நாதா செய மார்க்கண்டர்க்குபகாரா அடியேன் புத்தியில்லாமற் செய்தகுற்றம்பொறுத்து எப்போதும்போல அரசுக்குச்செலவுதரவேணுங்கர்த்தனே

சிவன்-எமனுக்குச்சொல்-கொச்சகம்,

அண்ணலெனப்பணிதவனே யாகாரங்கொண்டவனே
எண்ணுந்துதிப்போனே யீசனடியாரையினி
திண்ணமாயத்தீண்டாதே தென்திசைக்கே[illegible]
நண்ணியுன்னுக்கினையை நடத்திக்கொள்[illegible]ய்மனே

(வசனம்) அடாவாடாயேமா உன்னைக்கொஞ்சத்[illegible]லெழுப்பப்போகிற தில்லை இந்தப்பூமிதேவிக்காக யெழுப்பினேன் இனிமேல் நீசிவனடியார் களைத்தீண்டாமல் உன் அதிகாரப்படிக்குப் புத்தியுண்டாயிரு போய்வருவாய எமா,

பூமிதேவி சிவனுக்குச்சொல்-பாணி

கடையூர்தனிலேயமர்ந்திருக்கும் கயிலைவாச சிவ்வாசா
அடியாள்தனக்கென்னபுத்தி அருளுமருளுஞ்சங்கரனே

சிவன்-பூமிதேவிக்குச்சொல்-பாணி

சங்கரனேயென நனோடிச் சரணஞ்செயதேவரூமாதே
சிங்காரத்துடனீயோயுன் திருமாளிகைக்குள்வாழுவாயே

மார்க்கண்டன்சொல்-வசனம்.

அரகரா அரகரா அரகரா அரகரா
அரகரா அரகரா அரகரா அரகரா

எமன்-கட்டியக்காரனுக்குச்சொல்-விருத்தம்.

ஓடியெடுத்துமெள்ள வெதுக்கியேகொக்கரிக்கும்
ஆடாகட்டியரோநாம் அறுக்குவந்தோமென்று
வீருடனேடியங்க வீரபாவுக்குச்சொல்லி
சீருடன்மேளத்தோடிங்கு அழைத்துவாரீர்

(வ-ம்) ஆடடா அடாகாலகட்டியரோ நாமெப்போதும்போல் அறுக்குவந்தோமென்று இந்த அண்டமெல்லாம் அறியும்படி பறையலற விக்கவேணும் வீரபாகுவை அழைத்துவாருங்கள்,

கட்டியக்காரன்-வீரபாகுவுக்குச்சொல்-விருத்தம்

சரியாகச்செல்லுமெமன் ருமேனவந்தாரசுக்கு
வீரபாகுவேநீதான மேளத்தோடுவருவாயே

வீரபாகுவருகிறதெம்மாங்கு-தரு

செல்லிபுளிச்சக்கண்ணி-நல்ல-சிங்காரமானதோர்பூனைக்கண்ணி-அடி-பல்லேயிளிச்சக்கண்ணி-எந்தன பட்சத்துக்கானதோர் இல்லிக்கண்ணி எனதெந்தினனே தெனனே

குறைமூலைச்சியரோ-நல்ல-சுண்டுமிகுந்ததலைச்சியரோ-சீறு நுனைச்சியரோ-எந்தன்-சிநகத்துக்கான தலைச்சியரோ-தெந்தினனேதெனனே.நாரைகழுத்தியரோ-சொரி-நாய்போலைப்புழுத்தவளே ஊரைப்பழித்தவளே மீட்டு உள்ளசோல் திண்ணுகொழுத்தவளே,தெந்தினனே தெனனே,

அஞ்சாதொடப்புக்கட்டை-நல்ல-அழகாகவந்த வொதியங் கட்டை புஞ்சிபிடித்த ...கக்குப்போனகாலம்மதுக்கு நாரக்கட்டை தெந்தினனே தெனனே

கோடுவேந்தடிவாயிவந்தன் கொங்கையிரண்டும்பஞ்சாகி
தேடுகிறயபோடிசம்மா இங்கேக்காதேநீவாபெண்ணாயி (தெ)
சொட்டைவிழுந்தழுகி உந்தன தேகளுக்கின் ...தெம்பெரிசாக்கி
கொட்டுமேளமாகவெங்குங் கூச்சலிடுகுதுவறபோக்கி

வண்ணான்வீட்டுக்கழுதைநீ வஞ்ச[illegible]செய்தமப்பொழுதே
விண்ணாணமிட்டழுகை என்னை விட்டுப்போவதுண்டோ யிப்பொழுதே
தெந்தினானே-தென்னானே

பொக்கெனச்சொல்வாண்டி உந்தன் புருஷனெங்கே விட்டுப் போனான்
டி-பக்குவமிதல்லண்டி உன்னைப் பார்த்துப்பொடியவன போட்டாண்டி
தெந்தினானே-தென்னானே,

[illegible]துவும்-வீரபாகுசொல்-தரு

ஆண்டைகளேயெனதுமிக வரிதானகுதைத்தொழில்கேளாண்டே
நீண்டதோண்டியெடுப்பேன் அந்நேரத்தில்வரும்பேயைப் பிடித்தடிப்
பேன்,வேண்டும்விருதுதரிப்பேன் வெகு வேடிக்கைகயாகவேநடைநடைப்
பேன்-மாண்டபிணத்தையெடுப்பேன் தலைவகையாகவேயிடங் கொடுப்
[பேன்
ஆண்டைக[illegible]

எங்கும்பறையறைவேன்மிக்க பலரு[illegible]முறைமுறை தெரிவேன்
சிங்காரபதம்புரிவேன்கொட்டி ய[illegible]முறைதெரிவேன்
சுக்காகநான்திரிவேன்எந்தன்சுற்றத்தார்[illegible]ளாநான்குறையேன்
மங்களமெடுத்தெரிவேன் ஆண்டை[illegible]கைவகையாக்கிடங்கொடும்பேன்
ஆண்டைகளே

வீரபாகுசொல்-விருத்தம்

தும்புநேனடியென்னாண்டே தாரா[illegible]ராக்ககிபா ஆண்[illegible]
தும்புநேனடியேன்வீர தோட்டிநான்மேளக்கோடு
தும்புநேனையழைத்ததேனோயாயேமராசே
தும்புநேன்சொல்லுஞ்சுவாமி சொற்படிசெய்குவேனே

(வசனம்) சாமிசாமி தும்புநேன என்னையழைத்தகாரியம் அடியேனு
க்குச்சொல்லவேணு[illegible]ராசபரமேஸ்வரா

[illegible]இராஜனுக்குச்சொல்-பரணி

சண்டாசாணமடேதவரிருத்தாரபடியேமேளமாட்டிக்
கொண்டேவீரபாகிந்த கொலுமுன்வந்தான்மன்னவனே

இராஜன்-கட்டியக்காரனுக்குச்சொல்-விருத்தம்,

கொலுவினிலெச்சரித்துக்கொண்டுநில்கட்டியமோகேள்
வலுமையாய்ப்பாசனுகுழ மசாணம[illegible]ருக்கும்
தலைமையாய்வீரபாகு தனக்குநானைநதென்று
சொல்லெங்கும்பறையறைக்கத்துரிதமாய்வரச்சொல்வீரோ

(வசனம்) அடடா அடாகொலுமுன்னையெச்சரிக்கும கட்டியக்காரனே
வந்தவீரபாகுவுக்குநானெப்போதும்போல அரசுக்குவந்தேனென்று சொ

ல்லி இந்த அண்டரண்டநவகண்டங்களிலுமுண்டாகிய எண்பத்துநான்கு நூறாயிரஞ் சீவராசிகளும் அ[illegible]யத்தக்கதாகபறையறைவித்து வரச்சொல்லுங்களப்பா,

கட்டியக்காரன்-வீரபாகுவுக்குச்சொல்-விருத்தம்

கொட்டுமேளத்தைமாட்டிக் கொண்டுவந்தவீரபாகு
கட்டளைசொல்வேனத்தைக் காதுறக்கேளடாநீ

கட்டியக்காரன்-இராசனுக்குச்[illegible]-கவி

திட்டமாய்க்காலனேதென் றிசையாளவந்தானென்று
பட்டணமெங்குமோடிப் பறையறைவித்துவாராய்

(வசனம்) ஆரடா அடா வீரபாகு எப்போதும்போல முன்னுண்ட வேமுன தென்றிசையாளவந்தானென[illegible] அண்டரண்டநவகண்டங்களிலுண்டான எறும்புகடை எண்பத்துநான்கு நூறுயிரம்சீவராசிகளுங்கேட்டு அதிசயப்படும்படியாய்[illegible]றைவித்து அதிசீக்கிரத்தில்வாடா வீரபாகுவே

வீரபாகு[illegible]டியனுக்குச்சொல்-கவி.

அண்டமுங்கேட்க அவனியுங்கேட்க
தண்கடலொலிபோற் சாற்றுவேன்பறையை

தோட்டி-பறைகொட்டுகிற-தரு-தெம்மாங்கு

கேட்டீரோ-கேட்[illegible]ரோ-கேளுங்கள்-கேளுங்கள்

குலுகுலுகுலு சில்லுகிட்டாங் ஆங்கடிசில்லாம
மின்னுண்டிருந்தயெமன் [illegible]முத்திபெற்றுவந்தானென்று
மூட்டுப்பூச்சியறியப்பறை[illegible]பட்டுவரச்சொன்னனே
குலுகுலுகுலு-சில்லுகிட்டாங்-ஆங்க[illegible]சில்லாம்
இல்லாதிருந்தயேமனெழுந்தோடிவந்[illegible]னென்று
எறும்புமறியப்பறைவிரும்பிடச்சொன்னனே
குலுகுலுகுலு-சில்லுகிட்டாங் ஆங்கடிசில்லாம்
ஒப்பாதபிழைசெய்து [illegible]தைபட்டுவந்தானென்று
ஊராறியப்பறை கூ[illegible]வரச்சொன்னனே!
குலுகுலுகுலு-[illegible]ல்லுகிட்டாங ஆங்கடிசில்லாம்

[illegible]தாட்டிசொல்-கவி

மகாராஜராசே மட்[illegible]ல்லாப்பறையைக்
சகலருமறியச் சாத்திவந்தேனே

(வ-ம்) சாமி அப்படிக்கே சகலருமறிய பறையறைவித்து வந்தேன் சுவாமி,

72

கட்டியக்காரன்-இராயனுக்குச்சொல்-கவி

துரைமகபதியே சொன்னசொற்படிக்கே
பறையனறைவித்துப் பறையனும்வந்தான்

(வசனம்) சாணஞ்சரணம் தென்திசைக்கதிபனென் எமதர்மராசனே அப்படியேதோட்டி பறையனறைவித்துவந்து நின்றுனையாமகாராசனே

இராசன்-கட்டியனுக்குச்சொல்-கவி,

கேட்டுபோட்டான் கெடியசேவகரே
தோட்டியைப்போகச் சொல்லிவிடுவீரோ

கட்டியன்-வீரபாகுவுக்குச்சொல்-கவி

பணிந்திடும்வீரபாகுவேகேளாய்
தணிந்திடும்சுடலை தனக்குநீபோவாய்

(வசனம்) ஆரடா அடா வீரபாகுவே மகாராஜர் உன்னைச் சுடலைக்குப் போகும்படியாய்ச்செலவுகொடுத்தார் போய்வாடா வீரபாகுவே

எமதர்மராசன் கொலுவிருந்துகடவுளைத்துதிசெய்கிற
விருக்தம்

தர்மமேதர்மமிக்த தாரணிதழைக்கவேணும்
தர்மரும்மாரிபெய்து சதாகாலம்வாழ்கவேணு
தர்மமாயெனதுசெங்கோல் தாழ்வில்லாதிருக்கவேணும்
தர்மமேபெருகவேணும் சங்கராபோற்றிபோற்றி

மங்களம்-விருத்தம்

கதியாகுந்தேவர்இதேவருக்கும்
கலைமகட்குமிருவருக்குங்கற்பை
விதியாகாச்குஞானச்சதிர்தனக்கும்
விளக்குமார்க்கண்டருக்குமேன்மையான்
மதியாருமகலைக்கியாணமுததிராகூநாசாலை
வழுத்துமச்சுக்கூடமும்
கதியாகவெங்காளுந்தழைத்துவாழ்க
நிலைமையுடனமங்களமும்கிகழ்த்துவோமே

தரு-இம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்
பல்லவி

மங்களம்-ஜெய-மங்களம்-சுபமங்களம்-மங்களம்

அநுபல்லவி.

மங்களம்விநாயகர்க்கும் வாழும்வேலவர்க்கும்
வாலூர்கதிமதிக்கும் வளஞ்சேர்கலைமகட்கும்

சரணங்கள்

சந்திரசேகரனுக்குஞ் சத்திபராபரைக்கும்
உந்திபூத்தவனுக்கும் ஒளிருமிலட்சுமிக்கும
ஓங்குமாமறையுற்ற வனுக்கும்
பாங்கினைச்சேரிந்தி ரனுக்கும்(மங்கல)

ஆசைதனைவெறுத்த அளவில்லாமுனிவர்க்கும்
பூசைமிகவெங்கும்ஓங்கு மிருகண்டர்க்கும்
ஒப்பில்லாஞானச் சதிராட்கும்
பொற்பார்திமார்க் கண்டர்க்கும்(மங்கள

சீராருங்குப்பு சாமிக்கும்
செயமாய் லட்சுமணனுக்கும்
நன்மையாய் வாசித்தவர்க்கும்
செம்மையாகக் கேட்டவர்க்கும்(மங்கள)

வாழி விருத்தம்.

சந்திரசூரியர்கள் சதுமறையும்வாழி
சகலதேவர்கள்வாழி பக்தோர்வாழி
மந்திரமார்க்கண்டன்விலாசமவாழி
மங்களமாஞ்செங்கோலும்வாழி
விந்தைசேருலகத்தோரும்வாழி
மெய்யாகவச்சடித்தோனும்வாழி
அந்தமுடன் ஆகாயப்பூமியும்
அதிலுள்ளகலைக்கியானமுத்திராக்ஷம்வாழி

மார்க்கண்டேயர்விலாசம்

முற்றிற்று.

—*—



